இராசேந்திரசோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்



ச. கிருஷ்ணமூர்த்தி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்

ச. கிருஷ்ணமூர்த்தி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Irācentira cōl̲an̲ veḷiyitta Ecālam ceppēṭukaḷ
Author	:	Mr. S. Krishnamoorthy M.A. (Tamil), M.A. (History), B.Ed., Dip. in Epigraphy Archaeological Officer (Retd.) State Archaeology Tamil Nadu Government Chennai
General Editor	:	Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113 Ph: 22542992
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113 Ph: 22542992
Publication No.	:	673
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	x + 118
No. of Copies	:	1200
Price	:	Rs.55/- (Rupees Fifty Five only)
Printed by	:	United Bind Graphics 43/95, Millers Road, Kilpauk Chennai - 600 010.
Subject	:	Epigraphical Study of Esalam Copper Plates

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113.

அணிந்துரை

இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் 11-8-1987இல் கண்டறியப்பட்டது. எனினும் செப்பேடுகள் முதலாம் இராசேந்திர சோழனின் போர் வெற்றிகளையும் சொல்கிறது. திருவிராமீஸ்வரம் என அழைக்கப்படும் எசாலம் பழைய சிவன் கோயிலைக் கொண்டுள்ள ஒரு கிராமம் ஆகும்.

எசாலம் செப்பேடுகள் 15 இதழ்களுடன் ஒரு செப்பு வளையத்தில் கோக்கப்பட்டுள்ளன. வளையத்தில் சோழ மன்னனின் புலிமுத்திரையுடன் இரு மீன்கள், ஒரு வில், ஒரு பன்றி, குறியீடுள்ள சாமரம், வெண்கொற்றக் குடை, சக்கரம் போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன- எனத் தெளிவாக நம் கண் முன் அச்செப்பேடுகளைக் காணுமாறு படம் பிடித்துக்காட்டி விளக்குகிறார் நூலாசிரியர்.

செப்பேட்டின் நீளம் 34 செ.மீ. அகலம் 16.5 செ.மீ. வளையம் மட்டும் 34 செ.மீ. விட்டமும் 2 செ.மீ. பருமனும் கொண்டுள்ளன. முத்திரையின் விட்டம் மட்டும் 13.5 செ.மீ.

இந்தச் செப்பேட்டில் வடமொழிப்பகுதி முதல் நான்கு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. கிரந்த நிலையில் தெளிவாக வாசிக்கும் நிலையில் இது வெட்டப்பட்டுள்ளது. எஞ்சிய 11 ஏடுகளில் தமிழ் எழுத்துக்கள் தெளிவாக வாசிக்கும் அளவு பொறிக்கப்பட்டுள்ளன. வடமொழிப் பகுதி சுலோகங்களாக அமையத் தமிழ் எழுத்துக்கள் உரைநடை வடிவில் எழுதப்பட்டுள்ளன.

செப்பேடு வெட்டிய ஆசிரியர் பெயர், வடமொழியில் எழுதியுள்ளவர் பெயர், 35 சுலோகங்களும் அவை கொண்டுள்ள பா வகைகளான 1. ஸ்ரக்தரா 2. வஸந்ததிலகா 3. ஸ்ரக்தரா 4. சார்தூல விக்ரீடிதம் 5. மாலினீ 6. சார்தூல விக்ரீடிதம் போன்றவை முறையே விளக்கப்பட்டுள்ளன.

கோயிலுக்கு அளித்த நிலத்தின் நீள அளவுகள் துல்லியமாகச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தோராயமாகக் குறிப்பிட்டால் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

தானம் அளித்த நிலத்தின் மொத்த அளவை நூற்றொன்பதே முக்காலே அரை மா முந்திரிகைக் கீழ் இரண்டுமா முக்காணி முந்திரிகைக்கீழ் ஒன்பதின் மாக்காணி அரைக்காணியாகும். சுமாராகக் கூறுவது என்றால் 109 வேலி பத்தரை மா ஆகும்.

புன்செய் நிலங்கள், நீர்நிலைகள், முற்றமும், நந்தவனமும், அய்யனார்கோயில், கம்மாளச் சேரி, பறைச்சேரி, சுடுகாடு, கன்று மேய்பாழ்நிலம், வாய்க்கால்கள் என நிலப்பகுதிகள் மற்றும் இறையிலி நிலங்கள் என விளக்கியுள்ள இந்நூல் சோழர் கால வரலாறு, பண்பாடு, ஆட்சி முறை எனுமாறு அறிய உள்ள அரிய நூல் இது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. சிவக்குமார் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு நூலின் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்கள், இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

முன்னுரை

தமிழக வரலாற்றை எழுதக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் முதன்மை வாய்ந்த ஆதாரங்களாக விளங்குகின்றன. பல்லவர், பாண்டியர், சோழர் வரலாற்றைச் செப்பேடுகளின் துணைகொண்டே வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வருகின்றனர். எதிர்பாராத விதமாகக் கண்டறியப்படும் செப்பேடுகளால் சில புதிய செய்திகளும் உறுதிப்படுத்தப்படாத கருத்துகளும் தெளிவு பெறுகின்றன. சான்றாக, எசாலத்தில் கண்டெடுக்கப் பெற்ற செப்பேடுகளால் இராசேந்திரசோழனின் குரு சர்வசிவ பண்டிதர் என்பவர் எய்தார் என்ற ஊரில் இராமீஸ்வரர் கோயில் எடுப்பித்ததை அறிகிறோம். இராசேந்திரன் தன் குருவை 'நம் உடையார்' என்று மரியாதையாகக் குறிப்பிடுகின்றான்.

தொல்லியல் அறிஞர்கள் இரா. நாகசாமியும் நடன. காசிநாதனும் இச்செப்பேடுகளை ஆய்ந்து ஆங்கிலத்தில் நூல் எழுதியுள்ளனர். நானும் சிற்பக் கலை வித்தகர் மா. சந்திர மூர்த்தியும் தமிழில் 'எசாலம் வரலாற்றுப் புதையல்' என்ற தலைப்பில் எசாலம் செப்பேடுகளையும் சிற்பங்களையும் 1988இல் எழுதினோம். சேகர் பதிப்பகம் இதனைப் பதிப்பித்தது.

தற்போது இச்செப்பேடுகள் குறித்த ஆய்வு தேவைப்படுவதால் 'இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள், என்ற தலைப்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தம்பெயரில் நிறுவியுள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவின் 21ஆம் பொழிவாக உரையாற்ற வாய்ப்பு கிடைத்தமை பெருமகிழ்ச்சி தருவதாகும். இந்தவாய்ப்பை நல்கிய நிறுவன இயக்குநர் முனைவர் பேரா. கரு. அழ. குணசேகரன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எசாலம் செப்பேடுகள் தொடர்பாகப் புதிய கருத்துகளைக் குறிப்பிட்ட தொல்லியல் அறிஞர் திரு. நெல்லை நெடுமாறன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வடமொழிப் பகுதியை எழுதத் திருவாளர்கள் வே. மகாதேவன் மற்றும் சங்கர நாராயணனுடைய கையெழுத்துப் பிரதிகள் உதவியாக இருந்தன. மா. சந்திரமூர்த்தி விரிவாகச் சிற்பங்கள் குறித்து எழுதியதை மிகவும் சுருக்கி இந்நூலில் எழுதி உள்ளேன். அவருக்கும் என் நன்றி. முதன் முதலில் இச்செப்பேடுகள் குறித்து அரிய நூல் எழுதிய என் குரு தொல்லியல் அறிஞர் இரா. நாகசாமிக்கு என் வணக்கத்தை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ச.கிருஷ்ணமூர்த்தி

ஆசிரியரைப் பற்றி

பெயர்	ச. கிருஷ்ணமூர்த்தி
பிறந்ததேதி	*04-04-1949*
இடம்	விலாரிப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம்.
கல்வித்தகுதி	முதுகலைத் தமிழ், சென்னை மாநிலக் கல்லூரி. முதுகலை வரலாறு, சென்னைப் பலகலைக் கழகம்.
	கல்வெட்டியல் பட்டயம். தமிழக அரசு தொல்லியல் துறை, சென்னை.
	இளங்கலைக் கல்வியியல் பட்டம், சென்னைப் பல்கலைக்கழகம்.
பணி	தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையில் தொல்லியல் அலுவலராக *26.12.1978*இல் தஞ்சையில் பணியேற்று *30.4.2007*இல் சென்னையில் ஓய்வு பெற்றார்.

பணியாற்றிய காலத்தில் 2000க்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளைத் தமிழக அரசிற்குச் சேகரித்துத் தந்ததுடன் அச்சில் வராத சில நூல்களை நகல் செய்து பதிப்பித்துள்ளார். வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களைத் தருமபுரி மாவட்டத்தில் பலஇடங்களில் கண்டுபிடித்துள்ளார். அச்சுகுத்தப்பட்ட 1080 வெள்ளிக்காசுகளையும் பொன், செம்பில்

கூடிய காசுகளையும் தொல்லியல்துறைக்காகச் சேகரித்துள்ளார். பல கல்வெட்டுகளையும், சிற்பங்களையும், செப்பேடுகளையும் கண்டறிந்து ஆய்ந்து பல கட்டுரைகள் எழுதி உள்ளார். கன்னியாகுமரி முதல் காசிவரை உள்ள திருவாவடுதுறை ஆதீனக்கிளை மடங்களை நேரில் சென்று ஆய்வு செய்து நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்குச் **சரித்திரச் செம்மல்** என்ற விருது வழங்கியது.

தமிழக அரசும் தனியார் அமைப்புகளும் இவருடைய நான்கு நூல்களுக்குப் பரிசுகள் வழங்கியுள்ளன.

ஓலைச் சுவடிகளாக இருந்த திருக்குறள் பழைய உரைகள் இரண்டினை நகல் செய்து ஐந்து நூல்களாகப் பதிப்பித்துள்ளார். திருக்கோயிலூர், மாளிகை மேடு, சேந்த மங்கலம் அகழாய்வுகளில் பங்கு பெற்ற இவ்வாசிரியர் எழுதியும் பதிப்பித்தும் உள்ள நூல்களின் பட்டியல் வருமாறு :

1. தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும்.
2. திருவோத்தூர் வரலாறு (தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசு பெற்றது).
3. எசாலம் வரலாற்றுப் புதையல் (இணையாசிரியர்).
4. திருக்குறள் பழைய உரை - 3.
5. வரலாற்றில் வல்லம்.
6. விக்கிரம சிங்கபுர உலா.
7. கல்லிடைக் குறிச்சிக் கலைக் கோயில்கள்.
8. சிவகீதையும் சித்தாந்த மரபும்.
9. சப்தஸ்தானம் எனும் ஏழூர் வரலாறு.
10. திருவாவடுதுறை ஆதீன வரலாறு (தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்றது).
11. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள்.
12. துர்க்கை வழிபாடும் சிற்பங்களும்.
13. பிள்ளையார் கதை.
14. திருக்கடந்தை வரலாறும் புராணமும்.
15. திருப்பாம்புரம்.
16. பெண்ணாகடம் கோயில்கள்.

17. புஷ்பவிதி (உரையாசிரியர்).

18. கல்வெட்டுகளில் ஊரும்பேரும் (செய்யாறு).

19. தமிழ் நாட்டுச் செப்பேடுகள் (இரு தொகுதிகள்)

20. நடுகற்கள்.

21. கிருஷ்ண நாடகம் (பரிசு பெற்றது).

22. நாலடியார் மூலமும் பதிப்பிக்கப்படாத பழைய உரையும். (பரிசு பெற்றது).

23. நல்லூர் மாடக் கோயில்கள் (இணையாசிரியர்).

24. வரலாற்றில் திருக்கழுக்குன்றம்..

25. வரலாற்றில் எலவானாசூர்க்கோட்டை.

26. தருமபுரி மாவட்டத் தொல்லியல் கையேடு (இணையாசிரியர்).

27. கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள் (இணையாசிரியர்).

28. பேசா மடந்தை -விக்கிரமாதித்தன் கதை.

29. Thirukkovilur Excavation Report (Asst. Editor).

30. Thiruvavaduthurai Adheenam.

31. திருக்குறள் பழைய உரை-4 (நான்கு தொகுதிகள்).

32. தொல்லியல் நோக்கில் காஞ்சிபுர மாவட்டம்.

33. வல்லம் தலபுராணம் (அச்சில்).

உள்ளே

		பக்கம்
	அணிந்துரை	
	ஆசிரியரைப் பற்றி	
1.	எசாலம் செப்பேடுகளின் அமைப்பு	1
2.	எசாலம் செப்பேடுகளின் வடமொழிப்பகுதி	47
3.	செப்பேடுகளின் மூலங்கள்	65
4.	எசாலம் புதையலில் கண்டெடுத்த ஐம்பொன் சிலைகள்	92
5.	எசாலத்தில் காணப்படும் கற்சிற்பங்கள்	101
6.	எசாலம் கல்வெட்டுகள்	104

எசாலம் செப்பேடுகளின் அமைப்பு

கோயில் திருப்பணியின்போது ஐம்பொன் சிலைகளுடன் செப்பேடுகளும் தமிழகத்தில் சில இடங்களில் கிடைத்துள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் எசாலம் என்ற சிற்றூரிலும் செப்புச்சிலைகளுடன் முதலாம் இராசேந்திர சோழன் வெளியிட்ட செப்பேட்டுத் தொகுதி ஒன்றும் கிடைத்துள்ளது. விழுப்புரம்-செஞ்சி நெடுஞ்சாலையில் நேமூர் என்ற ஊருக்குக் கிழக்கில் எசாலம் என்ற ஊர் அமைந்துள்ளது. பிரம்மதேசம், எண்ணாயிரம், பிடாரிப்பட்டு எனப் பல புராதன ஊர்கள் எசாலம் அருகே உள்ளன. எசாலத்தின் பழைய பெயர் எய்தார்.

எசாலம் என்ற கிராமத்தில் திருவிராமீசுவரம் என அழைக்கப்படும் பழைய சிவன்கோயில் உள்ளது. 1987இல் கோயில் திருப்பணிக்காகப் பூமியைத் தோண்டியபோது எதிர்பாராத விதமாக இராசேந்திர சோழன் வெளியிட்ட செப்பேட்டுத் தொகுதியுடன் இருபதுக்கு மேற்பட்ட செப்புத் திருமேனிகளும் சிவபூசைப் பொருள்களும் கண்டறியப்பட்டன. 11.8.1987இல் இக்கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. தொல்லியல் துறை உடனடியாக இங்கே ஆய்வு செய்தது. 31.8.1987 நாளிட்ட தினமணி நாளிதழில் இக்கண்டுபிடிப்புக் குறித்து அப்போதைய தொல்லியல் துறை இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி பேட்டி அளித்திருந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கோயில் சிலைகளையும் செப்பேடுகளையும் காண எசாலம் வர ஆரம்பித்தனர். கோயில் சிலைகளைக் கோயிலிலேயே வைப்பது என்றும் செப்பேடுகளைத் தொல்லியல்துறை பராமரிப்பில் வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டு அரசாணையும் வழங்கப்பட்டது. தொல்லியல் துறை இயக்குநர், அத்துறை பதிவு அலுவலர் மற்றும் கல்வெட்டாய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்ட எசாலம் செப்பேடு தொடர்பாக முதன் முதலில் இரா. நாகசாமி ஆங்கிலத்தில் நூல் எழுதினார். Archaeological Finds in South India: Esalam Bronzes and Copper plates, Bulletinde Ecole Francaised Extreme Orient Tome LXXVI, Paris 1987. அதாவது, 'எக்கோலே பிரான்சைஸ் தி எக்ஸ்ட்ரீம் ஓரியண்ட்' என்னும் பிரெஞ்சு இதழில் ஆங்கில விளக்கத்துடன் பதிப்பித்தார்.

முனைவர் இரா. நாகசாமிக்குப்பின் தொல்லியல் துறை இயக்குநராகப் பதவியில் இருந்த நடன. காசிநாதனும் தொல்லியல் துறை வெளியிடும் 'கல்வெட்டு' காலாண்டிதழ்களில் ஆங்கில முன்னுரையுடன் தமிழ் மூலத்தை இணைத்துக் கட்டுரைகளாக வெளியிட்டார் (நா. மார்க்சீய காந்தி, 37, 38 இதழ்கள்). மூலத்தில் உள்ள ஒருசில சொற்களுக்கு மாறுபட்ட பாடங்களைக் குறிப்பிட்டுள்ளார். அ.பத்மாவதி உள்ளிட்ட கல்வெட்டாய் வாளர்கள், செப்பேட்டினைத் திருத்தமாக வாசிக்க உதவி புரிந்துள்ளனர்.

இந்த நூலாசிரியரும் மா.சந்திரமூர்த்தியும் எசாலம் வரலாற்றுப் புதையல் என்ற நூலை எழுதித்தர, வெள்ளையாம்பட்டு சுந்தரம் தனது சேகர் பதிப்பகம் மூலம் ஜூலை 1995இல் பதிப்பித்தார். அந்த நூலில் செப்பேட்டுப் பகுதியை இந்நூலாசிரியரும் ஐம்பொன் சிலைகள் குறித்து மா. சந்திரமூர்த்தியும் எழுதினார். தமிழ் விளக்கங்களுடன் செப்பேட்டின் தமிழ்ப்பகுதி இணைக்கப்பட்டது. வடமொழிப் பகுதியின் சாரம் எழுதப்பட்டாலும் 80 வரிகளைக் கொண்ட 35 சுலோகங்களின் மூலமோ, மொழிபெயர்ப்போ, ஒலிபெயர்ப்போ அந்த நூலில் இடம்பெறவில்லை. தற்போது இடம்பெறுகிறது. அறிஞர்கள் வே. மகாதேவன் மற்றும் சங்கரநாராயணனுக்கு நன்றி. அறிஞர் மா. சந்திரமூர்த்தி எழுதியதையே சுருக்கி இந்நூலில் தந்துள்ளேன்.

தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் கல்வெட்டியல் துறைத் தலைவராக இருந்த முனைவர் ஒய். சுப்பராயலு இச்செப்பேடு குறித்து ஒரு சிறிய கட்டுரையை 12.03.1996இல் எழுதியிருந்தார். அதன் நகலினை ஈரோடு இராசு இந்நூல் ஆசிரியருக்கு அனுப்பி இருந்தார். சில சொற்களுக்கு அவரும் பாடபேதம் கண்டதுடன் புதுவிளக்கமும் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலாசிரியர் தமிழ் நாட்டுச் செப்பேடுகள் பலவற்றையும் ஆய்ந்து செப்பேடுகள் தொகுதி 1 மற்றும் தொகுதி 2 என இரு நூல்களை எழுதி, அவற்றைச் சிதம்பரம் மெய்யப்பன் பதிப்பகம் 2002இல் வெளியிட்டுள்ளது. முதல் தொகுதியில் பக்கம் 337 முதல் 353 வரை எசாலம் செப்பேட்டுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சமீபத்தில் புலவர் வே. மகாதேவனும், காஞ்சிபுரம் சமசுகிருதப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் முனைவர் சங்கரநாராயணன் ஆகிய இருவரும் விரிவான அளவில் சோழர் செப்பேடுகளை எழுதி அதன் கையெழுத்துப்பிரதியை இந்நூல்

ஆசிரியருக்கு அனுப்பி வைத்தனர். தேவையான திருத்தங்கள் செய்ததுடன் இந்நூலாசிரியரின் எசாலம் செப்பேடுகள் குறித்த இரு நூல்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்நூல் அச்சேறும்வரை மேற்படி இருவரின் சோழர் செப்பேடுகள் பதிப்பிக்கப்படவில்லை. எசாலம் செப்பேட்டின் பகுதியான கிரந்த வரிவடிவத்தைம், நாகரி மற்றும் தமிழில் மேற்படி கையெழுத்துப் பிரதியில் சேர்த்துள்ளனர். அவற்றை இந்நூலில் சாசன மூலத்துடன் சரிபார்த்து இணைத்துள்ளேன். தேவையான குறிப்புகளும் தந்து ஒப்பீட்டாய்வும் செய்துள்ளேன்.

கலைச்செல்வங்களைக் காப்பாற்றிய நம் முன்னோர்

மாற்றரசர் அல்லது வேற்று மதத்தார் அழிவிலிருந்து இக்கோயில் ஐம்பொன் சிலைகளையும் செப்பேடுகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் கோயிலுக்குள் பூமியைத் தோண்டி ஆற்று மணலைப்பரப்பி வைத்து நம்முன்னோர் காப்பாற்றி உள்ளனர். இதன் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டாக இருக்க வேண்டும் என்று இரா. நாகசாமி கருதுகிறார். இவ்வூகம் பொருத்தமாகவே தோன்றுகிறது.

செப்பேட்டின் அமைப்பு

எசாலம் செப்பேடு பதினைந்து இதழ்களுடன் ஒரு செப்பு வளையத்தில் கோக்கப்பட்டுள்ளது. வளையத்தில் சோழ மன்னரின் புலி முத்திரையும் உள்ளது. சோழரின் சின்னமான புலியுடன் இரு மீன்களும் ஒரு வில்லும் உள்ளன. மேலும் ஒரு பன்றியும் சுவஸ்திகமும் சாமரமும் வெண்கொற்றக்குடையும் சக்கரமும் முத்திரையில் உள்ளன. மீன்கள் பாண்டியரையும் வில் சேரரையும் பன்றி சாளுக்கியரையும் வென்று அவர்களுடைய நாடுகள் சோழப் பேரரசில் இருந்தமையைக் குறிப்பிடும் எனலாம். பெருநிலப்பரப்பை ஆண்ட சக்கரவர்த்திக்குச் சக்கரம் காட்டியது பொருத்தமேயாகும். இரட்டை மீன்களைத் தொடர்ந்து விளக்குத்தாங்கி, வாள், அம்பு மற்றும் பரசினை முத்திரையில் காண்கிறோம். மேலும் இதழ் விரிந்த தாமரை ஒன்றும் வில்லின் கீழே சூலம் ஒன்றும் பன்றியை அடுத்துத் தோரணம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. வெண்கொற்றக்குடை, சாமரம், சுவஸ்திகம், விளக்குத்தாங்கி போன்றவை மங்கலச் சின்னங்கள் எனலாம். சூலம் சிவபெருமானைக் குறிப்பாகச் சுட்டும் எனலாம். சூலத்தேவர் செப்புச்சிலையும் சில சிவன் கோயில்களில் இருப்பதைப் பலரும் அறிவர். இலச்சினையில் தோரணம் இடம்

பெற்றிருப்பதற்கு முக்கியக் காரணமிருக்க வேண்டும். முதல் இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்தியில் கடாரத்தை அம்மன்னன் வென்று அங்கிருந்து வித்தியாதரத் தோரணத்தைக் கொண்டு வந்ததாக உள்ளது. அச்செய்லையே இலச்சினையில் இடம் பெறும் தோரணம் குறிப்பிடும் எனலாம். பிற சோழர் செப்பேடுகளின் முத்திரைகளில் இடம்பெறும் சின்னங்களே பெரும்பாலும் இதில் இடம் பெறினும் சிறு வேறுபாடுகள் உள்ளன. புலிச் சின்னமானது வங்காளப் புலியாக இன்றிச் சிறுத்தைப் புலியாக உள்ளது. கரந்தைக் கோவிந்தராசுவும் சிறுத்தையே சோழரின் சின்னம் என்பார். இலச்சினையில் இருவரியில் எழுதப்பட்ட வடமொழிக் கிரந்தலிபி உள்ளது.

ராஜத் ராஜன்ய மகுடச்ரேணி ரத்னேஷு சாஸநம்
ஏதத் ராஜேந்த்ர சோளஸ்ய பரகேஸரிவர்ம்மன:

'அரசர்களின் திருமுடி வரிசைகளின் இரத்னங்களில் திகழ்வதான இது பரகேஸரிவர்மனான ராஜேந்திர சோழனின் சாசநம்' என்பது இதன் பொருள். சாசநம் என்பது கட்டளை என்று இங்கே பொருள் கொள்ள வேண்டும். இராசேந்திர சோழனுடைய வேறு செப்பேடுகளிலும் இம்முத்திரைச் சுலோகம் இடம் பெற்றுள்ளது. மிகச்சிறிய வேறுபாடு உண்டு.

எசாலம் செப்பு இதழ்களின் நீளம் 34 செ.மீ. அகலம் 16.5 செ.மீ. வளையம் மட்டும் 34 செ.மீ. விட்டமும் 2 செ.மீ. பருமனும் கொண்டுள்ளது. முத்திரையின் விட்டம் மட்டும் 13.5 செ.மீ. ஆகும்.

முன்பே குறிப்பிட்டதற்கிணங்க வடமொழிப் பகுதி முதல் நான்கு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. கிரந்த லிபியில் தெளிவாக வாசிக்கும் நிலையில் இது வெட்டப்பட்டுள்ளது. எஞ்சிய 11 ஏடுகளில் எழுதப்பட்ட தமிழ்ப் பகுதியும் தெளிவாக வாசிக்கும் நிலையில் வெட்டப்பட்டுள்ளது. எழுத்துகள் அழகாகவும் உள்ளன. வடமொழிப்பகுதி சுலோகங்களாக அமைய, தமிழ்ப் பகுதி உரைநடையாக அமைந்துள்ளது.

காலம்

செப்பேட்டின் தமிழ்ப்பகுதியில் இராசேந்திர சோழனின் 25ஆவது ஆட்சியாண்டு இடம்பெறுவதால் இதன் காலம் கி.பி. 1036-37 எனலாம்.

செப்பேடு வெட்டிய ஆசாரியின் பெயர்

செப்பேட்டின் வடமொழிப்பகுதியில் சாசனம் பொறித்த உலகளந்த சோழ ஆசாரியின் பெயர் உள்ளது. இப்பெயர்

ஆசாரியின் பட்டப்பெயராகத் தோன்றுகிறது. இயற்பெயர் வாசுதேவன் ஆகும். நிலங்களை அளந்து வரி விதித்த முதலாம் இராசராசனுக்குரிய உலகளந்த சோழன் என்ற பட்டப்பெயரில் ஆசாரியன் அழைக்கப்பட்டுள்ளான். கரந்தைச் செப்பேடு வெட்டிய ஆசாரிகள் திரிபுவன மாதேவிப் பேராசாரியன் மற்றும் ராசேந்திர சோழப் பேராசாரியன் என இருவர் ஆவர். இவர்கள் பெயர்களும் பட்டப் பெயர்களாக இருப்பதை மனதில் கொள்ளலாம். சோழர் காலத்தில் இவர்களுக்குச் சமூகத்தில் மிகுந்த செல்வாக்கிருந்ததைச் சாசனங்கள் வாயிலாக அறிகிறோம்.

நாராயணகவி

செப்பேட்டின் வடமொழிப் பகுதியான 35 சுலோகங்களைச் சொன்னவர் நாராயணகவி என்ற கவிஞராவார். இவர் பார்சுவ கிராமத்தைச் சேர்ந்த சங்கரருடைய மகனாவார். திருவாலங்காடு மற்றும் கரந்தைச் செப்பேடுகளின் சுலோகங்களை இயற்றியவரும் இவரே ஆவார். எனவே இம்மூன்று செப்பேடுகளின் சுலோகங்களில் ஒற்றுமை உள்ளது. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்ற வடமொழி வித்தகராக இந்தக் கவிஞர் நாராயணன் இருந்துள்ளார்.

வடமொழிப் பகுதியின் சுருக்கம்

முதலில் வாழ்த்துப் பகுதி இடம்பெறுகிறது. கல்யாண சுந்தரமூர்த்தி ஒரு சுலோகத்திலும் கலைமகளான சரசுவதி மற்றொரு சுலோகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளனர். சூரிய குலத்தவராகிய சோழரின் பட்டியலில் முதலில் சூரியதேவன் கூறப்படுகிறார். பிறகு எட்டுப் புராண மன்னர்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. மனு, இக்ஷுவாகு, மாந்தாதா, முசுகுந்தன், வல்லபன், சோழன், ராஜகேஸரி, பரகேஸரி அவர்களின் பெயர்கள் ஆகும்.

சங்ககாலத்தில் இருந்த சோழ மன்னர்களில் கரிகாலசோழன் மட்டுமே இடம்பெற்றுள்ளான்.

பிற்காலச் சோழர்களில் கீழ்க்காணும் எட்டு அரசர்கள் கூறப்பட்டுள்ளனர். விஜயாலயன், ஆதித்தன், முதலாம் பராந்தகன், அரிந்தமன், இரண்டாம் பராந்தகன், ஆதித்ய கரிகாலன், முதலாம் இராசராசன், மதுராந்தகனாகிய முதலாம் இராசேந்திரன் அவர்கள் ஆகும்.

பிற்காலச் சோழப் பேரரசைத் தாபித்த விசயாலயன் பெருமை, பிரதாபம், பராக்கிரமம், துணிவு ஆகியவை

கொண்டவனாக எட்டாவது சுலோகம் குறிப்பிடுகிறது. பிற்காலப் பாண்டியப் பேரரசைக் கடுங்கோன் உருவாக்கியது போல் சோழப் பேரரசை உருவாக்கிய விசயாலன் முத்தரையரை வென்று தஞ்சை கொண்ட பரகேசரி என்ற பட்டம் பெற்றான். கபிலைக் கதை என்ற ஓலைச்சுவடி, தஞ்சையில் இந்த அரசன் கோட்டை கட்டியதுடன் 8000 பிராமணரைத் தஞ்சையில் குடியேற்றியதாகக் கூறுகிறது. இச்சுவடி தருமபுரி அகழ் வைப்பகத்தில் உள்ளது. விசயாலய சோழனுடைய மகனான ஆதித்தனையும் சூரியனையும் பொருத்திச் சிலேடையாக ஒரு சுலோகம் பாடப்பட்டுள்ளது. சிற்றம்பலம் பொன்னால் வேயப்பட்டதை ஒரு சுலோகம் குறிப்பிட, ஆதித்த கரிகாலனுடைய போர் வெற்றிகளை ஒரு சுலோகம் கூறுகிறது. முதலாம் இராசராசனின் தோற்றத்தையும் போர் வெற்றிகளையும் ஒரு சுலோகத்தில் காண்கிறோம். இராசராசன் தஞ்சாவூரில் இராசராச ஈசுவரமுடையார் கோயில் எடுத்ததை ஒரு சுலோகம் எடுத்தியம்புகிறது. கௌடதேசத்தை இம்மன்னன் வெற்றி கொண்டதை ஒரு சுலோகம் வருணிக்கிறது. வேறு எங்கும் இப்போர் குறித்து நமக்குத் தகவல் இல்லை.

இச்செப்பேட்டை வெளியிட்ட முதலாம் இராசேந்திர சோழனின் போர் வெற்றிகளும் இம்மன்னன் கங்கை கொண்ட சோழீச்சுரம் எடுத்ததும் அவனுடைய குருவான சர்வசிவபண்டிதரின் சிறப்புகளும் சில சுலோகங்களில் கூறப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டின் ஆக்ஞாப்தி (ஆணத்தி)யின் பெயர் நராக்கன் மாராயன் ஜனநாதனாகிய ராசேந்திர சோழ பிரம்மாதி ராயன் என்பதாகும். நராக்கன் மாராயன் என்பதை நாராக்கமாராயன் என்று நடன. காசிநாதன் படித்துள்ளார். நராக்கன் என்பது ஒரு தெலுங்கு இடப்பெயர். இப்பெயரில் ஒரு பிராமணக் குடும்பம் அழைக்கப்பட்டதாக அறிஞர் ஒய். சுப்பராயலு கருதுகிறார். நராக்கனுடைய தந்தை கிருஷ்ணன் பெயரின் முன் ஒட்டும் நராக்கன் ஆகும். நராக்கன் கிருஷ்ணனுக்கு இருபிள்ளைகள் இருந்தனர். இரண்டாவது பிள்ளை நராக்கன் ராமன் அருமொழி ஆன உத்தம சோழப்ரஹ்ம மாராயன் ஆவான். இவனும் தண்ட நாயகம் சேனாபதியாகவும் ஓலை நாயகமாகவும் இருந்துள்ளான்.

ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் உள்ள இராசராச சதுர்வேதி மங்கலத்தில் எய்தார் இருந்தது. இந்த எய்தாரில் மதுராந்தகனாகிய இராசேந்திரனுடைய குரு இராமீஸ்வரமுடையார் கோயில் எடுப்பிக்க அக்கோயிலுக்கு

மன்னன் இராசேந்திரன் நிலத்தானம் அளித்துள்ளான். நன்னாடு மற்றும் ஏர்ப்பாக்கம் எனும் இரு ஊர்களும் ஒன்றாக்கப்பட்டு விக்கிரம சோழநல்லூர் எனப் பெயரிடப்பட்டு இறையிலியாக வழங்கப்பட்டது. இராசேந்திரசோழனுடைய பட்டப் பெயர்களுள் விக்கிரமசோழன் என்பது ஒன்றாகும். தானம் பெற்ற சர்வசிவபண்டிதரே இத்தானத்திற்கு விக்ஞாப்தி ஆவார்.

35 சுலோகங்களில் பயின்று வந்துள்ள பாவகைகள் வருமாறு;

1. ஸ்ரக்தரா 2. வஸந்ததிலகா 3. ஸ்ரக்தரா 4. சார்தூல விக்ரீடிதம் 5. மாலினீ 6. சார்தூல விக்ரீடிதம் 7. அனுஷ்டுப் 8. மஞ்ஜுபாஷினீ 9. இந்த்ரவஜ்ரா 10. இந்த்ர வஜ்ரா 11. உபேந்த்ர வஜ்ரா 12. மாலினீ 13. மந்தாக்ராந்தா 14. மந்தாக்ராந்தா 15. உபேந்திரவஜ்ரா 16. ஸ்ரக்தரா 17. சார்தூலவிக்ரீடிதம் 18. மஞ்ஜுபாஷினீ 19. உபேந்த்ரவஜ்ரா 20. சார்தூல விக்ரீடிதம் 21. அனுஷ்டுப் 2.2. உபேந்த்ரவஜ்ரா 23. சார்தூலவிக்ரீடிதம் 24. வஸந்த திலகா 25. சார்தூல விக்ரீடிதம் 26. வஸந்த திலகா 27. இந்த்ர வஜ்ரா 28. உபேந்த்ரவஜ்ரா 29.--- 30. சார்தூலவிக்ரீடிதம் 31. இந்த்ர வஜ்ரா 32. வஸந்ததிலகா 33. வஸந்த திலகா 34. அனுஷ்டுப் 35. ----

இராசகுரு

இராசராசனுடைய குலகுருவாக ஈசான சிவபண்டிதர் இருந்தார். இராசராசனுக்குப் பிறகு நாடாண்ட முதலாம் இராசேந்திரனுக்கும் இவர் குலகுருவாக இருந்துள்ளார். தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயில் கல்வெட்டுகள் இவரைக் குறிப்பிடுகின்றன. தொடக்கத்தில் இராசேந்திரனின் குருவாக இவர் இருந்திருப்பினும் ஆட்சியின் பிற்காலத்தில் சர்வ சிவபண்டிதர் இருந்துள்ளதைத் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டும் கூழம் பந்தலில் உள்ள கங்கை கொண்ட சோழீச்சுரம் கோயில் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன. ஆரியதேசம், மத்திய தேசம், கௌடதேசம் போன்ற நாடுகளில் இருந்து இராசேந்திரன் ஆசாரியர்களை வரவழைத்து அவர்களுக்கு ஆசாரிய போகமாக மிகுதியான நிலங்களை வழங்கியதை வரலாற்றில் காண்கிறோம். எசாலம் கோயிலை எடுப்பித்த சர்வசிவ பண்டிதர் எசாலம் செப்பேட்டின் வடமொழிப் பகுதியிலும் தமிழ்ப்பகுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளார். மன்னன் இவரை நம்உடையார் என மிகவும் மரியாதையுடன் அழைத்துள்ளான். எனவே தன்குரு கட்டிய சிவன் கோயிலுக்கு இராசேந்திரன் ஓர் ஊரையே இறையிலியாக வழங்கியதில் வியப்பொன்றுமில்லை.

காஞ்சி அரண்மனை

பிற்காலச் சோழர்களின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகக் கருதப்படும் காஞ்சியில் சோழருடைய அரண்மனை இருந்துள்ளது. இவ்வரண்மனையில் உள்ள பொன் மாளிகையில் தான் இராசேந்திரனின் பாட்டன் சுந்தரசோழன் துஞ்சினான். சென்னை அருங்காட்சியகச் செப்பேட்டை உத்தமசோழன் காஞ்சி அரண்மனையில் இருந்துதான் வெளியிட்டுள்ளான். எசாலம் செப்பேட்டையும் காஞ்சி அரண்மனையில் இருந்து மன்னன் வெளியிட்டுள்ளான். ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயில்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து நம்வீட்டின் உள்ளால் நாம் குளிக்குமிடத்துத் தானம் செய்யாவிருந்து என்ற தொடர் மூலம் தானம் எங்கிருந்து வழங்கப்பட்டது என்பதை அறிகிறோம். எந்த நேரத்திலேயும் எப்போது வேண்டுமானாலும் அரசின் அலுவலர்கள் அரசனைச் சந்திக்கலாம் என்பதை இச்செப்பேட்டின் மூலம் அறிகிறோம். வடமொழிப்பகுதியில் மனனன் பிராமணர்களுக்குத் தானம் தந்தவிவரம் உள்ளது. இரசேந்திரசோழன் மகாசாலையில் இருக்கும் போது கொடை அளிக்கப்பட்டது. மகாசாலை என்பது கல்விக்கூடமாகவோ உணவுக் கூடமாகவோ இருந்திருக்கலாம். காந்தளூர்ச்சாலை கலமறுத்த இராசராசனுடைய மெய்க்கீர்த்தி நோக்குதற்குரியது. பிராமணர்களுக்கு மன்னன்தானம் வழங்கியது பதினைந்தாவது ஆட்சியாண்டாகும். அதாவது கி.பி. 1027 எனலாம். கோயிலுக்கு வழங்கியது மன்னனுடைய இருபத்து நான்காவது ஆட்சியாண்டு நாள் நாற்பது ஆகும். இரண்டிற்கும் ஒன்பது ஆண்டுகள் கால இடைவெளி உள்ளது. மன்னன் கோயிலுக்கு வழங்கியதானம் மன்னனின் 25ஆவது ஆட்சியாண்டில் நடைமுறைக்கு வந்து பிறகு செப்பேடாகவும் வெளியிடப்படுகிறது.

கச்சிப்பேட்டு அரண்மனையின் தென்புறத்தே சித்திர மண்டபத்தில் உத்தமசோழன் கச்சிப்பேட்டு ஊரகப் பெருமாளுக்குத் தானம் வழங்கி அதனை ஒரு செப்பேடாகவும் அளித்துள்ளான். இதனைச் சென்னை அருங்காட்சியகச் செப்பேடு என்பர்.

முதலாம் குலோத்துங்கன் காஞ்சி உலகளந்த பெருமான் கோயிலுக்கு வழங்கிய தானத்தை நகரம் காஞ்சிபுரத்துக் கோயிலுள்ளால் ஜெயங்கொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து இராசராச மண்டபத்துப் பள்ளிக் கட்டிலில் எழுந்தருளிய போது அளித்தான் என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலும் விரிவுக்கு இந்த நூலாசிரியர் எழுதியுள்ள

'தொல்லியல் நோக்கில் காஞ்சிபுர மாவட்டம்' என்ற நூலில் காணலாம். கோயிலுக்கு வழங்கப்பட்ட நில அளவுகள் துல்லியமாகச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தோராயமாகக் குறிப்பிட்டால் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறேன்.

1. ஊரின் மொத்த அளவை நூற்றொன்பதே முக்காலே அரைமா முந்திரிகைக் கீழ் இரண்டுமா முக்காணி முந்திரிகைக் கீழ் ஒன்பதின் மாக்காணி அரைக்காணியாகும். சுமாராகக் கூறுவது என்றால் 109 வேலி பத்தரைமா ஆகும்.
2. ஊர் இருக்கை நிலம் மூன்றே ஆறுமாக் கீழ் எட்டு மாக்காணி அரைக்காணிக் கீழ் மாகாணி அதாவது மூன்று வேலி ஆறுமாவுக்கு மேல் ஆகும்.
3. ஊருணிக்குளமும் கரையும் ஓடையும் சேர்ந்தது ஒன்றே முக்காலே மாகாணி முந்திரிகைக் கீழ் இரண்டுமா முக்காணி அரைக்காணிக் கீழ் கால். சுருக்கமாகக் கூறுவது என்றால் 1 வேலி 3/4 மா எனலாம்.
4. வதி வாய்க்கால்கள் மூன்றே எழுமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் எட்டுமா முக்காணிக்கீழ் ஆறுமாக்காணி. அதாவது மூன்று வேலி ஏழரை மா எனலாம்.
5. ஜனநாத சதுர்வேதி மங்கலத்துக்குரிய ஏரிக்குப் பாயும் சிற்றாறும் மணிமுத்தாறும் நாலே முக்காலே ஒருமாவரை முந்திரிகைக்கீழ் ஆறுமாக்கணி முந்திரிகைக் கீழ் இருமாவரை. அதாவது 4 வேலி 16 மா அளவாகும்.
6. ஊர் ஐந்தளி மாதேஸ்வரர் கோயில் திருமுற்றம் திருநந்தவனம் சேர்த்து நாலு மாக்காணி முந்திரிகைக் கீழ் அரையே மூன்று மாக்காணி. சுமாராகக் கூறுவது என்றால் 4 மா எனலாம்.
7. பிடாரியார் ஸ்ரீ கோயில் முற்றத்துடன் ஒரு மாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே இருமாவரை அதாவது ஒரு மாநிலம் தோராயம் எனலாம்.
8. அய்யனார் கோயில் திருமுற்றத்துடன் அளவு முக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே மூன்றுமா மாக்காணி சுமார் 3/4 காணி நிலமாகும்.
9. திருவிராமீச்வர முடையார் திரு. நந்தவனத்தின் நில அளவு அரையே மூன்று மாக்காணி அரைக்காணி முந்திரிகை. அதாவது 13 மாநிலம் எனத் தோராயமாகக் கூறலாம்.

10. கம்மாளன்சேரி மூன்றுடன் அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்கால் அதாவது 3 மாநிலம் எனலாம்.

11. பறைச்சேரி மூன்றுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்கால். இதுவும் மூன்று மாநிலம் எனலாம்.

12. கன்றுமேய் பாழ்நிலம் இரண்டே ஒருமா முக்காணி முந்திரிகை. சுமார் 2 வேலி 1 மாநிலம் எனலாம்.

13. சுடுகாடு மூன்று மாக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்கால் சுமார் 3 மாநிலம் எனலாம்.

14. ஜனநாத சதுர்வேதி மங்கலத்து ஏரிநீர்க் கோவை ஒன்றே ஆறு மா வரைக் காணிக்கீழ் இருமாவரை அதாவது 1 வேலி 6 மா எனலாம்.

15. களரும் உவரும் கூடின நிலம் அரையே அரைமா வரைக் காணிக்கீழ் அரையே நான்மாவரை அரைக்காணி முந்திரிகை அதாவது 10-1/2 மாநிலம் எனத் தோராயமாகக் குறிப்பிடலாம்.

ஊர் இருக்கல்நிலம் மூன்றுவேலி 6 மா தொடங்கிக் களரும் உவரும் கூடின நிலம் 10-1/2 மாவரை நீக்கி அதாவது 18 வேலி 6 மாநிலம் நீக்கி மீதி உள்ள நிலம் கணக்கிடப்படுகிறது. துல்லியமாகக் கூறுவது என்றால் நிலம் பதினெட்டே முக்காலே ஒருமா வரை முந்திரிகைக் கீழ் முக்காலே மும்மாவரைக்கீழ் முக்கால் நீக்கி நிலம் வழங்கப்பட்டது எனலாம். ஏரிநீர் பாய்ந்தும் ஏற்றம் இறைத்தும் இரு பூ விளையும் நிலம் எட்டேகாணிக் கீழ் அரையாகும். சுமார் 8 வேலி எனலாம். இரு பூவிளைவு என்றால் இருபோக விளைச்சல் ஆகும். ஏரிநீர் பாய்ந்து ஒரு போகம் மட்டும் விளையும் நன் செய்நிலம் ஐம்பத்தொன்பதே காலே அரை மா முந்திரிகைக் கீழ் மூன்றுமா முக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே மாகாணி. (சுமார் 59 வேலி 5-1/2 மாநிலம் என்க.

மேற்கண்ட இரண்டுவகையான நன்செய் நிலங்களில் இருபோகம் விளையும் நிலம் குறைவாகவும் ஒருபோகம் பயிரிடும் நிலம் மிகுதியாகவும் உள்ளது. ஏரிநீர் குறைந்தபோது ஏற்றம் இறைத்துப் பயிர் செய்யும் வசதி உள்ள நன்செய் நிலங்களே இரு பூவிளையும் நிலங்கள் ஆகும்.

புன்செய் நிலங்கள்

வானம் பார்த்த பூமியைப் புன்செய் நிலம் என்பர். எசாலம் செப்பேட்டின்படி கோயிலுக்கு வழங்கிய புன் செய்நிலம் சுமார்

23 வேலி 10மா ஆகும். இருபத்து மூன்றரையே மூன்று மா முந்திரிகைக் கீழ் அரையே காணி அரைக்காணிக்கீழ் முக்காலே மூன்றுமா வரைக்காணி என்பது செப்பேட்டில் வரும் துல்லியமான அளவாகும்.

ஆக 90 வேலி 18 மா நிலத்திற்கு 3400 கலம் நெல் காணிக் கடனாய் ஒவ்வோர் ஆண்டும் நின்று இறையாய் இறுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. புன்செய்ப் பயிர்களாக வரகு, எள்ளு, கொள், துவரை உள்ளிட்ட பயிர்கள் இங்கே பயிரிடப்பட்டதாக அறிகிறோம்.புன்செய்ப் பயிர்கள் விளைவித்தபோதும் வரி நெல்லாகவே வசூலிக்கப்பட்டுள்ளது. செப்பேட்டில் இடம் பெறும் ஊர் இருக்கல் நிலம் என்பது ஊர்க் குடியிருப்புகளைக் குறிக்கும். வீடு என்றோ மனை என்றோ சொல்லாமல் இருக்கல் என்று செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. பெரியவீடுகள் முதல் குடிசை வீடுகள் வரை எல்லாவற்றையும் உள்ளடக்கவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

நீர்நிலைகள்

எசாலம் செப்பேட்டில் பல்வேறு வகையான நீர்நிலைகள் கூறப்பட்டுள்ளன. ஊருணிக்குளம் என்று செப்பேட்டில் இடம்பெறும் குளம் ஊர்மக்கள் குடிதண்ணீர்க்கு மட்டும் பயன்படுத்தும் குளம் எனலாம். திருவள்ளுவர் பேரறிவாளராகிய உபகாரியின் செல்வத்திற்கு உவமை கூறும்போது 'ஊருணி நீர் நிறைந்தற்றே' என்று கூறுவார். பொதுமக்கள் ஊருணிக் குளத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் எனில் அவ்வப்போது புதுநீர் (மழைநீர் அல்லது ஆற்று நீர் என்க) வரவேண்டும். முற்காலத்தில் இதற்கு ஏற்பாடு செய்தனர். தஞ்சாவூருக்கு மேற்கில் உள்ள வல்லத்தில் பல்வேறு வகையான நீர்நிலைகள் தற்போது உள்ளன. ஊரணிக் குளம் என மக்கள் அழைக்கும் பெரியகுளம் ஊருணிக் குளம் எனலாம். விலங்குகளுக்காகக் காட்டுக்குளம் ஒன்றும் இவ்வூரில் உண்டு. வல்லம் தலபுராணம் பல்வேறு தீர்த்தங்களுடன் ஊருணிக்குளத்தையும் சுட்டுகின்றது. எசாலம் செப்பேட்டில் நீர்வரும் ஓடை கூறப்படுகிறது. குளமும் கரையும் ஓடையும் மூன்றும் அளவிடப்பட்டு முக்காலே மாகாணி முந்திரிகைக் கீழ் இரண்டு முக்காணி அரைக்காணிக் கீழ்கால். அதாவது 1 வேலி 3/4 மாநிலம் எனலாம். எசாலம் ஊருக்கு வடகிழக்கில் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையில் பெரிய ஆழமான குளம் ஒன்று தற்போது உள்ளது. தெற்கில் மட்டும் படிக்கட்டுகள் உள்ளன. பாறைகளை வெட்டி ஆழமாகவும் அகலமாகவும் முற்காலத்தில் இக்குளத்தை உருவாக்கியுள்ளனர்.

செப்பேட்டில் இடம்பெறும் ஊருணிக்குளம் இதுவாக இருக்கலாம். மேலும் அண்மைக்காலம் வரை ஊர் மக்கள் இக்குளத்து நீரையே வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்று அறிகிறோம். இக்குளத்தை ஒட்டிய ஒரு தெருவுக்குக் குளத்தங்கரைத் தெரு என்றே பெயராகும். செப்பேட்டில் இடம்பெறும் வதி, வாய்க்கால் பலசாசனங்களில் இடம்பெறும் சொற்கள் ஆகும். நிலங்களுக்கு நீர் கொண்டு செல்லும் நீர்நிலைகள் இவைகள் ஆகும். எசாலம் செப்பேட்டின்படி வதி, வாய்க்கால்கள் நிலத்தின் அளவு 3 வேலி 71/2 மா ஆகும். எசாலம் ஏரிக்கு நீர் கொண்டு வரும் சிற்றாறு மணி முத்தாறு இரண்டும் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன. நீர் நிரம்பிய ஏரியாக ஓர் ஏரி விளங்கவேண்டுமெனில் ஆறில் இருந்து கால்வாய் மூலம் ஏரிக்கு நீர் வர வேண்டும். வீராணம், மாமண்டூர் ஏரிகளைச் சிந்தித்துப் பார்க்கலாம். கங்கை கொண்ட சோழபுரத்தில் மன்னன் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழப்பேரேரி தோற்றுவித்தான். நீர் வருவதற்கும் வகைசெய்தான். அவ்வேரி தற்போது பொன்னேரி என அழைக்கப்படுகிறது. எசாலம் ஏரி பொன்னேரி போல் வளமிக்கதாக இருந்துள்ளது. ஏரிக்கு நீர் வந்து பாயும் நிலத்தின் அளவு 4 வேலி 16 மா ஆகும். தற்போது இவ்வேரி முன்பிருந்தது போலின்றி எப்போதாவது நிரம்புகிறது. எனவே உழவர்கள் கிணற்றிலிருந்து பம்புசெட் மூலம் நீர் இறைத்து விவசாயம் செய்கின்றனர். நெல்லுடன் புன்செய்ப் பயிர்களான மணிலா, கேழ்வரகு போன்றவை பயிரிடுகின்றனர். சோழர் காலத்தில் நீர்நிலைகளைப் பாதுகாக்க ஊரவையும் குறிப்பாக ஏரிவாரியமும் தனிநபர்களும் இருந்துள்ளனர். ஆயின் இன்று ஏரிகளையே பலர் ஆக்கிரமிப்புச் செய்வதால் மக்கள் மழைக்காலத்தில் வெள்ளத்தின் காரணமாகவும் கோடையில் ஏரிநீர் இல்லாததால் வறட்சிக் காரணமாகவும் துயரப்படுகின்றனர்.

பழைய சிவன் கோயில்

இவ்வூர் ஐந்தளி மாதேஸ்வரர் கோயிலும் முற்றமும் நந்தவனமும் நான்கு மாக்கணி 6 முந்திரிகைக் கீழ்அரையே மூன்று மாமுக்காணி அளவாகும். தற்போது ஐந்தளி மாதேஸ்வரர் கோயில் இல்லை. கோயில் இருந்த தடயங்கள் உள்ளன. ஊரின் தெற்கே இலிங்கத்தடிமேடு என்ற பகுதி உள்ளது. இங்கு உழவர்கள் நிலம் உழுகின்றபோது சிறிதும் பெரிதுமான செங்கற்கள் கிடைப்பதாக ஊர்மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை எசாலம் கிராமத்தில் மேற்பரப்பு ஆய்வு செய்தது. அகழாய்வாளராக அப்போது பணியாற்றிய ஸ்ரீதர் ஊராய்வு குறித்து ஒரு கட்டுரையைக் கல்வெட்டுக் காலாண்டிதழில் எழுதி உள்ளார். 36X17 செ.மீ. அளவுள்ள சில செங்கற்கள், சுடுமண் பொம்மைகளின் பகுதிகள், சுடுமண் விளக்குகள் சேகரிக்கப்பட்டன. இலிங்கத்தடி மேட்டுப்பகுதியில் இருந்து எடுத்து வரப்பட்டு, தற்போது இராமீசுவரர் கோயிலின் அருகில் காணப்படும் தலைப்பகுதி உடைந்துள்ள விஷ்ணுவின் கற்சிற்பம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுச் சிற்ப அமைப்பைக் கொண்டுள்ளது. தவிர ஈஸ்வர மானியம் என வழங்கப்படும் நிலத்திற்கு அருகில் சூலக் குறியுடன் கல்லெழுத்து உள்ள கல் ஒன்றும் காணப்படுகிறது. இச்சூலக் குறியும் கல்வெட்டும் கி.பி. 10ஆம் நூற்றாண்டு எனலாம். சர்வ சிவபண்டிதர் இராமீஸ்வரர் கோயில் கட்டுவதற்கு முன்பே வேறோர் சிவன்கோயில் ஊருக்குத் தெற்கே இருந்துள்ளது. இதனையே எசாலம் செப்பேடு ஐந்தளி மாதேஸ்வரர் கோயில் என்கிறது. ஐந்தளி என்பது ஒரே திருச்சுற்றுக்குள் இருக்கும் ஐந்து கோயில்களைக் குறிப்பிடும். ஐந்தளியே பிற்காலத்தில் பலதளி என்ற பெயரைப் பெற்றது எனலாம். திருவோத்தூர் வேதபுரீஸ்வரர் கோயிலில் உள்ள முதலாம் இராசநாராயண சம்புவராயரின் கல்வெட்டொன்றில் பலதளிப்பூசை இடம்பெறுகிறது. சூலக்கல்லில் உள்ள சிதைந்த சாசனம் வருமாறு:

தேவர் .... ஸ்ரீ காம

போகம் .... தேவன்

அழகன் .... செய்கை த பொன்

தனிநபர் ஒருவர் கோயிலுக்கு வழங்கிய தானம் இதில் கூறப்பட்டுள்ளது. எசாலம் போன்றே எண்ணாயிரத்திலும் ஒரு சிவன் கோயில் சோழர் காலத்தில் கட்டப்பட்டது. பராமரிப்பின்றி இக்கோயில் சிதைந்தபின் இக்கோயிலுக்குரிய கருங்கற்களை மயிலம் முருகன் கோயில் மதில் சுவர் எழுப்பப் பயன்படுத்தி உள்ளனர். இக்கற்கள் சிலவற்றில் எண்ணாயிரம் ஊர் மற்றும் கோயில் குறித்துச் சிதைந்த கல்வெட்டுகள் உள்ளன. ஊர்மக்கள் மொத்தமாகக் கற்களைப் பொம்மையார்பாளையம் வீரசைவ ஆதீனத்திற்கு விற்றதாகவும் மாட்டு வண்டியின் மூலம் இக் கற்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் உள்ளூர் மக்கள் கூறுகின்றனர். சிதைந்த கோயில் கற்களைக் கொண்டு வேறுகோயில் திருப்பணிகளுக்குப் பயன்படுத்தியதைப் பல கோயில்களில் காணலாம்.

முற்றமும் நந்தவனமும்

ஸ்ரீகோயிலும் முற்றமும் நந்தவனமும் சேர்ந்து கணக்கிடப்பட்டுள்ளது. கோயிலுக்கு முன்புறம் முற்றமும் கோயிலுக்குப் பின்புறம் அல்லது கிழக்கு நீங்கலாக மூன்று புறமும் நந்தவனமும் அமைப்பதுண்டு. நந்தவனம் பூந்தோட்டமாகும். ஐந்தளிமாதேஸ்வரர்கோயில் நந்தவனத்துடன் பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ளது செப்பேட்டால் தெளிவாகிறது.

பிடாரியார் ஸ்ரீகோயில்

பிடாரியார் ஸ்ரீ கோயிலும் முற்றமும் 1 மா அளவுக்கு மேல் இருந்துள்ளன. இன்று எசாலம் பள்ளிக் கூடத்திற்கு அருகில் ஒரே கல்லில் சப்தமாதர் எழுவர் புடைப்புச் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது. எங்கிருந்து இக்கல் சிற்பத்தைக் கொண்டு வந்தனர் என்பது தெரியவில்லை. எண்ணாயிரம் எல்லையை யொட்டிய பிடாரிப்பட்டு என்று கிராமத்தில் ஒருபிடாரி கோயில் சாசனத்துடன் உள்ளது. சாசனம் இராசராசன் காலத்தில் வெட்டப்பட்டுள்ளது. தாய்மார் எழுவரைச் சாசனம் சுட்டுகிறது. எசாலம் செப்பேட்டில் வரும் பிடாரியார் கோயில் கி.பி. 1008இல் இராசராசன் ஆணைப்படி கூவாகன் வேளான் ஆரூரன் என்பவன் ஊர்க்காரியம் செய்கின்ற நூற்றுப்பதின்மரைப் பணித்துள்ளான்.. இங்குள்ள சப்தமாதர் தனித்தனிக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளனர். ஆயின் எசாலத்தில் உள்ள சப்தமாதர் ஒரே கல்லில் கூடியவர்கள். இவர்களையே செப்பேடு குறிப்பிடுகிறது எனலாம்.

அய்யனார் ஸ்ரீ கோயில்

அய்யனார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் சேர்ந்த நிலம் பிடாரியார் கோயில் நில அளவைவிடவும் குறைவு ஆகும். 3/4 மாநிலப்பரப்பு இருந்துள்ளது. எண்ணாயிரம் எல்லையில் ஓர் அய்யனார் கோயில் உள்ளது. கோயில் சிறிதாக இருக்கிறது. சோழர் காலக் கோயில் எனலாம். எனவே செப்பேட்டில் இடம் பெறும் அய்யனார் கோயில் இதுவாக இருக்கலாம். இந்த அய்யனாரைப் போற்றி வழிவழியாகப் பாடப்பட்டு வரும் நாட்டுப்புறப் பாடல் உண்டு. பலவரிகளைக் கொண்ட இப்பாடலைக் கொடுமுடி சண்முகம் பதிப்பித்துள்ளார். எசாலம் ஊருக்கு மேற்கில் ஏரிக்குக் கீழ் ஓர் அய்யனார் கோயில் உள்ளது. இங்கே மரங்களுக்கிடையே பூரணி புஷ்கலையுடன் கூடிய அய்யனார் சிறிய வடிவில் உள்ளார். சிற்ப வடிவை நோக்கும் போது இவர் கி.பி.15,16ஆம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்டவர் எனலாம். எனவே இவர் செப்பேட்டில் இடம்பெறும் அய்யனார்

அல்லர் எனலாம். எனவே முன்பே குறிப்பிட்டதற்கிணங்க எண்ணாயிரம் எல்லையில் உள்ள அய்யனாரே செப்பேட்டில் இடம்பெறும் அய்யனார் எனலாம். எண்ணாயிரம் எசாலம் அருகே உள்ள ஊர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கம்மாளர் சேரி

எசாலம் செப்பேட்டில் கம்மாளர் சேரி அல்லது கம்மாணர்சேரி மூன்று மா நில அளவு கொண்டது என்பதை முன்னர்க் குறிப்பிட்டோம். சாகுபடிக்கு வேண்டிய கலப்பை, சால், உருளை மற்றும் வண்டி, கதவு போன்றவற்றைச் செய்து தருகின்ற கம்மாளர் ஒரே பகுதியில் வாழந்ததால் கம்மாளர்சேரி என அழைக்கப்பட்டது. கம்மாள் ஐந்தொழில் செய்பவர் என்பதால் பஞ்சகம்மாளர் எனப்படுவர். சில ஊர்களில் தச்சர் குடியிருக்கும் தெரு தச்சர் தெரு என்றும் மிகுதியாகத் தச்சர்வாழும் ஊர் தச்சூர் என்றும் வழங்கப்படும். கொல்லர் வாழும் தெரு கொல்லர் தெரு என வழங்கப்படும். கொல்லர் அல்லது தச்சர் ஒவ்வோர் ஊரிலும் ஓரிருவர் கண்டிப்பாக இருப்பர். அவருக்காக நிலமும் இருக்கும். மாறாக எசாலத்தில் மிகுதியாகக் கம்மாளர் இருந்ததால் கம்மாளர்சேரியே சோழர் காலத்தில் இருந்துள்ளது. கோயிலில் 23 ஐம்பொன் சிலைகளைச் செய்தவர்கள் இவர்கள் அன்றோ! சில ஊர்களில் தச்சன்கழனி என்று பெயரிருப்பின் ஒருகாலத்தில் தச்சருக்கு மானியமாக வழங்கப்பட்ட கழனி எனலாம். சேயாற்றுக் கடுத்த விசாரிப்பட்டு என்ற சிற்றூரில் என் தந்தை விலைக்கு வாங்கிய கழனி தச்சன் கழனி என்றே இன்றளவும் அழைக்கப்படுகிறது. மேலும் செப்பேட்டில் கம்மாளர்சேரி என்றிருந்தது தற்போது இல்லை. எனினும் எசாலம் அருகே பெரியதச்சூர் என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது.

பறைச்சேரி

சேரி என்ற சொல் மக்கள் சேர்ந்துவாழும் பகுதியைச் சுட்டும். பார்ப்பனர் சேர்ந்து வாழும் பகுதி பார்ப்பனச் சேரி என வழங்கப்பட்டது. இதே போல் பறையர் சேர்ந்து வாழும் பகுதி பறைச்சேரி என வழங்கப்பட்டது. எசாலம் செப்பேட்டில் பறைச்சேரி இடம்பெற்றுள்ளது. கம்மாளர் சேரியின் நில அளவே இதற்கும் இருந்ததைச் செப்பேட்டில் காண்கிறோம். பயிர்த் தொழிலில் இவர்களுடைய பங்கும் முக்கியமாகும். உழுவித் துண்ணும் வேளாளருக்கு இவர்களே பயிரிட்டு வழங்குபவர் எனலாம். மேலும் ஊரில் நடைபெறும் நல்லது கெட்டது செய்திகளைப் பறை அறைந்து தெரிவிக்கும் பறையர், சமூகத்தின் ஆணிவேர் எனலாம். இன்றைக்கும் கிராமங்களில் அறுவடை

செய்யும் போது வெட்டியானுக்கென ஒரு கட்டு நெல் ஒவ்வொரு குடும்பமும் தருவதைக் காண்கிறோம். தற்போதும் பறையன் நிலம் என்றும் வெட்டியான் நிலம் என்றும் ஊர்களில் நிலங்கள் இருப்பதைக் காண்கிறோம். பறையர்கள் மிகுதியாக வாழ்ந்த ஓர் ஊர் பறையன் தாங்கல் என்றே செஞ்சி வட்டத்தில் தற்போதும் வழங்கப்படுகிறது. தற்போது சேரி என்று அழைத்தாலே பறைச்சேரி என்று பொருள்படும் விதத்தில் இருக்கும் கொடுமையை என் சொல்வது? சங்ககாலத்தில் குடி என்றாலே துடியன் பாணன் பறையன் கடம்பன் என்ற நான்கே என்று கூறுவர்.

கன்று மேய் பாழ்நிலம்

கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் நிலம் கன்று மேய் பாழ்நிலமாகும். எசாலம் செப்பேட்டில் 2 வேலிக்கு மேல் இந்நிலம் கூறப்பட்டுள்ளது. மந்தைவெளி எனவும் இது அழைக்கப்படும். சென்னை மந்தைவெளி முற்காலத்தில் கால்நடை மேய்ச்சல் நிலமாக இருந்திருக்க வேண்டும். ஒவ்வோர் கிராமத்திலும் கன்று மேய் பாழ் நிலம் இருந்தால்தான் கால்நடைகளுக்குப் புல் கிடைக்கும். மேலும் பயிரிடப்படும் விளைச்சலும் காப்பற்றப்படும். தற்போது பல ஊர்களில் மந்தைவெளியே இல்லை. புறம்போக்கை ஆக்கிரமிப்பது போல் சிலர் கன்று மேய் பாழ்நிலங்களையும் மடக்கி உள்ளனர்.

சுடுகாடு

எசாலம் செப்பேட்டில் சுடுகாட்டுக்கான நில அளவு குறிப்பிடப்பட்டதை முன்பு கண்டோம். இடுகாடு என்றும் சுடுகாடு என்று அழைக்கப்படும் மயானப்பகுதி ஒவ்வோர் ஊரிலும் நீர் நிலையையொட்டி அமைந்துள்ளது. நல்லூர் என்ற பாடல் பெற்ற மாடக் கோயில் உள்ள தலத்தில் சோழர்காலத்தில் சுடுகாட்டுக்குச் செல்லும் வழி பெருநீர் மழை வெள்ளம் காரணமாகப் பாதை சரியாக இல்லாததால் மாடக்கோயில் ஒட்டியே பிணம் கொண்டு செல்லும் சூழ்நிலை உருவானது. எனினும் கோயிலுக்கருகே பிணத்தை எடுத்துச் செல்வதற்குக் கோயில் பணியாளர்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். எனவே பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தின் வழியாக எடுத்துச் செல்ல முடிவாயிற்று. பெருமாள் கோயிலுக்கும் இவ்விடத்திற்குமிடையே இடைவெளி மிகுதியாகும். விஷ்ணு கோயில் இடத்தைப் பொது இடமாக ஊரவை மாற்றியதால் இதற்குப் பதிலாகச் சிவன் கோயிலுக்குச் சொந்தமான அதுவும் விஷ்ணு கோயிலுக்கருகில் உள்ள நிலம் ஒப்படைக்கப்பட்டது. எனவே பிணம் கொண்டு செல்வது தொடர்பாகச் சிக்கல் வராமல் முற்காலத்தில் பார்த்துக் கொண்டனர்.

தற்போது ஆக்கிரமிப்புக் காரணமாகப் பிணம் கொண்டு செல்ல அகன்றபாதை இல்லாததுடன் பிணமும் புதைக்க வழியின்றிச் சிரமப்பட நேர்கிறது.

ஏரிநீர் கோவை நிலம்

ஏரிநீர் பாயக்கூடிய தொடர்ச்சியான நிலம் அல்லது முதல் மடை பாயும் வளமான நிலம் என்று பொருள் கொள்ள வேண்டும். எனினும் ஏரிநீர்கோ நிலம் என்று கொண்டால் பொருத்தமாக இருக்கும். கோ- அரசன். அரசனுக்கு ஊர்களில் நிலமிருந்துள்ளது. மழை வறண்ட காலத்திலும் ஏரியில் மிகுதியான நீர் இல்லாத போதும் அதாவது சிறிய அளவில் நீர் இருக்கும்போது அதனைப் பயன்படுத்தி விவசாயம் செய்வர். ஏரி அருகே உள்ள நிலம் இதுவெனலாம். எசாலம் செப்பேட்டில் ஏரிநீர்க் கோவை நிலமும் கூறப்பட்டுள்ளது.

களரும் உவரும் கூடின நிலம்

பயிர்த் தொழிலுக்குப் பயன்படாததுடன் புல்வெளிக்கும் உபயோகமில்லாத களரும் உவரும் கூடின நிலம் ஒவ்வொரு ஊரிலும் இருப்பதுண்டு. எசாலம் செப்பேட்டில் இத்தகுநிலம் சுட்டப்படுகிறது.

> **உளரென்னும் மாத்திரையர் அல்லார் பயவாக்**
> **களரனையர் கல்லா தவர்**

என எதற்கும் பயன்படாதவரை வள்ளுவர் சாடுகிறார். இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் விளக்கம் தரும்போது களர் தானும் பேணற்பாடு அழந்து உயிர்கட்கும் உணவு முதலியன உதவாதது என்று கூறுவார். களர் பயன்படாததுபோல் கடல் நீர் கலந்த நிலம் உவர் நிலமாகிவிடுவதால் பயிரிட முடியாமல் போவதைக் காண்கிறோம். களி மண்ணும் உப்பு மண்ணும் சேர்ந்த நிலத்தில் பயிர்த்தொழில் செய்ய இயலாது என்க.

வாய்க்கால்கள்

நன்னாட்டு வட கீழ் மூலையில் இராசராச சதுர்வேதி மங்கலத்து இராசசூளாமணி வாய்க்காலுக்குத் தெற்கில் எண்ணாயிரம் இருந்துள்ளது. ஏரிக்கு நீர்பாயும் சிற்றாறு, செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. இராசேந்திரசோழ வாய்க்கால் என இரண்டு வாய்க்கால்கள் செப்பேட்டில் உள்ளன.

செப்பேட்டில் இடம்பெறும் கோயில்கள்

எசாலம் செப்பேட்டில் பல கோயில்கள் குறிப்பிடப்பட்டு அக்கோயில்களுக்குரிய நிலங்களை நீக்கி எஞ்சிய நிலங்களே இராமீஸ்வரர் கோயிலுக்கு அளிக்கப்பட்டன. இனி எசாலம் செப்பேடு கூறும் கோயில்களைக் காண்போம்.

1. இராசராசவிண்ணகர்

எசாலத்தையொட்டி எண்ணாயிரம் என்ற ஊரும் அவ்வூரில் தொன்மை வாய்ந்த கோயில்களும் உள்ளன. இராசராச விண்ணகர் என்ற விஷ்ணு கோயில் முதலாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

2. திருமாலிருஞ் சோலை

எண்ணாயிரத்தில் உள்ள மற்றோர் விஷ்ணு கோயில் இதுவாகும். எண்ணாயிரம் கல்வெட்டில் இடம்பெறும் மூலத்தானமுடையார் கோயில் இதுவாக இருக்கலாம்.

3. திருவாய்பாடி தேவர்

எண்ணாயிரத்தில் இருந்த ஒரு கோயில். குந்தவை விண்ணகர் என்று சாசனத்தில் திருவாய்பாடி தேவர்கோயில் உள்ளது. அக்கோயிலாக இருக்கலாம்.

4. கருணாகர பிரிய தேவர்

இதுவும் எண்ணாயிரத்தில் இருந்துள்ளது. சுந்தரசோழ விண்ணகர் கோயிலாக இது இருந்திருக்கலாம்.

தேவதானத்தில் இடம்பெறாத பிற பகுதிகள்

1. இராச சூளாமணி வாய்க்காலுக்குத் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதி.
2. சிற்றாறு வடகரைப் புழுதிப்பாடு.
3. சிற்றாறு தென்கரைப் புழுதிப்பாடு.
4. களர் புற்று.
5. அழிஞ்சில் மேடு.
6. புங்கமேடு.

7. மூன்றாம் கண்ணாற்றுத் தென்னெல்லை வடவாய்க்கால்.
8. நிகரிலி சோழ வாய்க்காக் கால்.
9. செயங்கொண்ட சோழவதி
10. நத்தம்.
11. பழவாய்க்கால்.
12. முதல் கண்ணாறு.
13. இராசேந்திர சோழவாய்க்கால் வடக்கு.

மேற்கண்ட இடங்களுக்கு இருகோல் அல்லது முக்கோல் தள்ளி இராமீஸ்வரர் கோயிலுக்குரிய தேவதான நிலம் வரையறை செய்யப்பட்டது. மேற்கண்ட பகுதிகள் இராமீஸ்வரர் கோயில் தேவதான நிலத்திற்கு இடையே எல்லாப் பகுதிகளிலும் இருந்தமை தெரிகிறது.

தானத்தில் இடம்பெறும் நிலங்களும் இடங்களும்

1.	நீர் நிலம்	-	நன்செய்
2.	புன்செய்	-	கொல்லை என்றும் பொறடை என்றும் புஞ்சை என்றும் அழைக்கப்படும்.
3.	ஊர்	-	எய்தார் கிராமம்.
4.	ஊரிருக்கை	-	குடியிருப்புகள் - வீடுகள்.
5.	ஸ்ரீகோயில்கள்	-	பல தளிகள்
6.	திருமுற்றங்கள்	-	கோயிலுக்கு முன்புறமுள்ள திறந்த வெளிகள்.
7.	மனை	-	காலிமனை அல்லது வீடு.
8.	மனைப்படைப்பை	-	வீடும் வீட்டுத் தோட்டமும்.
9.	கடை	-	தனித்தனியாக உள்ள கடை
10.	கடைத்தெரு	-	அங்காடி அல்லது பசார்.
11.	கம்மாணச்சேரி	-	கம்மாளர் வாழும் பகுதி.
12.	பறைச்சேரி	-	பறையர் வாழும் பகுதி.
13.	சுடுகாடு	-	ஊருக்குப் பொதுவான இடுகாடு.
14.	மன்று	-	ஊரவை கூடும் இடம். தருமபுரி கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தற்போதும் மண்டு என்ற பெயரில் மன்றுகள் உள்ளன. பொது இடம் என்க.

15. கன்றுமேய் - மேய்ச்சல் நிலம்.

16. குளம் - ஊருணி மற்றும் காட்டுக்குளம்

17. கொட்டகம் - பசுக்கொட்டில் அல்லது கால்நடை அடைக்கும் இடம்.

18. கிடங்கு - பண்டகசாலை அல்லது தானியக் கிடங்கு.

19. கேணி - கிணறு.

20. புற்று - எறும்பு அல்லது கறையான் கட்டிய மண்மேடு. புத்து என்பது கொச்சை.

21. தெற்றி - மேட்டிடம் - திண்ணைக்கும் தெற்றி என்று பெயருண்டு.

22. படுதுறை - படித்துறை - நீராடு மிடம்.

23. காடு - வனப்பகுதி.

24. பீடிலிகை

25. கல் - மலை அல்லது பாறை

26. உவர் - உப்புத்தன்மை கொண்ட நிலம் உவரி.

27. களர் - களிமண் பகுதி. பயிரிட முடியாத நிலம்.

28. ஆறு - பேராறு, சிற்றாறு, காட்டாறு என்றெல்லாம் வேறுபடும்.

29. ஆறிடும் படுக்கை - நீர் தேங்கும் இடம். ஆற்றோரத்து நிலம்.

30. ஓடை - தேங்கி நிற்கும் நீருள்ள பகுதி. சிற்றோடை, ஓடையின் சிறியது.

31. உடைப்பு - ஏரியில் உடைப்பு எடுக்கும் பகுதி.

32. ஏரிநீர் கோப்பு - நீரைத்தேக்கி என்க.

33. கரையட்டி - வரப்பு உயர்த்தி என்க.

34. ஏரி - கண்மாய், தடாகம் என்றெல்லாம் வழங்கப்படும்.

35. மீன்பயில்பள்ளம் - பள்ளத்தில் மீன்கள் குறிப்பாக ஆரா, கெண்டை, உழுவை இருக்கும்.

36. தேன்பயில்பொதும்பு- மிகுதியான மலருள்ள பகுதி; சோலை எனலாம்.

மேற்கண்ட முப்பத்தாறுடன் மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் உடும்போடு ஆமை தவழ்ந்தது எவ்வகையும் சேர்த்துப் பல்வேறு பாசன வசதிகளுடன் இராமீஸ்வரர் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்டது. தானம் செய்த போது காராண்மை (நிலத்தைப் பயிரிடும் உரிமை) மீயாட்சி (நிலத்தில் மேல்வாரம் மிகுதிக் குறையையும் உள்ளடங்க) உன்னிலம் ஒழிவின்றித் தானம் வழங்கப்பட்டது.

தேவதானம் பெற்றவருக்கு உரிய உரிமைகள்

1. தேவதான நிலத்திற்கு நீரை வாய்க்கால் கல்லிப் பாய்ச்சவும் வாரவிடவும் உரிமை உண்டு. வார விடுதல் -- குடியிறைக்கு விடுதல்.

2. இவ்வூருக்குப் புறவூர் நிலத்தாறு போந்து முன்புபோல் ஆற்றுக் காலாலும் வாய்க்காலாலும் குமிழிகளாலும் மடைகளாலும் நடைநீர் பாயவும் வாரவிடவும் உரிமைஉண்டு. குமிழி என்பது ஊற்று நீராகும்.

3. தேவதானம் பெற்றவர் நீங்கலாக அந்நியர் ஈண்டுக் குறுங்கறுத்துக் குத்தவும் குற்றேத்தமிடவும் கூடைநீர் இறைக்கவும் பாலி பாய்ச்சவும் விலங்கடைக்கவும் உரிமையில்லை. குறுங்கறுத்து - கரையின் குறுக்கே வெட்டி என்க. குற்றேத்தம் - ஏற்றத்தின் மூலம் நீர் இறைத்தல். கூடை நீர் - கூடையின் மூலம் வாரி வாரி நீர் இறைத்தல். தற்காலத்தில் குட்டைகளில் மீன் பிடிப்போர் பாத்தி கட்டி நீர் இறைத்துச் சேற்றில் மீன் பிடிப்பதைப் பார்க்கலாம். பாலிபாய்ச்சல் என்பது முளைப்பாலிகைக்கு நீர் பாய்ச்சுதல். விலங்கடைத்தல் - வேலி அடைத்தல். இனி விலங்குகள் (ஆடு, மாடுகள்) அடைத்தல் என்றும் கொள்ளலாம். கிராமங்களில் ஆடுகளைக் கிடை மடக்குதல் இன்றுமுண்டு.

4. சென்னீர் - செந்நீர் என்க. பொதுவினை செய்யாததாக அதாவது செந்நீர்ப் பொதுவினை - கால்வாய் பராமரிப்புக்கான கட்டாய ஊழியம் செய்தல் என்க.

சென்னீர் என்பது புது வெள்ளமாகும். செந்நீர்-தெளிந்த நீர் என்பதால் குடிநீராகவும் குறிப்பிடலாம்.

5. அன்னீர் (அந்த நீர்) மேலே சொன்ன சென்னீர் அடைத்துப் பாய்ச்ச தேவதானம் பெற்றவருக்கு உரிமையுண்டு.

6. இவ்வூர் ஏரிக்குக் கோக்குமளவும் கோக்கத் துங்கள் நிலத்தில் கரைகட்டிக் கொள்ளத் தானம் பெற்றவருக்கு உரிமையுண்டு. ஏரியில் குறைந்த நீர் இருந்தாலும் நீர் பெறுவதற்கு உரிமையுண்டு. நீரைத் தேக்கிக் கொள்ள என்க.

7. தானம் பெற்றவர்கள் சுட்ட ஓட்டினால் மாடமாளிகை கட்டிக் கொள்ளலாம்.

பழங்காலத்தில் கோயில்கள் நீங்கலாக எழுப்பப்படும் கட்டடங்கள் யாவும் சுட்ட ஓடுகளின் மூலமே கட்டப்பட்டன. அரண்மனையும் அதிகாரிகளின் வீடுகளும் விசேட உரிமை பெற்றவர்களின் வீடுகளும் சுட்ட ஓடுகளின் மூலம் கட்டப்பட்டன. கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேடு, சேந்தமங்கலம் ஆகிய ஊர்களில் இந்நூல் ஆசிரியர் அகழாய்வுகள் மேற்கொண்ட போது ஆயிரக்கணக்கான கூரை ஓடுகள் வெவ்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் கண்டறியப்பட்டன. எசாலத்திலும் மேற்பரப்பு ஆய்வில் சுட்ட கூரை ஓடுகள் சேகரிக்கப்பட்டன.

8. துரவு : துரவு என்பது நீர் நிலையாகும். கிணறு என்றும் கூறலாம். தோப்புத்துரவு என்ற மரபுத் தொடர்காண்க. கிணறு இழிச்சிப் பெறுவதற்கு அதாவது பெருங்கிணறும் கேணியும் எடுப்பதற்கு உரிமை உண்டு. இதற்காக மற்றவரின் அனுமதி தேவை இல்லை.

9. மரம் வளர்த்தல் : பல்லூருவில் பயன்மரம் வளர்த்துக் கொள்வதற்குத் தேவதானம் பெற்றவருக்கு உரிமையுண்டு. காவும் தெங்கும் கமுகும் பனையும் பலாவும் மா மரமும் தமணகமும் செண்பகமும் செங்கழுநீரும் ஏற்படுத்திக் கொள்ள உரிமையுண்டு.

10. செக்கிடுதல் : பெருஞ்செக்கிடப் பெறுவதாக என்று வாசகம் இருப்பதால் பெரிய அளவில் செக்கு வைக்க அனுமதி தேவைபோலும். தேவதானம் பெற்றவருக்கு

அனுமதி தேவையில்லை. சோழர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட செக்குகள் குறித்துச் சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

11. கள்தடை செய்யப்பட்ட பகுதி : 'இவ்வூர் எல்லை வட்டத்துக்குட்பட்ட இடத்தில் தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாததாகவும்' என்ற வரியின் மூலம் கோயிலை ஒட்டிய பகுதியில் கள் இறக்குதல் தடை செய்யப்பட்டது தெரிகிறது. சங்ககாலம் முதல் தமிழர்கள் குடிப்பதில் ஈடுபாட்டுடன் இருந்து வருகின்றனர். அக்காலத்தில் தென்னங்கள்ளும் பனங்கள்ளும் பெருமளவில் மக்களால் அருந்தப்பட்டன. ஈச்சங்கள்ளும் குடிமக்களால் குடிக்கப்பட்டன. மகேந்திரவர்மனுடைய மத்த விலாச பிரகசனம் என்ற சமசுகிருத நாடகத்தில் ஆணுக்குப் போட்டியாகப் பெண்ணும் கள் அருந்தியதாகக் காண்கிறோம். சங்கப்பாக்களைப் பாடிய அவ்வையார் சிறியகள், பெரியகள் பற்றிக் குறிப்பிடுகிறார். கள் குடித்தல் தீய ஒழுக்கம் என முதன் முதலில் கூறிய வள்ளுவர் கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்தையே பொருட்பாலில் இடம் பெறச் செய்துள்ளார். அவரே காமத்துப்பாலில்

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு

எனக் குறிப்பிடுகிறார். பிற்காலச் சோழர் காலத்தில் கோயிலை ஒட்டியும் பிராமணர் வாழ்ந்த பகுதியிலும் கள் இறக்க, தடை செய்யப்பட்டது. நடுகற்களாகிய தெய்வங்களுக்கு நாட்படு கள் வைத்து வழிபடும் மரபு சங்க காலம் முதல் இருந்து வருகிறது. ஊருக்குத் தள்ளியே பல நடுகற்கள் இருப்பதை நோக்க வேண்டும். கோயில் வழிபாட்டுக்கு இளநீர், தேங்காய் வேண்டியிருப்பதால் தென்னைமரம் கோயில் ஒட்டி வளர்த்தாலும் கள் இறக்குவதற்குத் தடைசெய்யப்பட்டது. பனம்பழமும் சிலகோயில்களில் நிவேதித்துள்ளனர். மேலும் பல தலங்களுக்குப் பனைமரமே தல விருட்சமாகவும் உள்ளது. சான்றாகத் திருப்பனங்காடு, திருப்பனந்தாள், திருவோத்தூர், பனையபுரம் போன்ற ஊர்களைக் குறிப்பிடலாம். ஈழவரைச் சிறுகுடிவேளாளர் என்று பேரூர்ப் பட்டயம் கூறுவதாக தொல்லியல் அறிஞர் திரு. நெல்லை நெடுமாறன் குறிப்பிடுகிறார்.

பல ஊர்களில் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டோர்க்கு வரிவிதித்ததைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. ஈழவர் கோயில் ஒட்டிய பகுதியில் கள் இறக்காததற்கு, ஓர் விவஸ்தை (உடன்பாடு) கண்டு பரிஹாரம் (வருவாய்க்கு வழி) பெற்றுள்ளனர். இதே செப்பேட்டின்

வேறிடத்தில் ஈழப்பூட்சி என்ற கள் இறக்குவதற்குரிய வரி கூறப்பட்டுள்ளது. எனவே கோயிலை ஒட்டிய பகுதியில் தென்னைமரமும் பனை மரமும் வளர்க்கலாம். ஆனால் கள் இறக்கக் கூடாது. தற்காலத்தில் கோயிலருகேயும் கல்விச் சாலை அருகேயும் அரசினர் மதுக்கடைகள் இருப்பதை யாரிடம் சொல்லி முறையிடுவது?

வரிகள்

எசாலம் செப்பேட்டில் இடம்பெறும் வரிகள் வருமாறு;

1.	நாடாட்சி	-	நாட்டின் நிர்வாகத்திற்கான வரி
2.	ஊராட்சி	-	ஊர்க்காரியங்களை நிர்வகிப்பதற்கான வரி.
3.	வட்டி நாழி	-	நாழிகை வட்டில் எனவும் கூறப்படும் நிலத்திற்கு நீர் பாய்வதற்கான நேரத்திற்கேற்ற வரி என்பர்.
4.	பிதாநாழி	-	புதாநாழியாக இருக்க வேண்டும். வீட்டு வாசல் நிலையைக் கணக்கிட்டு அதற்கேற்ப நாழி, நெல்லாகப் பெற்ற வரி போலும்.
5.	வண்ணாரப்பாறை	-	வண்ணாரிடம் வசூலிக்கும் வரி. சிதம்பரம் வண்ணாரச் சாதி மடத்திற்கு விசயநகர மன்னர் அச்சுதராயர் வழங்கிய செப்பேட்டின் வரை கோட்டு உருவங்களில் வண்ணார் துணி துவைக்கும் கல் காட்டப் பட்டுள்ளது. ஈண்டுக் கவனத்தில் கொள்ளலாம். வண்ணாரப்பாறை ஆகுபெயராய் வரியைச் சுட்டுகிறது.
6.	கண்ணாலக்காணம்	-	திருமணத்துக்காக மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் செலுத்தும் காணிக்கை. சில மடாதிபதிகளுக்கான பிற்காலச் செப்பேடுகளில் மேற்படி வரியினை

மடாதிபதியிடம் தருமாறு கூறப்பட்டுள்ளது.

7. இடைப்பாட்டம் - இடையர் செலுத்தும் வரி.

8. குசக்காணம் - குயவர் செலுத்தும் வரி.

9. தறிஇறை - தறிநெய்வோர் செலுத்தும் வரி.

10. தட்டார் பாட்டம் - தட்டாராகிய பொற்கொல்லர் செலுத்தும் வரி

11. தட்டழிப்பாட்டம் - ஸ்ரீபலி நடக்கும்போது சேமக்கலம் போன்ற ஒருவகை வாத்தியம் இசைக்கப்படும். இதற்கான வரி இது போலும்.

12. ஈழப்பூட்சி - ஈழவர் கள் இறக்கச் செலுத்தும் வரி. ஈழம்- பொன், பொன்னை வைத்திருப்பவர் செலுத்தும் வரி என்றும் கூறுவர்.

13. மன்றுபாடு - நியாய விசாரணை என்ற சபைக்குத் தண்டும் வரி. அபராதம் என்றும் கூறலாம்.

14. பழவிறை - பழையவரி. நிலுவையில் உள்ள வரி எனலாம்.

15. தீய்எரி - விறகு எரிப்பதற்கான வரி அல்லது அக்கினி வார்த்து ஓமம் போடுவதற்கான வரி.

16. விற்பிடி - கிரயசாசனம்.

17. வாலமஞ்சாடி - மனையின் வால் வீச்சுக்கணக்கில் இடும் பணம் என்பர். இனி வால்வரி எனக்கொண்டு வாலுடைய கால் நடைகளை வைத்திருப்போர் செலுத்தும் வரி என்றும் கூறலாம்.

18. நல்லா - பசுவளர்ப்பதற்கான வரி.

19. நல்லெருது - எருது வைத்திருப்பதற்கான வரி.

20. நாடுகாவல் - நாடு என்னும் பிரிவின் காவலுக்குச் செலுத்தப்படும் வரி.

21. ஊடுபோக்கு - பயிர்களுக்கிடையே வைக்கும் ஊடுபயிர்க்கான வரி? ஊடு - நடுவே என்க.

22. இலைக்கூலம் - இலையுடன் கூடிய தானிய வகை அல்லது கீரைக்கான வரி.

23. நீர்க்கூலி - தண்ணீர்வரி

24. உல்கு - சுங்கவரி

25. ஓடக்கூலி - படகிற்காகச் செலுத்தும் வரி.

இங்கே கூறப்பட்டுள்ள மேற்படிவரிகள் அரசுக்குச் செலுத்தாமல் திருவிராமீசுரர் கோயிலுக்குச் செலுத்தப்படவேண்டும். கோயில் நிர்வாகம் மேற்படி வரிகளை அரசிற்குத் செலுத்தத் தேவையில்லை. பனையூர் நாட்டு நாட்டார்கள் அறவோலை செய்து தருகின்றனர். அறவோலை செய்யும் அலுவலர்கள் உடனிருந்து கருமத்தை முடிக்கின்றனர். செப்பேட்டில் இடம்பெறும் அதிகாரிகளின் விபரம் வருமாறு:

1. காஞ்சிபுரத்துத் திருமுக ஆராய்ச்சிக்களத்து ஸ்ரீ கிருஷ்ணன் பட்டன்.

2. புரவுவரித் திணைக்கள நாயகம் கணிச்சைப் பாக்க முடையான் அரங்கன் பணிச்சை.

3. ஸ்ரீ ராஜ ராஜ சதுர்வேதி மங்கலம் தண்டுகிற உடுத்தூர் உடையான் என்பான்பூரன்.

தலைநகரில் இருந்த உயரதிகாரிகள் வருமாறு: முதலாம் இரசேந்திர சோழன் வாய்மொழியாகப் பிறப்பித்த ஆணையை ஓலையிலும் பின்பு செப்பேட்டிலும் எழுதவும், மன்னன் உத்தரவை நடைமுறைப்படுத்தவும் அதிகாரிகள் பலர் இருந்துள்ளனர். அவர்களுள் அரசன் ஆணையைக் கேட்டு ஓலையில் எழுதியவன் மும்முடிச் சோழநல்லூர் கிழவன் சிங்கனான மும்முடிச் சோழன் என்பவன் ஆவான். இக்கால வழக்கில் கூறுவது என்றால் மன்னரின் நேர்முக உதவியாளர் (Personal Assistant) எனலாம். மும்முடிச்சோழன் எழுதிய ஓலையைக் கீழ்க்கண்ட அலுவலர்கள் பார்வையிட்டு ஒப்புதல் அளித்துள்ளனர். இக்கால வழக்கில் கூறுவது என்றால் துறைச் செயலர்கள் என்றும் கூறலாம்.

1. சாவூர்ப் பரஞ்சோதியான ராஜேந்திர சோழக் கந்திருவப்பேரரையன் என்பவன் ஓலைநாயகம் என்ற உயர்பதவியில் இருந்துள்ளான். இவன் சோனகன் ஆவான். முகமதிய ஆடவனைச் சோனகன் என்று சாசனங்களும் இலக்கியங்களும் கூறும். இந்தச் சோனகன் கங்கை கொண்ட

சோழபுரத்து இராஜவிச்சாதிரப் பெருந்தெருவில் குடியிருந்துள்ளான். முக்கியப் பதவியில் இருந்த இவனுடைய சொந்த ஊர் சாவூர் ஆகும். சாவூர் என்ற ஊர் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள சாக்கோட்டையா? செஞ்சியருகே உள்ள சேவூரா? அல்லது வேறு ஊரா? தெரியவில்லை. இவருடைய முழுப் பெயரையும் நோக்கும் போது மதம் மாறிய முஸ்லீமாகத்தான் தோன்றுகிறது. இக்காலம் போல முற்காலத்தில் அராபிய மொழிச் சொல்லாகப் பெயர் வைக்காமல் தமிழ் நாட்டு மரபுப்படி பெயர் வைத்துள்ளனர். சோனகன் என்பதைச் சோழகோன் என்று நடன. காசிநாதன் படித்துள்ளார். இரா.நாகசாமி சோழகன் என்று படித்துள்ளார். இவ்விரு பெயர்களும் சாசனங்களில் அடிக்கடி வரும் பெயர்கள் என்றாலும் எசாலம் செப்பேட்டில் சோனகன் என்றே உள்ளது. யவனர், சோனகர் இருவரையும் ஒன்றாகக் கூறும் மரபு இருப்பினும் பிற்காலத்தில் சோனகர் என்பதை முஸ்லீமைச் சுட்டவே பயன்படுத்தி உள்ளனர்.

2. கங்கை கொண்ட சோழ அணி முரி நாடாள்வான் கோவ நாச்சனான் என்பவன் மற்றொரு அதிகாரியாவான். அணிமுரி செஞ்சி அருகே உள்ளது. எனவே இவ்வூரைச் சேர்ந்தவன் எனலாம்.

3. நராக்கன் மாராயன் அருமொழியான உத்தம சோழ பிரம்ம மாராயன் என்பவன் ஆக்ஞாப்தி ஆவான் (ஆணத்தியாவான்). இவன் உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தக சதுர்வேதி மங்கலம் என்ற ஊரைச் சேர்ந்தவன். அருமொழி, கேரளாந்தகன் என்ற பெயர்கள் முதலாம் இராசராசனுக்குரியவை. உத்தம சோழன் என்பது முதலாம் இராசேந்திர சோழனுக்குரியது. (செம்பியன் மாதேவியின் மகனான மதுராந்தகனுக்கும் உத்தமசோழன் என்ற பெயர் உண்டு). தஞ்சை மாவட்டத்தில் கேரளாந்தக நல்லூர்இருந்துள்ளது என்பதைத் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டும் குறிப்பிடும். இதே கேரளாந்தக நல்லூர் செய்யாறு வட்டத்தில் உள்ள அத்தி என்ற ஊருக்குச் சோழர் காலத்தில் பிரதிப் பெயராக இருந்துள்ளது. அத்தியான கேரளாந்தக நல்லூர் என்பது கல்வெட்டு வாசகமாகும்.

4. நாராயணன் எடுத்த பாதமான உத்தம சோழகோன் என்பவன் இங்க நாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் துளார் என்ற ஊரைச் சார்ந்தவன். திருவழுந்தூர் துளார் ஆகிய ஊர்கள் மயிலாடுதுறை அருகே உள்ள ஊர்கள் ஆகும். சோழகோன் என்ற பட்டப் பெயரில் பல அதிகாரிகளைக் கல்வெட்டுகளில் காண்கிறோம். கோப்பெருஞ் சிங்கனுடைய அதிகாரிகளுள் ஒருவன் சோழகோன் ஆவான். பிச்சாவரம் ஜமீன் மரபினர் சோழகோன் எனத் தற்போதும் வழங்கப்படுகின்றனர்.

எசாலம் செப்பேட்டில் மேலே கூறப்பட்ட நான்கு அதிகாரிகளும் ஓலையை ஒப்பிட்டுப் பார்த்தபின் வரிவிதிக்கும் அலுவலர் உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து நராக்கன் மாராயன் ஜகநாதனான ராஜேந்திர சோழபிரம்மாதி ராஜன் உடன் கூட்டத்துக் கருமம் ஆராயும் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளான். நராக்கன் மாராயன் அருமொழியான உத்தமசோழன் இவனுடைய சகோதரன் எனலாம் . உடன் கூட்டத்துக் கருமம் ஆராயும் அலுவலர்கள் பின்வருமாறு.

1. கடம்பன் மாநகரனான இருமுடிசோழ மூவேந்த வேளான், ராஜராஜ பாண்டியநாட்டு மதுராந்தக வளநாட்டு வடதலை செம்பிநாட்டுத் தத்தை நல்லூர் உடையான் என அழைக்கப்பட்டுள்ளான். இருமுடி சோழன் என்பது முதலாம் இராசராசனுக்குரிய பட்டப்பெயராகும். மூவேந்தவேளான் என்பது ஒரு பதவிப் பெயராகும்.

2. நாராயணன் பொற்காரியான கோன் மூவேந்த வேளான் அருமொழிதேவ வளநாட்டு வலிவலக் கூற்றத்து ஆலத்தூர் உடையான் மற்றோர் அதிகாரி ஆவான். இவனும் மூவேந்த வேளான் பட்டப் பெயரைக் கொண்டுள்ளான். மேற்கண்ட இருவரும் பிராமணர் அல்லாத அலுவலர்கள் எனலாம்.

3. சாண்டில்ய கோத்திரத்துக் காத்தியாயன சூத்திரத்து உப்பம்பிரால் சங்கரன் சோலை பிரான் பட்ட சோமயாஜி என்பவன் நடுவிருக்கும் சத்திரிய சிகாமணி வளநாட்டு வெண்ணாட்டு ராஜேந்திர சோழ சருப்பேதி மங்கலத்தைச் சேர்ந்த அதிகாரியாவான். இவன் பிராமணர் குடியில் பிறந்தவன் எனலாம்.

4. உத்தம சோழ பல்லவதரையன் விடையில் எனும் அதிகாரியாவான். இந்நாட்டுச் சிறுகூற்று நல்லூர் கிழவன்

கொல்லை புரத்தானான் எனவும் இவன் அழைக்கப்பட்டான்.

5. வீரபத்திரன் தில்லை விடங்கரான ராஜேந்திர சோழ மூவேந்தவேளான் ஓர் அதிகாரி ஆவான்.

6. ராஜேந்திர சிங்க வளநாட்டு திருக்கழுமல வளநாட்டு வீரசோழநல்லூர் உடையான் ராஜேந்திர சோழ மூவேந்த வேளான் மற்றோர் அதிகாரியாவான்.

7. இந்நாட்டுத் திருவிந்தளூர் நாட்டு மதுராந்தக நல்லூர் உடையான் வேங்கடவன் எறிந்தொடியான பரகேசரி மூவேந்த வேளானும் ஓர் அதிகாரியாவான்.

8. மாந்தைக்கிழான் மாறன் மனநிலையான நித்த வினோத மூவேந்த வேளான் உய்யக் கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டவன் ஆவான். இவனும் ஓர் அதிகாரியாவான்.

9. காளி ஆதித்தனான முடிகொண்ட சோழ மூவேந்தவேளான் ஓர் அதிகாரியாவான். இவன் ஜனநாத நல்லூர் உடையான் என அழைக்கப்பட்டுள்ளான்.

10. கோயில் சித்தனான சோழ பாண்டி மூவேந்த வேளான் என்பவனும் அரசு அதிகாரியாவான். இவன் நித்த வினோத வள நாட்டு வெண்ணிக் கூற்றத்துக் குவளைவேலி உடையான் எனவும் அழைக்கப்படுகிறான். இவன் கருவூர் சித்தர்போல ஓர் சித்தன் போலும். இங்குள்ள பதின்மரில் ஒருவர் நீங்கலாக எஞ்சியோர் பிராமணர் அல்லாதவராக இருந்துள்ளனர்.

நடுவிருக்கும் ராஜராஜ பாண்டி நாட்டு ராஜேந்திர சோழவள நாட்டுச் சோழபாண்டிய வள நாட்டுத் திருப்புத்தூர் என்ற ஊரைச் சேர்ந்த உரோச்சன் வஸந்தயாஜி ஸ்ரீ கிருஷ்ண நாராயணபட்ட வஸந்தயாஜி என்னும் புரவுவரி திணைக்களத்து அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. முதலில் புரவுவரி திணைக்களத்துக் கண்காணிகள் இருவர் பெயர்களைக் காணலாம். நிலவரி கணக்கு ஒழுங்காக எழுதப்பெற்று ஊரவையில் வைக்கப்பட்டனவா? என மேற்பார்வை பார்க்கும் அதிகாரிகளில் ஒருவர் பெயர் திரு நறையூர் நாட்டுச் செம்பியன் நல்லூர் உடையான் நின்றான் பட்டன் என்பதாகும். இந்தச் செம்பியன் நல்லூர் மயிலாடுதுறை

வட்டத்தில் உள்ள ஊர் எனலாம். இவ்வூரில் புதிய கற்காலக் கருவிகள் இரண்டு கிடைத்துள்ளன. ஒன்றில் சிந்து சமவெளி எழுத்துகள் இருப்பதாக ஐ. மகாதேவன் குறிப்பிடுகிறார். மற்றொருவர் ராஜாஸிரிய வளநாட்டு வடவழி நாட்டுத் திருவெள்ளறை உடையான் திருவாழி ஆதித்தன் ஆவார். ராஜாஸிரியன் என்பது இராசராசனுக்குரிய விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். திருவெள்ளறை என்ற ஊர் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. வைணவத்தலமுள்ள இவ்வூரில் சுவஸ்திக் வடிவக்கேணி உள்ளது.

மேற்கண்ட இரு அதிகாரிகளுக்குக் கீழ் மூன்று சிறிய அலுவலர்கள் இருந்துள்ளனர். நிலவரிக்கணக்குகளை இவர்கள் கவனித்துக் கொண்டார்கள். ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத் திருமுனைப்பாடி நாட்டு ஆன்மூர் நாட்டு நல்லூர் உடையான் மருதன் சங்கரன் அம்மூவரில் ஒருவன் ஆவான். ஆன்மூர் என்பது ஆமூர் என அழைக்கப்படுகிறது. அப்பர் சுவாமிகள் பிறந்த ஊர் இதுவாகும்.

காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கலுடையான் பனங்காடன் குமாரகாளன் என்பது இரண்டாவது அலுவலன் ஆவான். உக்கல் செய்யாறு வட்டத்தில் அதே பெயரில் காஞ்சி-வந்தவாசி நெடும்பாதையில் உள்ளது. பனங்காடன் என்ற பெயர், திருப்பனங்காடுடையார் என்ற இறைவன் பெயரைச் சுட்டியவனைக் குறிப்பிடுகிறது.

திருமுனைப்பாடி நாட்டு ஆன்மூர்நாட்டுக் கணிச்சைப் பாக்கமுடையான் அரங்கன் பனிச்சை என்பவன் மூன்றாவது அதிகாரியாவான். பாக்கம் என்ற ஊர் அதே பெயரில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது. மேலே குறிப்பிட்ட மூவருடன் இரு கண்காணிகளும் சேர்ந்து பணியாற்றியதைச் செப்பேடு கூறுகிறது.

வரிப்பொத்தகம்

வரிப்பொத்தகம் என்ற பதவியில் இரு அதிகாரிகள் இருந்துள்ளனர். அவ்விருவரில் ஒருவர் ராஜராஜ வளநாட்டுப் பேரெயிற் கூற்றத்து அண்டையூர் உடையார் திருக்கன்காரி ஆவார். மற்றொருவர் உய்யக் கொண்டார் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுச் சோழபுரமுடையான் அடிகள் காடன் ஆவார். திருநறையுர், சோழபுரம் ஆகிய ஊர்கள் கும்பகோணம் வட்டத்தில் உள்ளன.

வரிப்பொத்தகக் கணக்கு

வரிப்பொத்தகக் கணக்கு என்ற பதவியில் சங்கத்தியம்பக முடையான் தாழி நாராயணன் என்பவன் இருந்துள்ளான் என்று செப்பேடு கூறுகிறது. அரசுக்கு ஒவ்வோர் ஊரிலிருந்தும் வருவதற்குரிய அரசிறை எவ்வளவு என்பதை உணர்த்தும் பொத்தகம் வரிப்பொத்தகம். இப்பொத்தகத்தை வைத்திருக்கும் அலுவலர் வரிப்பொத்தகம் எனப்பட்டார். இவருக்கு மேற்பட்ட அதிகாரி வரிப்பொத்தக நாயகன் ஆவான். ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வோர் ஊரில் காணி வைத்திருப்பவர்களிடம் வாங்கவேண்டிய நிலவரியும் பிறவரிகளும் இவ்வளவு என்பதும் அவற்றுள் அரசிற்குச் செலுத்திலுள்ள நிலவரி இவ்வளவு என்பதும் செலுத்தாமல் எஞ்சியிருக்கும் தொகை இவ்வளவு என்பதும் வரையப்பெற்றுள்ள கணக்குப் பொத்தகம், வரிப்பொத்தகக் கணக்கு எனப்படும். அக்கணக்கினை வைத்திருக்கும் அதிகாரியும் வரிப்பொத்தகக் கணக்கு என அழைக்கப்பட்டார்.

முகவெட்டி

எசாலம் செப்பேட்டில் முகவெட்டி என்ற பதவியில் இருந்த மூவர் குறிப்பிடப்படுகின்றனர். ஊர்களின் பெயர்கள் முதலான பலவற்றிற்கும் அட்டவணை தயாரித்து அவற்றை வரிப்பொத்தகம் முதலியவற்றில் எளிதில் தேடிக்காண்பதற்கு உதவிபுரியும் பதவி முகவெட்டிஎன்ற பதவியாகும். மிழலைக் கூற்றத்துக் கீழ்க்கூறு ஏம்பலுடையான் பட்டாலகன் சேந்தன் என்பவன் மூன்று முகவெட்டிகளுள் ஒருவன் ஆவான். புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டத்தில் ஏம்பல் என்ற ஊர் உள்ளது. மிழலைக் கூற்றம் பல சாசனங்களில் இடம்பெற்றுள்ளது. ஏம்பல் என்ற ஊரைத் திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள் என்ற நூலில் காணலாம்.

இரண்டாவதாக இடம்பெற்றுள்ள முகவெட்டி, ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து மாங்காடு நாட்டு உகும்பில் வல்லங்கிழான் கேசவன் ஆவான். மாங்காடு என்ற ஊர் சென்னையருகே உள்ள புகழ்பெற்ற ஊராகும்.

மூன்றாவதாகக் கூறப்படும் முகவெட்டி, காலியூர் நாட்டு அய்யங்குளத்தூர் நெற்குன்றங்கிழான் தாழி திருவேளி ஆவான். காஞ்சிக்கருகில் அய்யங்கார்குளம் உள்ளது. நெற்குன்றம் சென்னை- பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அதே பெயரில் உள்ளது. இப்பெயரைக் கொண்ட வள்ளல் ஒருவர் நெற்குன்றவாணர் என அழைக்கப்பட்டதைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணலாம். வீரராகவும் கவிஞராகவும் சிற்றரசராகவும் இவர் இருந்துள்ளார்.

வரியிலீடுசெய்பவர்

வரிப்பொத்தகத்தில் நிலவுரிமை பற்றி அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களைத் தலைவர் சிலர் முன்னிலையில் குறிப்பிடுபவரே வரியிலீடு செய்பவராவர். அரசு இறைக்கணக்கைக் கவனிப்பவர் இவர் எனலாம். பாலையூர் கிழவன் செட்டி கொற்றமழவன் ஆலன் பொற்றேவான் மற்றும் கண்ணந்தை வாணியன் கோவன் பிசங்கன் என்ற இருவரும் வரியிலீடு செய்யும் அதிகாரிகள் ஆவார்கள். பாலையூர் கண்ணந்தை என்னும் ஊர்கள் பல மாவட்டங்களில் இருப்பதால் குறிபிட்டுச் சொல்ல முடியவில்லை.

பட்டோலை

நாள்தோறும் கிராமத்தில் நடப்பனவற்றை நிகழ்ச்சிக் குறிப்பில் எழுதிவைப்பவர் பட்டோலை என வழங்கப்பட்டார். எசாலம் செப்பேட்டில் சிகாருடையான் அரங்கன் மற்றும் மேலூர் கிழவன் குணநிலை அத்தியூரன் என இரண்டு பட்டோலை அதிகாரிகள் இருந்துள்ளனர்.

முகவெட்டி வரிப்பொத்தகம், வரியிலீடு செய்பவர், பட்டோலை போன்றோர் துணையுடன் புரவுவரித் திணைக்களம் என்ற அதிகாரி வரிவிதிப்பு, வசூல்பணியினைச் சோழர் காலத்தில் மேற்கொண்டார். புரவுவரித் திணைக்களம் நல்லூர் உடையான் மருதன் சங்கரனும் வரிப்பொத்தகக் கணக்கு பூண்டி உடையான் அரங்கன் நாரணனும், வரியிலீடு பாலையூர், கிழவன் கொற்றனும், பட்டோலை அத்தியூரனும் ஒன்று கூடி மன்னன் ஆட்சியாண்டு 24 நாள் 76இல் வரியிலிட்டுப் பதிவு செய்கின்றனர். மன்னன் ஆணை 66 நாள்கள் கழித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளமையைக் காண்கிறோம்.

கண்காணி அன்றாடும் வகை செய்கின்ற உடுத்தூர் உடையான்பூரனும் புரவுவரித்திணைக்களம் அரங்கன் பணிச்சை மற்றும் கிருஷ்ணன் பட்டனும் ராஜராஜ சதுர்வேதி மங்கலம் மற்றும் ஜனநாத சதுர்வேதி மங்கலம் என்ற இரு ஊர் நாட்டார்களுடன் கூடி, பிடி சூழ்ந்து பிடாகை நடந்து, எல்லையை வரையறை செய்துள்ளனர். இச்சம்பவத்திற்குமுன் உயரதிகாரிகள் கையொப்பம் இட்டுள்ளார்கள். நிலம் அளக்கப்பட்ட விவரம் அதாவது எல்லை நிர்ணயம் செய்த விவரம் செப்பேட்டில் விரிவாக உள்ளது. எசாலம் செப்பேட்டில் 198ஆவது வரிமுதல் 231ஆவது வரி வரை இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்தி உள்ளது. மெய்க்கீர்த்தி தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளதால் அது பாடல் வடிவில் இங்கே தரப்படுகிறது.

இராசேந்திரன் மெய்க்கீர்த்தி

திருமன்னி வளர இருநில மடந்தையும்
போற்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுஞ்
தன்பெருந் தேவிய ராகி இன்புற
நெடுதிய லூழியுள் ளிடைதுறை நாடுந்
துடர்வட வேலிப் படர்வன வாசியுஞ்
சுள்ளிச் சூழ்மதிள்க் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற்க் கருமுரண் முண்ணைக் கடக்கமும்
பொருதடர் ஈழத் தரைசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ரோங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவன் வைத்த
சுந்தர முடியும் இந்திர நாரமுந்
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்
எறிபடைக் கேரளர் முறைமையிற் சூடுங்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவல் பல்பழந் தீய்வுஞ்
செருவிற் றினவில் இருபத் தொருகால்
லரைசு களைகட்ட பரசு ராமன்
மேல்வருஞ் சாந்திமத் தீய்வரன் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முசங்கியில் முதுகிட்
டொளித்த ஜயசிங்கன் அளப்பரும் புகழொடு மிடயல்
இரட்டப் பாடி ஏழ்ழரை இலக்கமும்
நவநெதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்
முதுர்வட வல்லை மதுர மண்டலமும்
காமிடைவள நாமணைக் கோணையும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பார்சடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில் வண்கீர்த்தி யாதிநகரவையில்
சந்திரன் தொல்குலத் திந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை ஒட்ட விஷையமும்
பூசுரர் சேர்நல் கோசலை நாடுந்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணுகத் தாக்கித்

திக்கனை கீர்த்தித் தக்கண லாடமுங்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோட
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகடல் சங்கு வொட்டமகி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும்
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கையும்
அலைகடல் நடுவுட்ப் பலகலஞ் செலுத்தி
சங்கி ராம விசையோறத் துங்க
பன்ம நாகிய கடாரத் தரயனை வாகையம்
பொருகடல்க் கும்பக் கரியொடும் அகப்படுத்
துரிமையில் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ நகர்நெகப் போர்த்தொழில் வாசலில்
விச்சாதிர தோரணமு மொத்தொளிர்
புனமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைஸ்ரீ விஜயமுந் துறைநீர்பன்னையும்
பன்மலை யூரெயிற் றொன்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோபமும்
கோப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும்
காவலம் புரிசை மேவிலிங்கமும்
வினைப்பைந் தூறுடை வளைப்பந்தூறும்
கலைத்தக்கோர் புகழ்தலைத் தக்கோலமுந்
தீய்தமர் வல்வினை மாதமலிங்கமும்
கலாமுதிற் கடுந்திற விலாமுரி சேசமுன்
தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்
தொடுகடற்க் காவற்க் கடுமுரட்க் கடாரமும்
மாப்பொரு தண்டாற்க் கொண்ட
கோப்பரகேசரி பன்மரான உடையார்
ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு
யாண்டு இருபத் தைஞ்சாவது நாள் ஐம்பத்தைஞ்சினால்

என்று மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. திருமந்திர ஓலை நாயகத்தின் பெயர் மாத்தூருடையான் சம்பன் படையடக்கி என்பதாகும். உய்யக் கொண்டார் வளநாட்டு விளைநாட்டு மாத்தூரைச் சேர்ந்தவன். இவனுடன் மேலும் நான்கு அதிகாரிகள் சேர்ந்து பனையூர் நாட்டார்க்கு அரசாணையை அனுப்பி வைக்கின்றனர். வேறு சிலருக்கும் ஆணை அனுப்பி வைக்கப்படுகிறது.

1. திருமந்திர ஓலை நாயகனான சாவூர் பரஞ்சோதியான ராஜேந்திர சோனகன்.
2. கங்கைகொண்ட சோழ அணிமுரி நாடாழ்வான்.
3. நராக்கன் மாராயன் உத்தமசோழ பிரம்மராயன்.
4. எடுத்த பாதமான உத்தமசோழச் சோழகோன்.

மேற்கண்ட நால்வரே ஆணை அனுப்பிவைத்தவர்கள் ஆவார்கள். உத்தரவை ஓலையில் எழுதியவன் சிங்காணி மும்முடிச் சோழன் ஆவான். நாட்டார்க்குத் திருமுகம் எழுதியவன் நம்பன் பகையடக்கி ஆவான் (திருமுக-கடிதம்). அதிகாரிகள் அனுப்பிவைத்த திருமுகத்தைக் கண்ட நாட்டார் எதிரே சென்று வணங்கித் திரு முகத்தைத் தலைமேல் வைத்து எல்லை சுற்றி வந்துள்ளனர். மன்னரின் ஆணைக்கு அக்காலத்தில் அவ்வளவு மரியாதை இருந்தது.

பனையூர் நாட்டு ராஜராஜ சதுர்வேதி மங்கலத்தாரும் வாவலூர் நாட்டு ஜனநாத சதுர்வேதி மங்கலத்தாரும் நிலம் அளக்கிறபோது அரசிடமிருந்து வந்த மூன்று அதிகாரிகளும் துணை புரிந்தனர்.

தேவதானமாகப் பனையூர் நாட்டு நாட்டார் அறவோலை செய்து கொடுக்கின்றனர். இப்பணியில் மூவர் இடம் பெற்றுள்ளனர்.

சான்றாளர்கள்

செப்பேட்டில் கண்ட தானத்திற்குச் சான்றொப்பம் இட்டவர்கள் முப்பத்தைந்து நபர்கள் ஆவார்கள். அவர்களுடைய பெயர்கள் வருமாறு

1. துறவியான குஞ்சரமல்ல சருப்பேதி மங்கலத்து ஆரிதன் மாதவன் தேவநேன்.
2. குஞ்சரமல்ல சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த காச்யபன் சங்கரன் தியம்பகனேன். குஞ்சரம் என்பது யானையைக் குறிப்பிடும் வடசொல். யானை மீது அமர்ந்த வீரன் என்பதே குஞ்சரமல்லனுக்குப் பொருளாகும். யானை மேல் துஞ்சிய முதலாம் இராசாதித்யனை இச்சொல் குறிக்கும் போலும். அத்திகோசத்தாரும் யானைப்படை தலைவரைச் சுட்டும்.
3. இவ்வூர் கௌதமன் திருவரங்கன் திருமாலிருஞ் சோலையனேன்.

4. ஆரிதன் சுவாமி சடையனேன்.

5. பனையூர் நாட்டு நாட்டார் உத்தரவுப்படி அறவோலை செய்து கொடுத்தவன் ஸ்ரீ ராஜராஜ சதுர்வேதி மங்கலத்து கரணத்தான் நக்கன் அண்ணாமலையான் நாங்கூர்ப் பெருகாவிதியாவான். நாங்கூர் என்பது பூம்புகார் அருகே உள்ள ஊராகும். பெருங்காவிதி என்ற பட்டத்தையும் இவன் பெற்றுள்ளான். ஏனாதி, காவிதி, மாராயன் போன்றவை பட்டப் பெயர்களாகும்.

6. ஸ்ரீ ராஜ ராஜ சருப்பேதிமங்கலத்து ஸ்ரீ மதுராந்தகச் சேரி பசலை அய்யன் நாராயணனேன்.

7. இவ்வூர் லோகமாதேவிச் சேரி மந்திரத்து நாராயணன் கிரமவித்தனேன்.

8. இவ்வூர் பெரியவானவன் மாதேவிச்சேரி செம்புரை திருவிக்கிரமன் பரமேஸ்வ ர பட்டனேன்.

9. இவ்வூர் உத்தமசோழச்சேரி வானவன் மாதேவி நாராயண சீராமனேன்.

10. இவ்வூர் ராஜராஜசேரி குலகுத்தி செட்டகரண கிரமவித்தனேன்.

11. இவ்வூர் ஸ்ரீசோழகுல சுந்தரிசேரி காராந்தி சீராகவ கிரமவித்தனேன்.

12. இவ்வூர் ஸ்ரீவானவன் மாதேவிச்சேரி இருங்கண்டி ஸ்ரீமாதவ பட்டனேன்

13. இவ்வூர் ஸ்ரீஅருள்மொழி தேவச்சேரி மருதூர் பாலாசிரியன் சேந்தன் அரியனேன். பாலாசிரியர் என்ற அடைமொழியால் இவன் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் சொல்லித்தந்தவன் என்று அறிகிறோம்.

14. இவ்வூர் ஸ்ரீவானவன் மாதேவிச்சேரி அம்பிக்குரவசரி மாதவ கிரமவித்தனேன்.

15. இவ்வூர் ஸ்ரீசேர சூளாமணிச்சேரி துவேதை கோமபுறத்துக் கோள பூதி விக்கிரம வித்தனேன்.

16. இவ்வூர் சுந்தர சோழச் சேரி வெண்ணிச்செட்டுக் கனகசுவாமி பட்டனேன்.

செப்பேட்டில் வரி 6 முதல் 16 வரை ஸ்ரீ ராஜராஜ சதுர்வேதி மங்கலத்தில் இடம்பெறும் சேரிகள் இடம் பெறுகின்றன.

யாவும் சோழ மன்னர் அல்லது அரசியர் பெயர்களாகவே அமைந்துள்ளன.

17. ஜனநாத சதுர்வேதி மங்கலத்து உத்தமசோழச்சேரி தள்ளாமாற நாராயணனேன்.

18. இவ்வூர் ராஜசுந்தரச் சேரி ஆத்தூரக்கூர் சங்கண கிரம வித்தனேன்.

19. இவ்வூர் கங்கைகொண்ட சோழச்சேரி ஏநலூர் ஸ்ரீ ராம கிராமவித்தனேன்.

20. இவ்வூர் இராஜராஜசேரி கோளரி கேசவ கிரம வித்தனேன்.

21. இவ்வூர் ஜனநாதச் சேரி குண்டூர் நந்தி பெருமான் கிரமவித்தனேன்.

22. இவ்வூர் விக்கிரம சோழச் சேரி தாழன் ஸ்ரீபட்டய கிரமவித்தனேன்.

23. இவ்வூர் சோழ கேரளச்சேரி அரசூர் நாராயணன் சூரிய தேவனேன்.

24. இவ்வூர் சோழபாண்டியச் சேரி கணிநல்லூர் ஆதங்கி ஈஸ்வரபட்டனேன்.

25. இவ்வூர் மதுராந்தகச் சேரி ராயூர்பூதி சன்மப் பட்டனேன்.

26. இவ்வூர் முடிகொண்ட சோழச்சேரி குரவசரி நாராயண தேவக்கிர சோமயாஜியேன்.

27. இவ்வூர் ராஜேந்திர சோழச்சேரி கோமபுறத்துத் திருவெண்காட கிரமவித்தனேன்.

28. திருவாமாத்தூர் வெள்ளாளன் வெளிகிழான் ஆமாத்தூர் அண்ணாமலையனேன். திருவாமாத்தூர் இன்றும் அதேபெயரில் விழுப்புரம் வட்டத்தில் உள்ளது. இதுபாடல் பெற்ற தலமுமாகும்.

29. இவ்வூர் கவிசியன் அமுதன் பராக்கிரமனேன்.

30. இவ்வூர் ஆத்திரையன் வெண்காடன் மோடனேன்.

31. பொய்கை நாட்டு அருமொழி தேவபுரத்து வியாபாரி கருக்கனட்டனேன்.

32. இவ்வூர் வியாபாரி கலியன் கோவிந்தனேன்.

33. இவ்வூர் வியாபாரி சூரியனேன்.

34. இந்நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானம் கொண்டோஞ்சி வெள்ளாளன் ஆர்க்காடு கிழான் பட்டாலிகன் கண்டனேன்.

35. இவ்வூர் வெள்ளாளன் மாதவன் சுந்தரனேன்.

36. இவ்வூர் வெள்ளாளன் சாத்தனூருடையான் முகத்தைத் தனிய நாச்சனேன்.

பிராமணர், வைசியர், வேளாளர், க்ஷத்திரியர் என நான்கு வருணத்தாரும் ஒப்பம் இட்டுள்ளார்கள். சான்றொப்பம் இட்டுள்ளவர்களில் குஞ்சரமல்ல சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த நால்வர் இடம்பெறுகின்றனர். நால்வரும் பிராமணர் ஆவர். அவர்களில் ஒருவர் துறவி. இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்தவர்கள் பதினொரு பேர் ஒப்பம் இட்டுள்ளார்கள் இவர்கள் பத்துச் சேரிகளில் இருந்துள்ளார்கள். யாவரும் பிராமணர். பல்வேறு கோத்திரத்தவர்களாகவும் அவர்கள் இருந்துள்ளனர். பல தொழில் செய்தவர்களாகவும் இருந்துள்ளனர். ஒருவர் மட்டும் ஆசிரியர் ஆவார். எண்ணாயிரத்தில் உள்ள கல்வெட்டொன்று வேதக் கல்லூரியையும் பாடம் பயிற்றுவிக்கும் வடமொழி ஆசிரியர்களையும் விரிவாகக் கூறுகிறது. மற்றோர் கல்வெட்டு திருவாய்மொழி பிரபந்தம் ஓதப்பட்ட விவரத்தைக் கூறுகிறது. எனவே எசாலம் செப்பேட்டில் இடம்பெறும் பாலாசிரியர் தமிழ் கற்பித்த ஆசிரியர் எனலாம். சங்கப் புலவர் பெயர்களுள் சிலரின் பெயரில் பாலாசிரியர் அல்லது இளம்பாலாசிரியர் அடைமொழி இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நடுகற்களில் வரும் பாலாசிரியர் கொள்ளை அடித்த கால் நடைகளைப் பங்கிட்டுத் தரும் பெரியவர் எனலாம் (பால்-பகுதி என்று இங்கே பொருள் கொள்க).

இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தில் பத்துச் சேரிகளின் பெயர்கள் யார் யார் பெயரில் வழங்கப்பட்டன என்பதை எளிதில் கூறிவிடலாம்.

1. மதுராாந்தகசேரி - முதலாம் இராசேந்திரனுடைய இயற்பெயரில் அமைந்த சேரி. வேறு சிலருக்கும் மதுராந்தகன் என்ற பெயருண்டு.

2. லோகமாதேவிசேரி - இராஜராஜனுடைய பட்டத்தரசியான லோகமாதேவி

பெயரில் அமைந்தது. திருவையாறு ஐயாரப்பர் கோயில் வளாகத்தில் இவ்வம்மன் எடுப்பித்த கோயில் லோகமாதேவீச்சுரம் என அழைக்கப்பட்டுள்ளது.

3. பெரியவானவன் மாதேவி சேரி - இராஜராஜனின் தாயும் சுந்தர சோழனின் மனைவியுமான வானவன் மாதேவி பெயரில் அமைந்தது.

4. உத்தமசோழன்சேரி - கண்டராதித்தனின் மகன் பெயர் உத்தம சோழன் என்றாலும் இப்பெயர் முதலாம் இராசேந்திரனுடைய பட்டப்பெயரான உத்தமசோழன் பெயரில் ஏற்பட்டதாகும்.

5. இராஜ்ராஜ சேரி - முதலாம் இராஜராஜன் பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

6. சோழகுல சுந்தரிசேரி - இராஜராஜனின் தமக்கை குந்தவையே சோழகுல சுந்தரி எனலாம். எனவே அவர் பெயரில் ஏற்பட்டது.

7. வானவன் மாதேவிசேரி - முதலாம் இராஜேந்திரனின் தாயார் பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

8. அருண்மொழிதேவன் சேரி - இராஜ ராஜனுடைய இயற்பெயரான அருள்மொழி என்ற பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

9. சேரர்குல சூளாமணி சேரி - இராஜ ராஜனின் பட்டப் பெயர்களுள் ஒன்றில் ஏற்பட்ட சேரி இதுவாகும்.

10. சுந்தரச்சேரி - சுந்தர சோழன் பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

ஜனநாத சதுர்வேதி மங்கலத்தில் அமைந்த 11 சேரிகளும் அரசகுலப் பெயர்களிலேயே அமைந்துள்ளன.

1. உத்தம சோழசேரி - இராசேந்திரனுடைய பட்டப் பெயரில் ஏற்பட்ட சேரி.

2. ராஜசுந்தரி சேரி - இராசேந்திரனின் தங்கை குந்தவையே ராஜ சுந்தரியாவார். இவர் பெயரில் ஏற்பட்ட சேரி எனலாம்.

3. இராஜராஜசேரி - இராசராசன் பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

4. ஜனநாத சேரி - இராசராசனுக்குரிய விருதுப் பெயர்களுள் ஒன்றான ஜனநாதன் பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

5. கங்கைகொண்ட சோழசேரி - கங்கைகொண்ட சோழன் எனப் பட்டம் பெற்றவன் முதலாம் இராசேந்திரன். எனவே அப்பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

6. சோழகேரள சேரி - முதலாம் இராசராசனுக்குச் சோழகேரளன் என்ற பெயர் உண்டு. எனினும் முதலாம் இராசேந்திரனுக் குரிய பிள்ளைகளில் ஒருவனான சோழகேரளன் பெயரில் ஏற்பட்ட சேரி என்பது பொருத்தமாகும்.

7. சோழபாண்டியசேரி - முதலாம் இராசேந்திரனுடைய மூத்த மகன் இராசாதிராசனுக்குச் சோழ பாண்டியன் என்ற பெயருண்டு. இப்பட்டப் பெயரில் ஏற்பட்ட சேரி எனலாம்.

8. மதுராந்தக சேரி - இராசேந்திரனுடைய இயற்பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

9. முடிகொண்டசோழ சேரி - இராசேந்திரனுக்குரிய முடிகொண்ட சோழன் பெயரில் ஏற்பட்ட சேரி. இப்பெயரில் பல கல்வெட்டுகள் உள்ளன.

10. விக்கிரமசோழசேரி - விக்கிரமசோழன் என்ற பெயர் இராசேந்திரனுக்குரிய பட்டப் பெயர்களுள் ஒன்றாகும். இப்பெயரில் ஏற்பட்ட சேரியாகும்.

11. இராசேந்திர சோழ சேரி - முதலாம் இராசேந்திரனின் பெயரில் ஏற்பட்ட சேரியாகும். இரண்டாம் இராசேந்திரன் பெயரில் ஏற்பட்ட சேரி எனினும் பொருத்தமாகும். இவன் முதல் இராசேந்திரனின் இரண்டாவது பிள்ளையாவான்.

பனையூர் நாட்டில் மூன்று சதுர்வேதிமங்கலங்கள் இருந்துள்ளன. எனவே பிராமணர் குடியிருப்புகள் மிகுதியாக இருந்ததில் வியப்பில்லை. ஜனநாத சதுர்வேதி மங்கலத்திற்கு முன்பே எண்ணாயிரம் என்ற பெயர் இருந்தது. அப்பெயரே தற்போது உள்ளது. குஞ்சரமல்ல சதுர்வேதி மங்கலம்; ஜனநாத சதுர்வேதி மங்கலம்; விக்கிரம சோழ நல்லூர் போன்ற பெயர்கள் தற்போதில்லை.

ஆணை பிறப்பித்து நிறைவேற்றிய அதிகாரிகள்

உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தக சருப்பேதி மங்கலத்து நராக்கன் மாராயன் ஜனநாதனான இராஜேந்திர சோழ பிரம்மாதி ராஜன் ஆணையிட, கீழ்க்கண்ட உடன் கூட்டத்து அதிகாரிகள் தானத்தைச் செயல் படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். முதலில் மன்னன் ஆணையைத் தயாரித்த அதிகாரிகளையும் பின்னர் நிறைவேற்றி வைத்த அதிகாரிகளையும் இச்செப்பேட்டில் தெளிவாகக் காண்கிறோம். எனவே இருவிதப் பணிகளிலும் வெவ்வேறான நபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உடன் கூட்டத்து அதிகாரிகள்

1. கா்லியூர் நாட்டு உக்கலுடையான் மாகாளன் அதியசோழன் மூவேந்தவேளார்.
2. விளைநாட்ட அரசூருடையான் அறிவறிந்த கயிலாயத்துக் குமார விச்சாதர மூவேந்தவேளான்.
3. திருவிந்தளூர் நாட்டு அரிந்தமன் நல்லூர் உடையார் ஸ்ரீ வெண்காடனான கண்டராதித்த மூவேந்தவேளான்.

விடையில் அதிகாரிகள்

1. திருவழுந்தூர் நாட்டு மாந்தை கிழார் மாறன் ம--யரான நித்த வினோத மூவேந்தவேளான்.
2. சிறுகூற்று நல்லூர் கிழவர் கொல்லை புத்த நாராயணச் சோழப் பல்லவரையன்.

புரவு வரித்திணைக்களத்துக் கண்காணி

1. சநரியலுடையான் திருப்பொரி திருவேங்கடம் இராஜ ராஜன் மதுராந்தக இளங்கோ வேளான்.
2. நராக்கன் மாராயன்.
3. பூம்புலியூர் உடையன் கோவச்சநான ஜெயங்கொண்ட சோழ அணிமுரி நாடாள்வான்.

4. சோனகன் சாவூர் பரஞ்சோதியான இராசேந்திர சோழ திருவப்பேர் அரையன்.

5. துளாருடையான் நாராயணன் எடுத்த பாதமான உத்தம சோழ வேளான் நெப்பை உடையான் அம்பலவன் கணபதி.

புரவுவரித்திணைக்களம்

வேம்பத்தூர் உடையான் வேங்கடவன் ஆட வல்லான் ஆன்மூர் நாட்டுக் கணிச்சைப்பாக்க முடையான் அரங்கன் பணிச்சை.

வரிப்பொத்தகம்

அண்டையூர் உடையான் திருக்கண்காரி.

முகவெட்டி

1. கொத்தமங்கலமுடையான் கோன் ஆதித்தன்
2. கீழ்க்கூற்று ஏம்பலுடையான் பட்டாலகன் சேந்தன்.

வரிப்பொத்தகக் கணக்கு

பெரும்பேடு கிழான் குன்றன் வேளான்.

வரியிலீடு

பாலையூர்க்கிழவன் கதவன் மருதன்

பட்டோலை

பாட்டூருடையான் வல்லங்கிழான் சாத்தன் சிற்றேரி

அறவோலை வரியிலிடுவித்த புரவுவரித் திணைக்களம்

சோழமண்டலத்துப் புரவுவரித் திணைக்களத்து வரியிலிடுகிறவன், மங்கலமுடையான் மூதரன் சங்கெருமான், முகவெட்டி அருமொழி பராந்தகன் ஆகியோர் ஆவர்.

பட்டயத்தின் இறுதியில் ஒப்பமிட்ட ஐவர் தொடக்கத்திலும் இடம் பெறுகின்றனர். செப்பேட்டின் தமிழ்ப் பகுதியின் தொடக்கம் கோநேரின்மை கொண்டான் என்று தொடங்குவதை முன்பே குறிப்பிட்டோம். அரசனுடைய நேர்முக ஆணை என்று பொருளாகும். தனக்கு வேறோர் ஒப்பு இல்லாத மன்னன் என்றும் பொருள் உண்டு.

1. நாட்டார் - நாட்டார்சபை.
2. பிரமதேயக்கிழவர் - பிரமதேய ஊர்களுக்குரியவர்.

3. தேவதானம் - சிவன் கோயிலுக்கு விடப்பட்ட நிலம்.

4. பள்ளிச் சந்தம் - சமணர் அல்லது பௌத்தர் கோயிலுக்குரிய தான நிலம். இங்கே சமணப் பள்ளிக்குரிய சந்தமாகும்.

5. கணிமுற்றூட்டு - கணித்தவர் அல்லது சோதிடர்க்குரிய நிலம்.

6. ஊர்களிலார் - ஊர்ச்சபையார்.

7. நகரங்களிலார் - வணிகர் அவை.

8. தனியூர் - நிருவாகத்தில் தன்னாட்சி உரிமை பெற்ற ஊர் சிதம்பரம், உத்தரமேரூர் போன்ற ஊர்கள் தனியூர்களாகும். பிராணர்கள் சகல அதிகாரம் பெற்று நிருவாகம் செய்த சதுர்வேதிமங்கலம் எனலாம்.

9. வாவலூர் - வாவல் என்றால் வௌவால் என்று பொருள். விளவினை வாவல் குறுகா (நாலடியார் 261). வௌவால்கள் மிகுந்த ஊர்போலும் இனி வாவல் என்றால் கூத்து என்றும் பொருள். கூத்தின் அடிப்படையில் ஏற்பட்ட ஊர்போலும். கூத்தூர், கூத்தனூர் போல் வாவலூர் எனலாம்.

10. பனையூர் - பனைமரத்துடன் தொடர்புடைய ஊர். சோழர் காலத்தில் பனையூர் நாடாக இருந்துள்ளது. இந்தப் பனையூர் நாட்டில் எண்ணாயிரம், எய்தார் (எசாலம்) போன்ற ஊர்கள் இருந்துள்ளன.

11. வேறளந்தை - வேறு+அளந்தை=வேறளந்தை. அலந்தை என்றிருக்கலாம். அலந்தை நீர் நிலையைக் குறிக்கும்.

12. ஏர்ப்பாக்கம் - ஏர்+பாக்கம் எனப்பிரிக்கலாம் ஏர்-அழகு. இனி ஏரியினையும் சுட்டும் பாக்கம் பின்னொட்டு.

அளந்தை நன்னாடும் ஏரிப்பாக்கமும் சேர்த்து விக்கிரமசோழ நல்லூர் என ஒரே ஊராக்கப்பட்டது. இரண்டு ஊர்கள் சேர்ந்து அல்லது மூன்று ஊர்கள் ஒன்று சேர்ந்து ஓர் ஊராக்குவது அக்கால வழக்கமாகும்.

தலைநகரத்தில் பல பெரிய பதவிகளுடன் சிறிய பதவிகளும் இருந்தமை போன்று நாடுகளிலும் சதுர்வேதி மங்கலங்களிலும் ஊர்களிலும் பெரிய பதவிகளும் சிறிய பதவிகளும் இருந்துள்ளன. அத்துடன் ஊராட்சி அல்லது சதுர்வேதி மங்கல உறுப்பினர்களும் இருந்துள்ளனர். எசாலம் செப்பேட்டில் இவையாவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பிடிசூழ்ந்த எல்லைகள்

பிடிசூழும்போது வடகீழ்மூலை ஸ்ரீ ராஜராஜசருப்பேதி மங்கலத்து ராஜசூளாமணி வாய்க்காலுக்குத் தெற்கு ஜநநாதச்சசருப்பேதிமங்கலத்தார் எல்லைக்கு மேற்கில் தெற்கு நோக்கிச் சென்றனர். ஜநநாதச் சருப்பேதிமங்கலத்து வடக்கில் ஏரிக்குப் பாயும் சிற்றாறு வடகரைப் புழுதிப்பாடு முக்கோல் நீக்கி இச்சிற்றாறு தன் கிடையே இறங்கி ஏறினர். தென்கரை புழுதிப்பாடு முக்கோல் நீக்கித் தெற்கு நோக்கிச் சென்றனர். பின்னர் ஈங்கை நின்ற புற்றுக்குக் கிழக்கு இருகோலற்ற கொத்தத்தை அடைந்தனர். பின்னர்க் கிழக்கு நோக்கிக் களர் புற்றுக்குத் தென்னருகே சென்றனர். பிறகு கிழக்கு நோக்கி அழிஞ்சில் மேட்டை அடைந்தனர். பின்னர்க் கிழக்கு நோக்கிச் சென்றனர். புங்கம்மேட்டை அடைந்தனர். அதிலிருந்து தென்கிழக்கு நோக்கிச் சென்றனர். ஸ்ரீ ராஜராஜ சருப்பேதி மங்கலத்து ஸ்ரீ ராஜராஜ விண்ணகர் உய்யக்கொண்ட தேவர் நிலத்து மேலெல்லையை அடைந்தனர். அதிலிருந்து தெற்கு நோக்கிச் சென்றனர். மூன்றாங் கண்ணாற்றுத் தென்னெல்லை முடிந்த இடத்தை அடைந்தனர். இதனுக்குத் தெற்கு ஜநநாதச்சருப்பேதி மங்கலத்தார் எல்லைக்கு மேற்கில் தெற்கு நோக்கிச் சென்றனர்.

பிறகு ஜநநாதச் சருப்பெதி மங்கல(த்)தார் வடக்கில் ஏரிக்கு நீர்பாயும் வாய்க்காலுக்கு வடக்கு முக்கோலற்ற கொத்தத்தை அடைந்தனர். இவ்வெல்லையில் மேற்கு நோக்கிச் சென்று ஸ்ரீ ராஜராஜசருப்பேதி மங்கத்துப் பிடாகை பெரும்பாக்கத்துக் கீழெல்லையை அடைந்தனர். இன்னும் இவ்வெல்லைக் கீழாசறுதியே வடக்கு நோக்கிச் சென்றனர். அதன் பிறகு ஜநநாதச் சருப்பேதி மங்கலத்து வடக்கில் ஏரிக்கு நீர்பாயும் சிற்றாறு தென்கரை முக்கோல் விட்டு இச்சிற்றாறு தன்கிடையே இறங்கி

ஏறினர். வடகரை முக்கோல் விட்டு இதன் வடக்கு இன்னும் பெரும்பாக்கத்துக் கீழ் எல்லை அசறுதியில் வடக்கு நோக்கிச் சென்றனர்.

பின்னர் ஸ்ரீராஜராஜசருப்பேதி மங்கலத்துத் திருஅம்பலமுடைய மாதேவரும் திருமாலிருஞ்சோலை விஷ்ணு உள்ளிட்ட தேவர்கள் நிலத்துத் தென்வரம்பை அடைந்தனர். இவ்வரம்பில் கிழக்கு நோக்கிச் சென்றனர். இவ்வெல்லைக் கீழாசறுதியை அடைந்தனர். இன்னும் இவ்வெல்லைக் கீழாசறுதியே வடக்கு நோக்கிச் சென்றனர். பிறகு இராசசூளாமணி வாய்க்காலை அடைந்தனர். இன்னும் இராசசூளாமணி வாய்க்காலினை ஒட்டிக் கிழக்கு நோக்கிச் சென்றனர். முன்பு துடங்கின இடத்தை அடைந்தனர்.

ஏர்ப்பாக்கத்துக்கு வடகீழ் மூலை திருவாமாத்தூர் நிலத்தில் ஜநநாதச்சருப்பேதி மங்கலத்தார்க்கு நீர்பாயக் கல்லின வாய்க்காலுக்குத் தெற்கு ஜநநாதச் சருப்பேதி மங்கலத்து எல்லைக்கு மேற்கு, தெற்கு நோக்கிச் சென்றனர். ஸ்ரீ இராசராசசருப்பேதி மங்கலத்துத் திருவாய்ப்பாடி தேவர் நிலத்து வட எல்லையில் நிகரிலிசோழவாய்க்காலை அடைந்தனர். இவ்வாய்காலில் மேற்கு நோக்கிச் சென்றனர். பிறகு ஜயங்கொண்ட சோழவதியை அடைந்தனர். இவ்வழியே தெற்கு நோக்கிச் சென்று நத்தத்தின் நடுவில் போன பழவாய்க்காலை அடைந்தனர். இவ்வாய்க்காலோடு கிழக்கு நோக்கிச் சென்றனர். பின்னர்த் திருமாலிருஞ்சோலைத் தேவர் நிலத்து மேலெல்லையை அடைந்தனர். இவ்வெல்லையில் தெற்கு நோக்கிச் சென்றனர். இத்தேவர் நிலத்து வடவாசறுதியை அடைந்தனர். இவ்வெல்லையில் மேற்கு நோக்கிச் சென்றனர். முதற் கண்ணாற்றை அடைந்தனர். மேற்கு நோக்கிக் கருணாகரப் பிரியாதவர் நிலத்துக் கீழாசறுதியை அடைந்தனர். இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்றனர். பின்னர் திருவாய்ப்பாடி தேவர் நிலத்துக் கீழாசறுதியை அடைந்தனர். இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்றனர். நிகரிலி சோழ வாய்க்காலை அடைந்தனர். இன்னும் ஜயங்கொண்ட சோழவதியே தெற்கு நோக்கிச் சென்றனர். ஜநநாதச்சருப்பேதி மங்கலத்தார் இராசேந்திரசொழ வாய்க்காலின் வடகரையை அடைந்தனர். இவ்வாய்க்கால் வடவாசறுசதியை அடைந்தனர். இவ்வெல்லை வடவாசறுதியே ஜநநாதச்சருப்பேதிமங்கலத்தார் கீழெல்லையை அடைந்தனர். இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்றனர். இவ்வெல்லை வடவாசறுதியை அடைந்தனர். பின்னர் மேற்கு நோக்கிச் சென்று

திருவாமாத்தூர் எல்லையை அடைந்தனர். இவ்வெல்லை கீழாசறுதியே வடக்கு நோக்கிச் சென்றனர். ஸ்ரீராஜராஜ சருப்பேதிமங்கலத்தார் நிகரிலி சோழவாய்க்காலை அடைந்தனர். இவ்வா(ய்)க்காலோடு கிழக்கு நோக்கிச் சென்றனர்.

பின்னர் ஜயங்கொண்ட சோழவதியை அடைந்தனர். இவ்வதியில் வடக்கு நோக்கிச் சென்று திருவாமாத்தூரார் நிலத்தில் ஜநநாதச் சருப்பேதி மங்கலத்தார்க்கு நீர்பாய வெட்டின வாய்க்காலை அடைந்தனர். இவ்வா(ய்)க்காலுக்குக் கிழக்கு நோக்கிச் சென்றனர். பின்னர் முன்பு தொடங்கிய இடத்தை அடைந்தனர்.

தானமாகப் பெற்றபகுதி

யானையால் சூழப் பட்ட பெருநான்கு எல்லைக்குள் அடங்கிய நீர் நிலம், புன்செய், ஊர், ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம் என்னும் பகுதிகள் அனைத்தும் பெறுவதாகவும் இவ்வூரில் உள்ள மனைகள், மனைப்படப்புகள், கடை, கடைத்தெரு, கம்மாணச்சேரி, பறைச்சேரி, சுடுகாடு, படுதுறை, மன்று, கன்று மேய்த்தற்குரிய பொதுநிலம், குளம், நெல்கொட்டும் களஞ்சியம், அகழி, கேணி, புற்று, தெறி, ஓடை, உடைப்பு, ஏரி, ஏரிநீர்க்கோப்பு என்னும் பகுதிகளையும் மீன்கள் வாழும் பள்ளமான நீர்நிலையும் தேன் கூடுகளமைந்த மரப்பொந்தும் மேல்நோக்கிய மரமும், கீழ்நோக்கிய கிணறும் நீர்பூசி நெடும்பரம்பெறிந்து உடும்பு ஓடி ஆமை தவழும் எல்லாவகைப் பட்டனமும் உள்நிலம் சிறிதும் விடாமல் குடிவாரம் மேல்வார உரிமை மிகுதி குறைவு உட்படத் தரப்பெற்றன. இப்படி பெற்றதற்காக அதனை ஒட்டி அமையும் சில ஒழுங்கு முறைகள் பள்ளிச்சந்த உரிமையாளர் கடைப்பிடிக்க வேண்டும்.

எசாலம் செப்பேடுகளின் வடமொழிப்பகுதி

பல்லவர், பாண்டியர், சோழர் இருமொழிச் செப்பேடுகளில் வடமொழிக் கிரந்தப் பகுதியைத் தேவநாகரி வரிவடிவில் தந்து அதன் விளக்கத்தை ஆங்கிலத்தில் தருவதையே கல்வெட்டு அறிஞர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். ஆங்கிலத்தில் மிகுபுலமை இல்லாதவர்களால் வடமொழிச் சுலோகங்களை எப்படி ஆய்வு செய்ய முடியும்? வடமொழி தெரிந்த தமிழரை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்பதால் பெரும்பாலோர் நலனை யொட்டி வடமொழிச் சுலோகங்கள் தமிழ் வரிவடிவில் தரப்படுகின்றன.

வடமொழியில், க,ச,த,ப,ஸ,ஷ ஒன்றுக்கு மேற்பட்ட வரிவடிவங்களும் ஒலிப்புகளும் இருப்பது தமிழில் இல்லை. இக்குறையைப் போக்க க^1 க^2 க^3 க^4 என்பது போல் எழுதும்முறை உண்டு. எனினும் பல்வேறு குழப்பங்களுக்கு இடம் தருவதுடன் தமிழ் வரிவடிவத்திற்கே கேடு என்பதால் இம்முறையை இங்கே பின்பற்றவில்லை. வல்லின எழுத்துகளே இடத்திற்கேற்ப வல்லொலியாகவோ மெல்லொலியாகவோ ஒலிக்கப்பெறுவதை நாமறிவோம். கல், பொங்கல், பக்கம் போன்ற சொற்களை Ka. Ga. Kha என உச்சரிப்பதைப் பார்க்கிறோம். வடமொழியில் ன இல்லாததால் 'ந' என வடமொழியில் எழுதுவர். இடத்திற்கேற்ப 'ன' என்றோ 'ந' என்றோ இங்கே தரப்படுகிறது. அனுஸ்வாரம் குறிப்பிட: என்ற குறியீடு தந்துள்ளேன்.

வடமொழியில் நீண்ட சொல்லைப் பிரித்தே தமிழில் தரப்படுகிறது. தமிழில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வட எழுத்துகள் பயன்படுத்தப்படுகினற்ன. ஜ, ஸ, ஷ, க்ஷ, ஸ்ரீ (அவ்வெழுத்துகள் ஆகும்). எசாலம் செப்பேட்டில் 80 வரிகளில் 35 சுலோகங்கள் உள்ளன. புராண புருஷர்களும், அதீத கற்பனைகளும், சிலேடை மொழிகளும் இவைகளில் உள்ளன. எனவே வடமொழியின் ஒலிபெயர்ப்பும் மொழிபெயர்ப்பும் கூறியபின் குறிப்புரையாக ஒவ்வொரு சுலோகத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளேன்.

ஒப்பீடும் செய்து சுலோகத்தின் தாத்பரியத்தைக் குறிப்பிட்டுள்ளேன்.

புலவர் வே. மகாதேவன் மற்றும் முனைவர் சங்கர நாராயணனுடைய கையெழுத்துப்பிரதி உதவியாக இருந்தது.

ஸ்வஸ்திஸ்ரீ மல்லலாடே திலகமிவ வஹன் சக்ஷீ:உத்யத்
வி(த்வி) காஸம்
கண்டே ஸாந்த்ரேந்த்ர நீலோத் பலமிவ விததத்
காலகூடம் கராலம்
முண்டேந்தும் மூர்த்னி சூடாமணிமிவ கலயனநித்ய
க்ல்ருப்தாங்கபூஷா
சோபோ திச்யாத் பவானீ பரணயனவிதிம் ப்ராப்தவான்
தூர்ஜடி:வ:

மங்களம் உண்டாகட்டும். பவானி அம்மனோடு திருமணக் கோலம் கொண்ட தூர்ஜடியான் (பரமசிவன்) உங்களுக்கு கருணைபுரியட்டும். மணவழகரான சிவனின் அழகிய நெற்றியில் திலகம் போல் மூன்றாவது கண்ணைக் கொண்டிருக்கிறார். கருங்குவளை மலர் போன்று கழுத்தில் ஆலகால விஷத்தைக் கொண்டிருக்கிறார். பிறை நிலவாகிய சந்திரனைத் தலையணிபோல் சடையில் கொண்டு அணிகலன்களால் எழிலுடன் காட்சி தருகிறார். *1*

குறிப்பு

கல்யாண சுந்தர மூர்த்தியினை நினைவூட்டும் வகையில் உள்ள இக்காப்புச் சுலோகத்திலும் அம்மன் பெயர் பவானி என்றே உள்ளது. பிறதேவர்களுக்கு இல்லாத மூன்றாவது கண்ணான நெற்றிக்கண்ணும் பாற்கடல் கடைந்தபோது வெளிப்பட்ட கொடிய நஞ்சைக் கண்டத்திலும் தேய்பிறையான நிலவைச் சடையிலும் சூடியவர் என்பதால் உங்களுக்கும் அருள்புரிவார் என்பது குறிப்புப் பொருளாகும். திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும் பவானி என உமையம்மன் கூறப்பட்டுள்ளார்.

பஞ்சாசதேவ லிபய: பரிவ்ருத்த ஸங்க்யா:
ஸங்க்ய மதீத்ய ரவிவம்சகுணா: விபாந்தி
ஏதைரஹம் கதமமூம் கதயாமி மஹ்யம் மாத:
ஸரஸ்வதி லிபீரபரா : விதேயா: *2*

தேவமொழியில் ஐம்பது எழுத்துகள் உள்ளன. ஆயின் இரவிவம்சத்தின் குணங்களோ எண்ணிக்கையில் அடங்காத அளவு மிகுந்திருக்கின்றன. இச்சூழலில் இவ்வைம்பது அட்சரங்களைக் கொண்டு அவர்களின் குணநலன்களை எப்படி

கூறுவேன்? அம்மாதாயே! சரஸ்வதியே மேலம் சில லிபிகளை (எழுத்துகளை) எனக்குப் படைப்பாயாக.

குறிப்பு

தற்போது வடமொழியில் ஐம்பதுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் இருப்பினும் பழங்காலத்தில் ஐம்பது என்றே வரையறை செய்துள்ளனர். இதே கருத்துள்ள சுலோகம் வேறு செப்பேடுகளிலும் உள்ளது. கல்விக்கு அதிபதியாக நான்முகனின் தேவி சரஸ்வதியைக் கூறுவது மரபாகும். காளமேகப் புலவருக்குக் கலைமகள் அருள் புரிந்ததை அவருடைய வாக்காலே அறியலாம்.

ஆஸீதாத்யோ ந்ருபாணாம் மனு: அகில ஜகச் சக்ஷுஷ
ஸப்தஸப்தே:
இக்ஷ்வாகு: தத்தனூஜ: ப்ரவரகுணமணிச்ரேணி
ஜன்மாம்பு ராசி:
மாந்தாதா தஸ்ய வம்சே சதுருததி லஸன் மேகலா
லங்க்ருதாயா;
பாதா விச்வம்பராயா: க்ஷிதி பதி மகுடச்ரேணி
வ்ருந்தாங்க்ரி பீட: 3

பிரபஞ்சத்திற்கு விழியானவனும் ஏழுபரிகளை உடையவனுமான சூரியனுக்கு மன்னர்களுக்கெல்லாம் முதல்வனான மனுபிறந்தான். மனுவிற்கு இக்ஷ்வாகு பிறந்தான். அவன் நற்குணங்களின் கடலாக விளங்கினான். இவனுடைய வமிசத்தில் மாந்தாதா என்பவன் தோன்றினான். நான்கு கடல்களை இடையணியாகக் கொண்ட பூமிதேவியை இவன் காத்ததால் எல்லா அரசர்களுடைய மகுடங்களும் பாதபீடங்களாக இருந்தன.

குறிப்பு

ஏழுகுதிரைகளையும் ஒரு சக்கரத்தையுமுடையவனாக ஆதித்தனைக் குறிப்பிடுவர். இந்த ஆதித்தன் மரபே சோழமரபாகும். இவனுடைய மகனாக மனு பிறந்தான். இம்மரபில் வந்த மாந்தாதா பெருவீரன் என்பதால் அரசர்கள் மகுடங்களுடன் கீழே வீழ்ந்து வழிபட்டனர். ஆதலால் அவைகள் பாதபீடங்களாகமாறின என்று நயமாகக் கவிஞர் கூறுகிறார்.

தத்புத்ரோ முசுகுந்த இத்யாஜனிய: ஸத்ய:
ப்ரபோதோந்மிஷத்
சக்ஷீர்தக்தவிதக்த காலயவநாநந்தன் முகுந்தோ ந்ருப:

தத்வம்சாம்பு நிதே: சசி கல்ப இத்யாக்யாம்
ததாநோ அபவத்
ய: சக்ரே வலபீம்புரீம் ந்ருபதிபி: தோர்தண்ட
தண்டாநதை: 4

முசுகுந்தன் அவனுக்கு மகனாகப் பிறந்தான். அவனைக் காலயவனன் என்னும் நிபுணனான அசுரன் தூக்கத்திலிருந்து எழுப்ப விழித்து எழுந்த முசுகுந்தன் அந்த அசுரனை எரித்தான். இதனால் முகுந்தனுக்கு ஆனந்தம் கிடைத்தது. அந்த வம்சமாகிய கடலின் நிலவாக வலபன் என்ற அரசன் தோன்றினான் தன்புயபலத்தாலும் சேனையாலும் தோற்கடித்த மன்னர்களைக் கொண்டு வலபீ என்ற நகரை உருவாக்கினான்.

குறிப்பு

சங்க இலக்கியத்தில் இடம்பெறும் வல்லங்கிழான் என்ற வல்லபன் வேறு. இங்குள்ள புராண வலபன் வேறு ஆகும்.

ஸகல ஜலதி வீசி மேகலாலங்க்ருதாயா
பதி: அவநியுவத்யா சோளவர்மா அஸ்ய வம்சே
நமதகில நரேந்த்ர வ்ராத மௌலிப்ரபாபி
விரசித சரணாப்ஜோ வீர்யவான் ஆவிராஸீத் 5

அனைத்துக் கடல்களின் அலைகளையே இடையணியாகக் கொண்ட பூமிதேவியின் புருஷனான சோழவர்மன் என்பவன் அந்தவம்சத்தில் தோன்றினான். வீரியமிக்க அவன் காலில் விழுந்து வணங்கும் அரசர்களுடைய மகுடங்களின் பிரகாசத்தால் பாத தாமரை திகழ்ந்தது.

குறிப்பு

சோழவர்மன் என்பதே சோளவர்மா என வந்துள்ளது.

தத்புத்ரோ அஜனி ராஜகேஸரிஸமாக்யாதோ
யசஸ்வீ ந்ருப:
தத்ஸூனு: பரகேஸரீ ரிபு ந்ருப வ்ராதாங்க்ரி(ப்தி)
கும்போத்பவ:
ஆஜ்ஞாய ஆல(யத்குல) ஜன்மனா க்ஷிதிபுஜாம்
தன்னாமநீ ப்ரக்ரமாத்
ராஜ்நாம் மௌலிபிர் ஆநதை ரநுதினம் மாலேவ
ஸம்பாவிதா 6

அவனுக்கு மகனாக ராஜகேசரி என்பவன் பிறந்தான். அவன் கீர்த்தியுடையவன். இவனுக்கு மகனாகப் பரகேசரி என்பவன்

பிறந்தான். பகைவர் கூட்டமாகிய கடலுக்கு அகத்தியரைப் போன்றவன் பரகேசரியாவான். இவ்விருவருடைய நாமங்களை முறையாகக் கொண்டே அந்தக் குலத்தின் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணை ராஜாக்களின் வணங்கிய திருமுடிகளால் மாலை போலச் சீராக்கப்பட்டது.

குறிப்பு

குள்ளவடிவத்தில் இருந்த அகத்தியர் கடலைக் குடித்தவர் என்பது புராணம். அவரைப்போலச் செயல் வல்லவன் பரகேசரி என்கிறார். சோழருடைய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் இராசகேசரி, பரகேசரி என்ற பெயர்களிலேயே ஆணைகளைக் குறிப்பிடுகின்றன. மெய்க்கீர்த்திகளின் துணைகொண்டே அவர்களை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

அரிகாலஸ்ததோ ஜஜ்ஞே கரிகாலஸததன்வயே
சக்ரு யஸ்ய ஆஜ்ஞயா பூபா காவேரீதீரபந்தனம் 7

அந்த வம்சத்தில் பகைவர்களுக்கு எமனான கரிகாலன் என்னும் அரசன் தோன்றினான். அவனுடைய கட்டளையை ஏற்று அரசர்கள் சேர்ந்து காவிரிக்குக் கரை எடுப்பித்தனர்.

குறிப்பு

இலங்கையை வென்ற கரிகாலன் அங்கிருந்து 12,000 வீரர்களைச் சிறைப் பிடித்துக் கொண்டுவந்து காவிரிக்குக் கல்லணை கட்டியதாக வரலாறுண்டு. காவிரி என்ற சொல் சிலப்பதிகாரத்திலேயே காவேரி என்றிருக்கிறது. இதையே வடமொழியிலும் பயன்படுத்தி உள்ளனர்.

ஸமஜனி விஜயாலய :ததீயே மஹதி குலே
மஹனீய ராஜ்ய லக்ஷ்மீ
அனுபம விபவ ப்ரதாப வித்யா புஜபல
விக்ரம சௌர்ய தைரியராசி 8

அந்தப் பெருங்குலத்தில் சிறப்புப் பெற்ற விசயாலயன் தோன்றினான். அவன் ஒப்பற்ற பெருமை, பிரதாபம் (கீர்த்தி) தோள்வலிமை, பராக்கிரமம், சூரத்தனம், துணிவு, ஆகியவற்றின் இருப்பிடமாகத் திகழ்ந்தான்.

குறிப்பு

கரிகாலனுக்குப் பிறகு பல அரசர்கள் சோழர் வம்சத்தில் இருந்தும் அவர்களை இச்செப்பேட்டில் கவிஞர் குறிப்பிடாமல் விட்டுள்ளார். பிற்காலச் சோழ மரபு இவனிடமிருந்துதான் தோன்றுகிறது என்பதால் இவனுக்கு ராஜ்ய லக்ஷ்மீ என அடை

கொடுத்தார் போலும். 96 விழுப்புண்களைத் தாங்கியவன் என்று வரலாறு இவனைக் கூறுவதால் புஜபல விக்ரம சௌரிய தைரியத்தைக் குறிப்பிடுகிறார். தஞ்சை கொண்ட பரகேசரியாகிய விசயாலயனைக் கபிலைக் கதை என்ற நூலும் குறிப்பிடுகிறது.

ஆதித்ய வர்ம்மா தநயஸ்ததீயோ புதாச்ரய
ஸந்திஷண: தரஸ்வீ
தோஷாபநீதௌ சததம் ப்ரவ்ருத்த: ஸன்மார்க
வர்த்தீ க்ஷிதிம் அப்யரக்ஷத் 9

அவனுக்கு ஆதித்யன் மகனாகப் பிறந்தான். பூமியைக் காத்த ஆதித்யன் அறிஞர்களுக்கெல்லாம் அடைக்கலமானவன். புத்தியில் பெரிய வியாழனை ஒத்தவன். வேகம் மிக்க இவன் எப்போதும் தோஷங்களைக் களைபவன். நன்னெறியில் நடப்பவன் ஆவான்.

குறிப்பு

வேகமிக்கவன், தோஷம் (இருள்) களைபவன் என்பது சூரியனுக்கும் பொருந்தும். எனவே ஆதித்யனை அரசனாகவும் சூரியனாகவும் கருதி, சிலேடை காணலாம். தோஷம் என்ற சொல் கெட்டது என்ற பொருளில் தற்போதும் பயன்பாட்டில் உள்ளது. சன்மார்க்கம் என்ற சொல் வள்ளல் இராமலிங்க அடிகளுக்கு விருப்பமான சொல்லாகும். சமரச சுத்த சன்மார்க்கம் காண அவர் விழைந்தார்.

வ்யாக்ராக்ரஹார நிரதஸ்ய புரத்விஷ ப்ராக்
ரூப்யாசலாதிவஸதே கனகேன தாம
சக்ரே ததங்க்ரிஸரஸீ ருஹஷட்பதோ யஸ்ஸோ
அபூத் பராந்தக இதி ப்ரதிதோ அஸ்யபுத்ர : 10

அவனுக்குப் பராந்தகன் என்ற புகழ்பெற்ற மகன் பிறந்தான். இவன் வியாக்கிரகாரமெனும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் வெள்ளியங் கிரிவாசனும் திரிபுரம் எரித்தவனுமான சிவபெருமானுக்குரிய சிற்றம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான். சிவபெருமானுடைய பாதத்தாமரையில் வண்டாக அவன் இருந்தான்.

குறிப்பு

இறுதிவரியை முதலில் கூறிப் பொருள் கொள்ளும்போது சிதம்பரம் திருச்சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்தவனாகப் பராந்தகனைக் குறிப்பிட்டோம். வேறு சாசனங்களிலும் சிதம்பரம் கோயிலுக்குப் பொன்வேய்ந்தவனாகப் பராந்தகனைக் குறிப்பிடுவர். இனி ஆற்றொழுக்கான நடையில் பொருள்

கூறும்போது ஆதித்தன் சிதம்பரம் கனகசபைக்குப் பொன்வேய்ந்தவனாகவும் குறிப்பிடலாம். இரா. நாகசாமி ஆதித்தன் சிதம்பர ஆலயத்தில் பொன் வேய்ந்ததாகவே குறிப்பிட்டுள்ளார்.

பபூவ தஸ்மாத் குணரத்ன ஸிந்தோ
அரிந்தமோ நாம யதார்த்த நாமா
புராந்த காங்க்ரி த்வயபத்ம ப்ருங்க
பராந்தகோ அபூத் தனய ஸ்தீய: 11

குணங்களாகிய இரத்தினங்களுக்குக் கடலாகிய பராந்த கனிடமிருந்து அரிந்தமன் என்பவன் புதல்வனாகப் பிறந்தான். அவன் பெயருக்கேற்ற குணமுடையவன். அவனுக்குப் பராந்தகன் என்ற மகன் பிறந்தான். அவன் திரிபுரமெரித்த பரம சிவனுடைய பாதத்தாமரையில் வண்டாகத் திகழ்ந்தான்.

குறிப்பு

வடமொழிச் சுலோகங்களை யாத்த கவிஞர் மதுராந்தகனாகிய வீரசோழனின் பிற புதல்வர்களைக் கூறாமல் அரிந்தமனாகிய அரிஞ்சயனை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அரிந்தமன் என்றால் எதிரிகளை அடக்கியவன் என்று பொருளாகும். அரிஞ்சயன் மகனை வரலாற்றாசிரியர் இரண்டாம் பராந்தகன் என்பர். முதல்பராந்தகன் போன்று இவனும் சிவனுடைய பாதத் தாமரையில் வண்டாக இருந்துள்ளான். இவ்வாறு உருவகமாகப் பல சுலோகங்கள் சோழர் செப்பேடுகளில் உள்ளன. வண்டாக ரூபமெடுத்த ஒரு முனிவரைப் பிருங்கி முனி எனப் புராணம் கூறும். தனய என்பதே தனயன் என்று தமிழில் வழங்கப்படுகிறது. யதார்த்தம் என்ற சொல் இயல்பாக என்ற பொருளில் இன்று வழங்கப்படுகிறது.

அஜனிபுஜயுகேன ப்ராஸதீர்கேன தீப்தாம்
ச்ரியம் அகில சரீராச்லேஷிணீம் ஆததான:
அஸிகரமத ரேகாரூபிணௌ சங்கசக்ரௌ
தததருமொழிவர்ம்மா தஸ்ய ஸூனு: முகுந்த: 12

முகுந்தனாகிய விஷ்ணுவே அவனுக்கு அருள்மொழிவர்மன் என்ற மகனாகப் பிறந்தான். அவன் அங்கங்கள் எல்லாம் உளி மிகுந்த திருமகளை, வேல்போல் நீண்ட இரு புஜங்களிலும் தாங்கினான். அவனுடைய கரங்களில் வாளும் இரேகை வடிவில் சங்கும் சக்கரமும் இருந்தன.

குறிப்பு

திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என ஆழ்வாரும் கூறுவார். திருமகள் போலப் பெருநிலச்

செல்வியும் தனக்கே உரிமையுடையவளாக இருந்ததை இராசராசன் மெய்க்கீர்த்தியும் கூறும்.

கங்கான் வங்கான் கலிங்கான் மகதவிஷயஜான்
மாலவான் ஸிம்ஹளாந்த் ரான்
ரட்டான் ஒட்டான் கடஹான் ஸமரவிஜயின:
கேரலான் கௌட பான்ட்யான்
ஜித்வா விச்வக்ஷிதிசான் ஜிதஸகலதனை தாம
தஞ்ஜாநகர்யாம்
சம்போ: அத்யுத்தமம் ஸ வ்யதித நரபதீ
ராஜராஜேச்வராக்யம் 13

கங்கநாட்டார், வங்கநாட்டார், கலிங்க நாட்டார், மகதநாட்டார், மாளவர், சிங்களர், இரட்டர், ஒட்டர் கடாரர், கேரளர், கௌடர், பாண்டியர் முதலிய எல்லா அரசர்களையும் இராசராசன் வென்றான். தான் வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து கொண்டு வந்த செல்வத்தைக் கொண்டு தஞ்சாவூரில் சிவபெருமானுக்குத் தன் பெயரில் ராச ராசேச்வரம் என்ற பிரமாண்டமான கோயிலைக் கட்டினான்.

குறிப்பு

இச்சுலோகம் 12 நாடுகளை இராசராசன் வென்றதைக் குறிப்பிடும். சில அரசர்களுக்கு அடை கொடுத்துள்ளதைக் காணலாம். இன்றைய பீகார் மாநிலம் அதையொட்டிய பகுதி மகதநாடு என வழங்கப்பட்டது. பிற நாடுகளுடன் ஒப்பிடும் போது பெரியநாடாகும். வடமொழியில் விஷயத்தார் என நாட்டாரைக் குறிப்பிடினும் இங்கே அரசரையே விஷயதான் சுட்டும். சிங்களன் என்று கூறாது சிம்ஹளாந்த்ரான் என்று கூறுவதால் ஒன்றுக்கு மேற்பட்ட சிங்களர் என்க. கடாரத்தரசன் விசயோத்துங்கனைச் சமர விஜயின என்கிறார். அசோகருடைய சாசனத்திலும் கேரள புத்திரர் என்றே இருப்பதை நோக்குக. இராசராசனுடைய மெய்க்கீர்த்தியும் காண்க. தஞ்சாவூர் பெரிய கோயிலை முதலாம் இராசராசன் எடுப்பித்தான் என்பதை அக்கோயிலில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்தச் செப்பேட்டிலும் அச்செய்தி உறுதிப் படுத்தப்படுகிறது. தஞ்சாவூர் என்பது வடமொழியில் தஞ்சா நகர் என்றுள்ளது.

தத்ப்ராதா கரிகால சோள ந்ருபதி: வீரச்ரியா
லிங்கிதோ
ஹத்வா பாண்ட்ய நரேந்த்ர மாஹவ முகே சித்வா
ததியம்சிர

தஞ்சா த்வார கதோரு தாரு சிரஸி நியஸ
யோத்தமாங்கம் ரிபோ:
ஸப்தாம்போ நிதி மேகலாம் வஸு"மதீம் பாலோ
அப்யரக்ஷத் சிரம் 14

இராசராசனுடைய அண்ணனான கரிகாலன் இவனுக்கு முன் நாடாண்டான். பாண்டிய மன்னனைப் போரில் வென்றதுடன் அவன் தலையைத் துண்டித்தான். துண்டிக்கப்பட்ட அந்தப் பகையரசனின் தலையைத் தஞ்சாவூரின் வாயில் மரத்தில் தொங்க விட்டான். சிறுவயதுடையவனாக இருப்பினும் ஏழுகடல்களை இடையணியாகக் கொண்ட பூமிதேவியைக் காத்தான்.

குறிப்பு

சுந்தர சோழனாகிய இரண்டாம் பராந்தகனுடைய மூத்தபிள்ளையான ஆதித்த கரிகாலன் வீரபாண்டியன் தலையைக் கொண்ட போது இளவரசனாக இருந்தான். அப்போது இராசராசன் குழந்தையாக இருந்தான் என்பதைத் திருக்கோயிலூர் சாசனம் குறிப்பிடுகிறது. பாண்டியனைக் கொன்ற ஆதித்த கரிகாலன் சிவபிராமணர்களின் சதியின் மூலம் கொல்லப்பட்டதையும் கொன்ற அப்பிராமணர்களுக்குப் பல ஆண்டுகள் கழித்து இராசராசன் ஆட்சியில் தண்டனை வழங்கப்பட்டதையும் காட்டுமன்னார்குடி கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கொலையின் பின்னணியில் பாண்டியர் இருந்திருக்கவேண்டும். ஆயின் உத்தமசோழன் இருந்திருக்கலாம் எனப் பொருத்தமின்றி ஒரு சிலர் குறிப்பிடுவர். ஆகவேதான் இராசேந்திரனுடைய பல செப்பேடுகளில் உத்தமசோழன் இடம் பெறவில்லை என்பர். இந்தச் செப்பேட்டில் முதலாம் இராசாதித்யன், கண்டராதித்தன் இடம் பெறவில்லையே இதற்கு என்ன சமாதானம் கூற முடியும்? எனவே உத்தம சோழனைக் கொலையில் தொடர்பு படுத்தக் கூடாது. சங்க காலத்தில் இருந்த கரிகாலன் இளையவனாக இருந்தபோதே செம்மையாகத் தீர்ப்பு வழங்கியதுடன் பகை அரசர் பலரை வென்றது போல் இந்த ஆதித்த கரிகாலனும் வெற்றிவீரனாக விளங்கினான் எனலாம். வீர பாண்டியன் தலையைக்கொண்ட இளவரசனாக இவன் இருந்துள்ளான். தொண்டை மண்டலத்தில் இவனுடைய சாசனங்களைக் காணலாம்.

கலே:பலாத் ப்ரஸ்கலிதம் ஸ்வசாஸ்த்ர மார்கன் புந:
ஸ்தாபயிதும் ப்ருதிவ்யாம்
ஸம்ப்ராப்த மாக்யா மனுமேவ யஸ்ய பித்ருவ்யம்
ஆஹீமதுராந்தகாக்யம் 15

இராசராசனுடைய சிறிய தந்தையார் மதுராந்தகன் என்னும் பெயருடையவர் ஆவார். கலியின் வலிமையால் தன்னுடைய சாஸ்திரம் நழுவியதை அறிந்த மனு அதனை நிலை நிறுத்துவதற்காக அவனுருவில் அவதரித்தாகக் கூறுவர்.

குறிப்பு

கலியின் வலிமையால் மனுவே மீண்டும் நீதி நிலை நாட்ட அரசனாகப் பிறந்தான் என்பதைச் சோழரின் வேறு செப்பேடும் கூறும். மதுராந்தகன் என்ற பெயர் முதலாம் இராசேந்திரனுக்கும் உத்தம சோழனுக்கும் இருப்பதால் இச்சுலோகத்தை இருவருக்கும் பொருந்துமாறு கூற முடியும். எனினும் 16ஆவது சுலோகத்தில் இராசேந்திரன் கூறப்படுவதால் இதனை உத்தமசோழனுடன் தொடர்புபடுத்துவதே சரியென்று கருதுகிறேன். இதற்கு மாறாகக் கலியாக உத்தமசோழனான மதுராந்தகனையும் இராசராசனாக மனு பிறந்ததாகச் சிலர் குறிப்பிடுவர்.

ஸௌந்த்ர்ய ஸ்ரீவிபுலபவநம் விக்ரமஸ்ரீவிசால
க்ரீடாஸ்தானம் த்ருதி மதிரதி ஸ்ரீதயாஜன்மபூமி
தஸ்யாபத்யம் ஸமஜனி ஜகந்நந்தன சக்கரவர்த்தீ
வித்யாநத்யா ஜலதிருததேர்தாம ராஜேந்த்ர சோழ
16

இராசராசனுடைய மகனான இராசேந்திர சோழன் சௌந்தர்யத்தின் திருமாளிகை. வீரத்தின் விசால விளையாட்டுத் திடல். துணிவு, பேரறிவு, காதல், கருணை போன்றவற்றின் பிறப்பிடம். உலக உயிர்களை மகிழ்விக்கும் சக்கரவர்த்தி. கல்வியாகிய நதிக்குக் கடல் போன்றவன். உதயத்தின் இருப்பிடம் ஆவான்.

குறிப்பு

சோழன் என்பது சோல என்று கிரந்தத்தில் உள்ளது. சௌந்தர்யம், சுந்தரம், ஸ்ரீ போன்ற வடசொற்கள் நுட்பமான சொற்களாகும். பல பொருள்களில் பயன்படுத்தலாம். சான்றாக இச்சுலோகத்தில் ஓரிடத்தில் ஸ்ரீ என்பது அழகையும் மற்றோரிடத்தில் காதலையும் சுட்டுகிறது. பவநம், தாநம் பூமி, பத்யம் போன்ற சொற்கள் இருப்பிடத்துடன் தொடர்புடைய சொற்களாகும். சோழப் பெருமன்னர்களில் சுந்தரசோழனும் இராசேந்திரனும் அழகு வாய்ந்தவர்களாகச் சாசனங்களிலேயே காண்கிறோம்.

சாளுக்யம் ஜயஸிம்ஹம் ஆஹவமுகே ஜித்வா
ததீயம் யசோ
ஹத்வா வீர்யஸமார்ஜிதை: ஸமடை: கீர்த்யே
வருந்தன் திச:

கங்காம் துங்க பயோதராம் குணவதீம் நீத்வா
ஸ்வதேசம் ப்ரதி
ப்ராப்தஸ்ரீ ஸ பகீரதம் வ்யஜயத அக்ருச் ராப்த
கங்காஜல 17

சாளுக்கிய அரசனான ஜயசிம்மனைப் போர்க்களத்தில் தோற்கடித்து அவன் புகழை மங்கச் செய்தான். வீரம் நிறைந்த தம் படைவீரர்களாலும் கீர்த்தியாலும் திசைகளை மறைத்தான். எடுப்பான நகில்களையுடையவளும் குணங்கள் நிறைந்தவளுமான கங்கையைத்தன் நாட்டிற்குக் கொண்டு சென்றான். செல்வத்தை அடைந்த அவன் கடினமின்றியே கங்கைநீரைப் பெற்றதினால் ஆகாயகங்கையைக் கொண்டு வந்த பகீரதனை வென்றவன் ஆனான்.

குறிப்பு

கங்கை நீரைக் கொண்டு வந்ததை நயமாகக் கவி இச்சுலோகத்தில் கூறுகிறார். ஆகாய கங்கையைப் பகீரதன் பூமிக்குக் கொண்டு வந்தவனாக ஓர் ஐதீகமுள்ளது.

ராஜேந்த்ரோ வ்யதித ஸ கங்கை கோண்ட
சோலபுர்யாம் ஸத்குணநிதி ஆத்மனா க்ருதயாம்
தந்நாமாவரபவனம் மஹேச்வரஸ்ய
பக்த்யா தத்பதயுக பாரிஜாத ப்ரிங்க 18

நற்குணங்களின் தொகுதியான இராசேந்திரசோழன் தன்னால் நிர்மாணிக்கப்பட்ட கங்கைகொண்ட சோழபுரத்தில் அதே பெயரில் சிவனுக்கு ஒரு கோயில் கட்டினான். சிவபெருமானின் திருவடியாகிய பாரிஜாதத்தில் வண்டாகத் திகழ்ந்தான்.

குறிப்பு

வடமொழியில் ஒகரம் இல்லாததால் 'கோண்ட' என்றுள்ளது. அவ்வாறே ழகரம் இல்லாததால் லகரம் உள்ளது. மூவகையான குணங்களில் ஸத்வகுணம் சாத்வீகம் ஆகும். ஸத்வகுணம், நற்குணமாகும். பிருங்கிவண்டு வடிவில் சிவனை மட்டும் வழிபட்ட முனிவர் ஒருவரைப் புராணம் கூறும். ஆத்மார்த்தமாக இறைவனை வழிபடவேண்டும் என்று கூறுவர்.

தஸ்யாபவத் ஸ்ரீமதுராந்தகஸ்ய நிதே கலானாம்
குணரத்ன ஸிந்தோ:
குரு ஸமஸ்தாகம பார த்ருச்வா சர்வோபம: சர்வ
சிவார்ய நாமா 19

அந்த ஸ்ரீ மதுராந்தகனுக்குக் கலைகளின் நிதியும் கணங்களாகிய இரத்தினங்களுக்குக் கடலுமான குருவாகச் சர்வ சிவாசார்யர் இருந்தார். அவர் ஆகமங்களையெல்லாம் கரைகண்டவர். சிவபெருமானுக்கு நிகரானவர்.

குறிப்பு

இச்சுலோகத்தில் இராசேந்திர சோழனுடைய குருவின் பெயரையும் அவருடைய சிறப்புகளையும் கூறுவதுடன் மன்னன் கலாரசிகனாகவும் குணவானாகவும் இருந்தான் என்று கவிஞர் கூறுகிறார். இந்தக் குருவே எசாலம் இராமீஸ்வரர் கோயிலை எழுப்பியவர். இவரைக் கோயில் கல்வெட்டுகளும் சுட்டுகின்றன. இவருடைய ஐம்பொன்சிலையும் புதையலில் கிடைத்துள்ளது.

உக்தை: கிம் பஹுபி: ஸ்புடஸ்துதிபதை:ராஜேந்த்ர சோலஸ்ய
யத்ஸர்வாம்போ நிதிமேகலா வஸுமதிபர்து: மஹீப் ப்ருத்பதே:
ய: ப்ரத்யக்ஷ மஹேச்வரோ குருரயம் ராஜாவலீ மௌலிபி:
ஸத்ரத்நாபரணை: விசித்ரிதபதத் வந்த்வோ புதாநாம் நிதி: 20

பலவிதமான துதிகளைச் சொல்லி என் பயன்? கடல்களை மேகலையாக உடைய நிலமகளின் புருஷனும் அரசர்களுக்குத் தலைவனுமான இராசேந்திரசோழனுடைய குரு கண்ணெதிரில் காணும் சிவனேயாவார். அவர் அரசர் கூட்டத்தின் இரத்தினங்கள் திகழும் மகுடங்கள் சித்திரம் வரையும் பாதங்களை உடையவர். அறிஞர்களின் நிதியாவார்.

குறிப்பு

இச்சுலோகத்தில் குருவின் பெருமை கூறப்படுகிறது. திருமூலர் குருவைச் சிவபெருமானாகவே கருதியதை நாமறிவோம். அரசர்களாலும் வணங்கப்படும் சர்வசிவர் அறிஞர்களுக்கு நிதியாக இருந்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனக் குருமகான்களை நாயக்கர்களும் சேதுபதிகளும் தொண்டைமான்களும் குருவாகப் போற்றி மிகுதியான தானங்கள் அளித்தமை வரலாறு.

அஸ்தி ஸ்ரீமத் ஜயங்கோண்ட சோலமண்டல மண்டனம்
ராஜராஜ சதுர்வேதிமங்கலம் விசவ மங்கலம் 21

ஜெயங்கொண்ட சோழமண்டலத்திற்கே அணியானதும் உலகிற்கே மங்கலமானதுமான இராசராச சதுர்வேதி மங்கலம் என்னும் திருவுடைய கிராமம் இருக்கிறது.

குறிப்பு

முதலாம் இராசராசன் பெயரில் உருவான இராசராச சதுர் வேதி மங்கலம் என்பது இன்றைய எண்ணாயிரம் பிரமதேசம் ஆகிய ஊர்களைக் கொண்டதாகும். ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்ற பெயரே வடமொழி மரபிற்கேற்பச் சிறிது மாற்றத்துடன் உள்ளது. மண்டலம் என்பது மண்டனம் என்றுள்ளது. நான்கு வேதங்களை அறிந்த பிராமணர்களுக்கு வழங்கப்படும் ஊர் சதுர்வேதி அல்லது சருப்பேதி மங்கலம் எனப்படும். பிராமணர்களுக்குரிய ஊர் பிரமதேயமாகும்.

ஏயதாரநாம்னி குணவஜ்ஜந ஸந்நிவாஸே தஸ்ய
அக்ரஹாரஸ்ய ஸமீபபாஜி
வ்யதத்த ராமேச்வர நாம தாம சம்போ அசௌசம்பு
ஸமமானதேஜ 22

சிவனுக்குச் சமமான வலிமையுடைய அவர் அந்த அக்ரஹாரத்தின் அருகில் உள்ளதும் குணங்கள் மிக்க மாந்தர் வாழுமிடமான எய்தார் எம் ஊரில் இராமேச்வரம் என்னும் பெயரில் பரம சிவனுக்கு ஒரு கோயில் கட்டினார்.

குறிப்பு

தமிழில் எய்தார் என்பது வடமொழியில் ஏயதார என்றுள்ளது. கோயிலின் பெயர் இராமேச்வரம் என்றே தமிழ்ப்பகுதியிலும் உள்ளது. திருவிராமீசுவரம் எனவும் அழைக்கப்பட்டது. தற்போது இராமநாதீஸ்வர் கோயில் என வழங்கப்படுகிறது.

கைலாஸாவஸதம் விஹாய பவநான் அன்யாநி
ஸர்வாணி அபி
ப்ராய சர்வ சிவார்ய பக்தி க்ருதஸத்பூஜோ பவானீ
பதி:
ப்ரத்யக்ஷ: க்ஷபிதாந்த காந்தக மஹாதைத்ய:
ஸுராணாம்பதி
யத்ராஸ்தே பகவான் அசேஷஜகதாம்
ஸம்ப்ரார்த்திதானி ஆதீசன் 23

அந்தச் சர்வ சிவார்யர் நன்முறையில் பக்தியுடன் பூசை செய்தார். பவானியின் கணவனான பரமசிவன் கைலாயத்தையும் மற்றைய

எல்லா எண்ணங்களையும் விடுத்து நேரடியாகத் தானே இங்கே (எசாலத்தில்) வசிக்கிறார். அவர் எமனையும் அந்தகன் என்னும் மகா அரக்கனையும் அழித்தவர். இங்கே தங்கியிருந்த எல்லா உலகங்களும் வேண்டுவதை எல்லாம் அளித்தார்.

குறிப்பு

எய்தார் தலத்தின் சிறப்பைக் கூறவேண்டி, கைலையைவிட்டுப் பிற எண்ணங்களையும் மறந்து, இங்கே வீற்றிருக்கும் சிவன் காலந்தகன் ஆவான். அந்தகாசூரனை இவர் வதைத்தவர் என்று கவிஞர் கூறுகிறார்.

ஸ்ரீராஜராஜ தனயோ மதுராந்தகோ அசௌ காஞ்சி
புரீம்சகல பூவனிதாவிபூஷாம்
அத்யாஸ்த நிர்ஜித நரேந்த்ர கிரீட கோடி ரத்நாவலிட
சரணாம் புருஹ : கதாசித் 24

இராசராசனின் தனயன் ஆன மதுராந்தகன், மன்னர் மகுடத் தொகுதியின் இரத்தினங்களால் தழுவப்பட்ட திருவடிகளையுடையவன். இவன் ஒரு சமயம் பூமகளுக்கு அணிகலனான காஞ்சிபுரத்தில் வீற்றிருந்தான்.

குறிப்பு

இங்குக் குறிப்பிடப்பெற்றுள்ள மதுராந்தகன் இராசராச சோழனின் ஒன்றுவிட்ட அண்ணனாவான். காஞ்சி என்ற பெயரே ஓர் அணிகலன் அன்றோ! சோழர்களின் துணைத்தலைநகரங்களில் ஒன்றாகக் காஞ்சி இருந்ததால் பலமன்னர்கள் இங்கு வந்தபோது பல ஆணைகளை வெளிட்டுள்ளார்கள். சங்க காலத்தில் தொண்டைமான் மரபினர் இங்கிருந்து ஆண்டனர். பல்லவர்களும் இங்கிருந்து ஆண்டமை வரலாறு.

தஸ்யாம் ஆஸ்தித சாருமஜஜன மஹாசாலோ
திசன்ஸாதரம்
விப்ரேப் யோவிஜயார்ஜிதம் பஹு தனம்
ஸர்வாக்ரணீன் ய ஸ்வயம்
ஸாம்ராஜ்யே தசமே ச்ரிதசதுர்விம்சேஸ்ய
ஸம்வத்ஸரே
தேவாயாதித ஸோர்ச்சநார்தமவனீம் ராமேச்வரா
வாஸினே 25

அந்தக் காஞ்சி அரண்மனையில் குளிக்கும் இடத்தில் இருந்தபோதுதான் பகையரசர்களை வென்று பெற்ற செல்வத்தைச் சிறந்த பிராமணர்களுக்குத் தமது இருபத்து

நான்காவது ஆட்சியாண்டில் வழங்கியதுடன் இராமேச்வரராக விளங்கும் சிவனுடைய அர்ச்சனைக்காக நிலங்களும் அளித்தான்.

குறிப்பு

சோழமன்னர்கள் உண்ணும்போதும் குளிக்கும் போதெல்லாம் தானங்கள் வழங்க உத்தரவிட்டுள்ளதால் காட்சிக்கு எளியவர்களாக அவர்கள் இருந்துள்ளார்கள் எனலாம். இராமீச்சுரம் என்பதே தற்போது இராமநாதீஸ்வரர் கோயில் எனப்படுகிறது.

பக்த்யா குரோ த்புரவைரிணி சாதிகுரவ்யா
க்ருத்யானி க்ருத்யவித் அக்ருத் ய நிராகரிஷ்ணு:
ஸர்வாணி தானி கரிணீப்ரமணாதிகானி
கர்தும் ஸமாதிசத் அஸௌ ந்ருபதி ஸ ப்ருத்யான் 26

செய்யத்தக்க செயல்களைச் செய்தும் செய்யத்தகாத செயல்களை விலக்கியும் அந்த மன்னன் குருவான சர்வசிவரிடமும் முப்புரம் எரித்த சிவனுடனும் பெரும்பக்தி கொண்டிருந்ததால் நிலம் அளித்துப் பிடிசூழ்தல் முதலான எல்லாச் செயல்களையும் மேற்கொள்ளத் தனது பணியாளர்களுக்கு ஆணையிட்டான்.

குறிப்பு

சிவபக்தியுடன் குருபத்தியும் கொண்டிருந்ததால் தானம் அளித்து அதற்கான ஆணைகளைப் பிறப்பித்துள்ளான். 'செய்தக்க அல்ல செய்யக் கெடும் செய்தக்க செய்யாமையானும் கெடும்' என்று வள்ளுவர் கூறுவார்.

ப்ரபூத்ஸம்பதி அனயூரராஷ்ட்ரே நன்னாடு
மேல்பாக்க மிதிப்ரதீதம்
அஸ்தி த்வயம் கர்வடயோரசேஷம்
ஸஸ்யாவலீ சோபித பூமி பாகம் 27

செல்வம் கொழிப்பதான அனயூர் நாட்டில் நன்னாடு என்றும் மேல்பாக்கம் என்றும் பெயர் பெற்றதும் தானியங்களின் தொகுதியால் திகழும் பூமிப் பகுதியை உடையதுமான இரு பெரு கிராமங்கள் உள்ளன.

குறிப்பு

வளமான அனயூர் நாட்டில் இரு ஊர்கள் தானம் தந்ததைக் கூறுகிறார். கர்வட- கிராமங்கள். ராஷ்ட்ரம். நாடு

ஏதத் த்வயம் விக்ரம சோநல்லூர பூர்வநாம்னா
ப்ரதிதம்ஸ க்ருத்வா
சிவாய ஸர்வம் கரஹீனம் அஸ்மை ப்ரதான் முதா
விக்ரம சோளதேவ: 28

விக்கிரம சோழ தேவனான அவ்வரசன் மேற்படி இரு ஊர்களையும் ஒன்றாக்கி விக்கிரமசோழ நல்லூர் என நாமமிட்டு எல்லா வரிகளையும் நீக்கி, இறைவனான சிவனுக்கு வழங்கினான்.

குறிப்பு

இராசேந்திர சோழனுக்கு விக்கிரம சோழன் என்ற பெயருமிருந்துள்ளது. இராசராச நல்லூர் அருகிலேயே விக்கிரம சோழ நல்லூர் அமைந்துள்ளது.

பஞ்சவிம்ச திதமே புனரப்தே பஞ்சஸப்ததியுதே
த்ரிசதேஹ்னி
புஸ்தகே அதிகரணே ததலேகி லேககை
ந்ருபவசாம்ஸி நிசம்ய 29

அரச எழுத்தர்கள் அரசனின் ஆணையைக் கேட்டு மன்னனுடைய இருபத்தைந்தாவது ஆட்சியாண்டு முந்நூற்றெழுபத்தைந்தாவது நாள் அதிகரணப் புத்தகத்தில் எழுதினார்கள்.

குறிப்பு

பிற்காலச் சோழர் மற்றும் பாண்டியருடைய சில சாசனங்களில் ஆட்சியாண்டோடு நாள்களும் கூறப்பட்டிருக்கும். அதிகரணப் புத்தகம் என்பது அரசவரிப் புத்தகம் ஆகும்.

அகாரயத் விச்வஜனீன வ்ருத்தி: ந்ருபோ ந்ருபாணாம்
அதிபோ அகிலானாம்
க்ருத்யம் ஸமஸ்தம் கரிணீப்ரமாதி தத்தேசஜை:
ஆத்மஜனை: சமுக்யை: 30

மக்கள் யாவரும் விழையும் நடவடிக்கைகளை உடையவனும் அரசர்க்கரசனும் யாவர்க்கும் தலைவனும் ஆன அந்த மன்னன் அவ்வூர் மக்களைக் கொண்டும் தன்னுடைய முக்கிய ஆள்களைக் கொண்டும் பிடி சூழ்தல் முதலானவற்றைச் செய்வித்தான்.

குறிப்பு

ந்ருபோநிருபா என்றால் இராசராசன் என்று பொருள். அதிபன்-தலைவன். அரசனிடமிருந்து செல்லும் உயர் அதிகாரிகளும் கிராமத்தில் உள்ள பெரியவர்களும் பிடிசூழ்தல் முதலான நடவடிக்கைகளைச் செய்தனர். அதாவது நில எல்லையை வரையறை செய்தனர்.

ஸ்துத்ய: சம்புரிதிஸ்துத: ஸ்துதிபதை வித்வஜ்ஜனை: அர்திபி:
சிந்தாரத்னம் இதிச்ருதோ நியமிபி: த்யேய: ஸதேத்யாச்ரித:
ரக்ஷாசக்திரிதி ஸ்புடஜ் ஜனப தைரப்யர்சித: க்ஷமாபதே:
ஸர்வக்ஷத்ர குரோ: ஸ்வயம் குருரயம் விஜ்ஞப்திரத்ராபவத்ந 31

துதிக்கப்பட வேண்டியவரும் சிவன் என்றே அறிஞர்களாலும் யாசிப்பவர்களாலும் வணங்கப்பட்டவரும் சிந்தாமணி என்று அறியப்பட்டவரும் துறவிகளாலும் நினைக்கப்பட வேண்டியவரும் காக்கும் சக்தி என்று மக்களால் போற்றப்படுவரும் அரசர்கள் யாவர்க்கும் குருவிற்கும் குருவான அவர் (சர்வசிவன்) இதற்கு விஜ்ஞாப்தியாவார்.

குறிப்பு

இச்சுலோகத்தில் ஸ்துதி என்பதை மூன்று சொற்களில் முதல் வரியில் நயமாக உரைக்கிறார். வித்வஜ் ஜனை என்பது கல்வி கேள்வியுடைய அறிஞர்கள் ஆவர். விஜ்ஞாப்தியாக மன்னரின் குருவே இருந்துள்ளார்.

ஆஜ்ஞப்தி அத்ர மதிமான் ஜநநாத நாமா ராமாத்மஜ ஸமபவன் நருபதே: நியோகாத்
மத்யாஸி காமதிவஸந்த இமேத்விஜேந்த்ரா: யே சாதிகாரபதம் ஆஸ்திதவந்த உச்சை 32

இத்தானத்திற்கு ஆஜ்ஞப்தி இராமனின் மகனான ஜனநாதன் ஆவான். மன்னனின் ஆணைப்படி மத்யஸ்த பதவியை இவன் வகிக்கப் பிராமணர்களில் சிறந்தவர்கள் அதிகாரத்தைப் பெற்றனர்.

குறிப்பு

ஜனநாதன் என்பவன் இத்தானத்திற்கு ஆணத்தியாகவும் நடுவிருக்கை என்ற அதிகாரியாகவும் இருந்துள்ளான்.

ஆகாமினோ நரபதீன் அபியாசதே
அஸெளராஜேந்த்ர சோலந்ருபதி : ஜநநாதஸூனு:
தர்மோ அயம் அஸ்து பரிபால்ய இதி ப்ரதாபநம்ரா
வநீந்த்ர மகுடாலஸதங்க்ரிபீட; 33

ஜனநாதனின் மகனும் தன்வலிமையால் வணங்கும் அரசர் மகுடங்களில் திகழும் தன் பாதபீடத்தை உடையவனுமான இராசேந்திர சோழ மன்னன் இத்தானத்தைக் காப்பாற்றுமாறு இனி வர இருக்கும் அரசர்களிடம் வேண்டுகிறான்.

குறிப்பு

முதலாம் இராசராசனுக்கு ஜனநாதன் என்ற பெயருமுண்டு. இச்சுலோகத்தின் மூலம் தானம் சாஸ்வதமாக (நிலையாக) இருக்கவேண்டும் என்ற மன்னனின் எண்ணம் வெளிப்படுகிறது.

சங்கரஸ்ய தனூஜேன பார்ச்வக்ராமநிவாஸினா
நாராயணேன கவினா சாஸநம் சாச்வதம்
க்ருதம் 34

பார்ச்வ கிராமத்தில் வசிப்பவரும் சங்கரனின் புதல்வருமான நாராயணன் என்னும் கவிஞரால் இந்த நிலையான சாஸநம் செய்யப்பட்டது.

குறிப்பு

சாசனத்தை எழுதிய கவிஞரின் பெயரும் அவருடைய ஊரின் பெயரும் காண்கிறோம். தஞ்சையருகில் உள்ள வல்லம் தலபுராணத்தில் பார்ச்வ முனிவர் பெயர் வருவதால் அவர் பெயர் இவ்வல்லத்திற்கு இருந்தது போலும்.

அவிகத் ப்ரசஸ்திம் ஏதாம் உலகளந்த சோல ஆசார்ய
காரித(தம்) தஞ்ஜாபுர வஸதி வாஸ்தேவோ அஸௌ
35

இந்தப் பிரசஸ்தியைத் தஞ்சாவூரில் வசிப்ப வரும் உலகளந்த சோழ ஆசார்யன் என்று பெயர் பெற்றவருமான வாசுதேவன் என்பவர் செம்பில் எழுதினார்.

குறிப்பு

செப்பேடு வெட்டிய சிற்பியின் இயற்பெயரும் பட்டப் பெயரும் அவருடைய இருப்பிடமும் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளன. உலகளந்தசோழன் என்பது இராசராசனுடைய பட்டப்பெயர்களுள் ஒன்றாகும். தஞ்சாபுரம் என்பது ஓர் அசுரனின் பெயரில் அமைந்ததாகத் தலபுராணம் கூறும். தஞ்சாபுரமே தஞ்சாவூர் ஆகும். முன்னதாகத் தஞ்சாநகர் எனப் பார்த்தோம். தண்+செய்+ஊர் என்பதே தஞ்சாவூர் என அறிஞர் கூறுவர். முத்தரையரின் தலைநகராக இருந்த தஞ்சாவூரை விசயாலயன் வென்று தஞ்சை கொண்ட பரகேஸரியானான். கபிலைக்கதை இங்கே அரண்மனையைக் கட்டியதைக் குறிப்பிடும். பிராமணர்களைக்குடியேற்றியதையும் குறிப்பிடும். (காண்க வரலாற்றில் வல்லம்).

செப்பேடுகளின் மூலங்கள்

(வரி 1) स्वस्ति श्रीमल्ललाटे तिलकमिव वहन् चक्षु रुद्यत् विकासं क

(வரி 2) ण्ठे सान्द्रेन्द्रनीलोत्पलमिव विदधत्कालकूटं करालं (।) मुण्डेन्दुं

(வரி 3) मूर्ध्नि चूडामणिमिव कल्पयन्निव फुल्लाङ्ग भूषा-शोभा दिग्पात् भवानीपरिणयनविधिं

(வரி 4) प्राप्तवान् धूर्जटिर्वः।।(१) पञ्चाशदेव लिपयो रविवंशजानां संख्याम

(வரி 5) तीत्य भुवि भान्ति गुणा नृपाणां (।) एतैरमून् कथमहं कथयामि

(வரி 6) देवि मातः सरस्वती ममात्र कुरु प्रसादम्।।(२) आसीदाद्यो नृपाणाम्

(வரி 7) मनुरखिलजगच्चक्षुष स्सप्तसप्तेः इक्ष्वाकु स्तत्तनूजः प्रवरगु

(வரி 8) [illegible]

(வரி 9) सन्मेखलालङ्कृतायाः पाता विश्वम्भरायाः क्षितिपतिमकुट श्रेणिवृन्दाङ्घ्रि

(வரி 10) पीठः।।(३) तत्पुत्रो मुचुकुन्द इत्यजनि यः सद्यः प्रबोधोन्मिषत् चक्षुर्दग्धविदग्ध

(வரி 11) कालयवनानन्दन्मुकुन्दो नृपः। तद्वंशाम्बुनिधेः शशी कलभ इत्याख्यां

(வரி 12) तस्यान्वये धनदाश्वकेतलभीं पुरीं नृपनिधिर्होतारदानैः।।(४) सकलजलधि

முதல் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 13) वीचीमेखलालङ्कृतायाः पतिरवनियुवत्या श्चोलवर्मास्यवंशे। नमद

(வரி 14) खिलनरेन्द्रव्रातमौलिप्रभाभिः विरचितचरणाब्जो वीर्यवा नाविरासीत्।।(५) त

(வரி 15) त्पुत्रोऽजनि राजकेसरिसमाख्यातो यशस्वी नृपः ततसूनुः परकेसरी

(வரி 16) रिपुनृपव्रातांघ्रिकुम्भोद्भवः। आज्ञाय आल जन्मनां क्षितिभुजान्तत्रामनि

(வரி 17) प्रक्रमात् राज्ञां मौलिभिरानतैरनुदिनं मालेव संभाविता।।(६) अरि

(வரி 18) कालस्ततो जज्ञे करिकालसदन्वये। चक्रु र्यस्याज्ञया भूपाः

(வரி 19) कावेरीतीरबन्धनम्।।(७) समजनि विजयालयस्तदीये महति कु

(வரி 20) ले महनीयराज्यलक्ष्माः। अनुपमाविभवप्रतापविद्याभुजबलाव

(வரி 21) क्रमशौर्यधैर्यराशिः।।(८) आदित्यवर्मा तनयस्तदीयो बुधाश्रयस्सन्धिष

(வரி 22) णास्तरस्वी। दोषापनीतौ सततं प्रवृत्तस्सन्मार्गवर्ती क्षितिमभ्यरक्षत्।।(९)

(வரி 23) व्याघ्राग्रहारनिरतस्य पुरद्विषः प्राग् रूप्याचलाधिवसतेः कनकेन धा

(வரி 24) म। चक्रे तदंघ्रिसरसीरुहषट्पदो यस्सोभूत्परान्तक इति प्रथि

இரண்டாம் ஏடு முதலாம் பக்கம்

(வரி 25) तोऽस्य पुत्रः।।(१०) बभूव तस्मात् गुणरत्न सिन्धो ररिन्दमो नाम यथार्थ
(வரி 26) नामा। पुरान्तकांघ्रिद्वयपद्मभृङ्गः परान्तकोऽभूत्तनयस्तीयः।।(११) अजनि भु
(வரி 27) जयुगेन प्रासदीर्घेन दीप्तां श्रियमखिलशरीराश्लेषिणी मादधानः।
(வரி 28) असिकर मथ रेखारूपिणौ शंखचक्रौ दधदरुमोलिवर्म्मा तस्य सू
(வரி 29) नुर्मुकुन्दः।।(१२) गंगान् वंगान् कलिङ्गान् मगधविषयजान् माल
(வரி 30) वान् सिंहलान्ध्रान्रट्टानोड्डान् कटाहान् समरविजयिनः
(வரி 31) केरलान् गौडपाण्ड्यान्। जित्वा विश्वक्षितीशान्जितसकल
(வரி 32) धनै र्धाम तञ्जानगर्यां शम्भोरत्युत्तमं स व्यधित नरप
(வரி 33) ती राजराजेश्वराख्यम्।।(१३) तद्भ्राता करिकालचोलनृपति वीरश्रिया
(வரி 34) लिंगितो हत्वा पाण्ड्यनरेन्द्रमाहवमुखे छित्त्वा तदीयं शिरः। तञ्जा
(வரி 35) द्वारगतोरुदारुशिरसि न्यस्योत्तमाङ्गं रिपो स्सप्ताम्भोनिधि
(வரி 36) मेखलां वसुमतीं बालोभ्यरक्षत् चिरम्।।(१४) कलेर्बलात्प्रस्ख

இரண்டாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 37) लितं स्वशास्त्रमार्गं पुनः स्थापयितुं पृथिव्याम्। सम्प्राप्तमाख्यामनुमेव य
(வரி 38) स्य पितृव्यमाहुः मधुरान्तकाख्यम्।।(१५) सौन्दर्यश्रीविपुलभवनं विक्रमश्रीविशा
(வரி 39) लक्रीडास्थानं धृतिमतिरतिश्रीदयाजन्मभूमिः। तस्यापत्यं समजनि जग
(வரி 40) न्नन्दन श्चक्रवर्ती विद्यानद्या जलधि रुदते र्धाम राजेन्द्रचोलः।।(१६) चालुक्यं
(வரி 41) जयसिंह माहवमुखे जित्वा तदीयं यशो हत्वा वीर्यस
(வரி 42) मार्जितै स्समभटैः कीर्त्येव रुन्धन्दिशः। गंगातुङ्गपयो
(வரி 43) धरां गुणवतीं नीत्वा स्वदेशं प्रति प्राप्तश्रीः स भगीरथं व्यजय
(வரி 44) ताकृच्छ्राप्तगंगाजलः।।(१७) राजेन्द्रो व्यधित स गङ्गैकोण्ड
(வரி 45) चोलपुर्यां सद्गुणनिधि रात्मना कृतायाम्। तन्नामावरभवनं महेश्वरस्य
(வரி 46) भक्त्या तत्पदयुगपारिजातभृंगः।।(१८) तस्याभवत् श्रीमधुरान्तकस्य निधेः क
(வரி 47) लानां गुणरत्नसिन्धोः। गुरुः समस्तागमपारदृश्वा शर्वोपम शशर्व
(வரி 48) शिवार्यनामा।।(१९) उक्तैः किं बहुभिः स्फुटस्तुतिपदैः राजेन्द्र चोल

மூன்றாம் ஏடு முதல் பக்கம்

(வரி 49) स्य यत्सर्वाम्भोनिधिमेखला वसुमतीभर्तु र्महीभृत्पतेः। यः प्रत्यक्षम

(வரி 50) हेश्वरो गुरूरयं राजावलीमौलिभिः सद्रत्नाभरणैः विचित्रितपदद्वं
(வரி 51) न्द्वो बुधानान्निधिः।।(२०) अस्ति श्रीमत् जयकोण्डचोलमण्डलमण्डनम्। राजराज
(வரி 52) चतुर्वेदिमङ्गलं विश्वमङ्गलम्।।(२१) एयतारनाम्नि गुणवज्जनसन्निवासे तस्या
(வரி 53) ग्रहारस्य समीपभाजि। व्यधत्त रामेश्वरनामधाम शंभोरसौ श
(வரி 54) म्भुसमानतेजः।।(२२) कैलासावसथं विहाय भवना न्यन्यानि सर्वाण्य
(வரி 55) पि प्रायः शर्वशिवार्यभक्तिकृतसत्पूजो भवानीपतिः। प्रत्यक्षः क्ष
(வரி 56) पितान्तकान्धकमहादैत्यःसुराणां पतिः यत्रास्ते भगवा नशेषज
(வரி 57) गताम् सम्प्रार्थितान्यादिशन्।।(२३) श्रीराजराजतनयो मधुरान्तकोसौ काञ्चीपु
(வரி 58) रीं सकलभूवनिताविभूषाम्। अध्यास्त निर्जितनरेन्द्रकिरीटकोटिरत्नावलीढ
(வரி 59) चरणाम्बुरुहः कदाचित्।।(२४) तस्या मास्थितचारुमज्जनमहाशालो दि
(வரி 60) शन् सादरं विप्रेभ्यो विजयार्जितं बहुधनं सर्वाग्रणीन् यः स्वयम्। सा

மூன்றாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 61) म्राज्ये दशमे श्रितचतुर्विंशे स्य संवत्सरे देवायादित सो
(வரி 62) र्द्धनार्थ मवनिं रामेश्वरावासिने।।(२५) भक्त्या गुरो त्रिपुरवैरिणि चातिगु
(வரி 63) र्व्या कृत्यानि कृत्यवि दकृत्यनिराकरिष्णुः। सर्वाणि तानि करिणीभ्रमणादिकानि
कर्तुं
(வரி 64) समादिश दसौ नृपतिः स भृत्यान्।।(२६) प्रभूतसम्पत्यनयूरराष्ट्रे
(வரி 65) नन्नाड्डु मेल्पाक्क मिति प्रतीतम्। अस्ति द्वयं खर्वटयो रशेषम् सस्यावलीशोभित
(வரி 66) भूमिभागम्।।(२७) एतद् द्वयं विक्रमचोल नल्लूरपूर्वनाम्ना प्रथितं स कृत्वा।
(வரி 67) शिवाय र्व करहीन मस्मै प्रादा न्मुदा विक्रमचोलदेवः।।(२८) पञ्चविं
(வரி 68) शतितमे पुनरब्दे पञ्चसप्ततियुते त्रिशतेऽह्नि। पुस्तके धिकर
(வரி 69) णे तदलेखि लेखकैः नृपवचांसि निशम्य।।(२९) अकारयत् विश्वजनीनवृत्तिः
नृपो
(வரி 70) नृपाणां अधिपोऽखिलानम्। कृत्यं समस्तं करिणीभ्रमादि तद्देशजैः आत्मजनैश्च
(வரி 71) मुख्यैः।।(३०) स्तुत्यः शम्भुरिति स्तुतः स्तुतिपदैः विद्वज्जनैरर्थिभिः चिन्तारत्न
मिति श्रुतो नि
(வரி 72) यमिभि र्ध्येयः सदेत्याश्रितः। रक्षाशक्तिरिति स्फुटज्जनपदै रभ्यर्चितः क्ष्माप

நான்காம் ஏடு முதல் பக்கம்

(வரி 73) तेः सर्वक्षत्रगुरोः स्वयं गुरुरयं विज्ञप्तिरत्राभवत्।।(३१) आज्ञप्ति रत्र मति

(வரி 74) मान जननाथनामा रामान्मजः समभव न्रृपतेः नियोगात्। मध्यासिकामधि

(வரி 75) वसन्त इमे द्विजेन्द्राः ये चाधिकारपद मास्थितवन्त उच्चैः।।(३२) आगामि

(வரி 76) नो नरपती नभियाचतेऽसौ राजेन्द्रचोल नृपतिः जननाथसूनुः।

(வரி 77) धर्मोयमस्तु परिपाल्य इति प्रतापनम्रावनीन्द्रमकुटा

(வரி 78) लसदंघ्रिपीठः।।(२२) शंकरस्य तनूजेन पार्वत्राणनिपातिना।

(வரி 79) नारायणेन कविना शासनं शाश्वतं कृतम्।।(३४) अलिख त्त्र

(வரி 80) शस्ति मेतां उल्कलन्तचोल आचार्यः।

पारित ऋणः तञ्जापुरस्यसरितावासुदेवोऽसौ।।(२५)

(வரி 80) ஸ்வஸ்தி ஸ்ரீ கோநேரின்மை

(வரி 81) கொண்டான் ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் பனையூர் நா

(வரி 82) ட்டு நாட்டார்க்கும் ப்ரஹ்மதேயக் கிழவர்க்குந் தேவதானப் பள்ளிச்

(வரி 83) சந்தக் கணிமுற்றூட்டு வெட்டப் பெற்று, பழவறச்சாலா போக

நான்காம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 84) ம் உள்ளிட்ட ஊர்களிலார்க்கும் நகரங்களிலார்க்கும் நமக்கு யாண்டு

(வரி 85) இருபத்து நாலாவது நாள் பத்தினால் ஜயங்கொண்ட (சோழ) மண்

(வரி 86) டலத்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து நம் வீட்டினுள்ளால் நா

(வரி 87) ம் குளிக்குமிடத்துத் தானஞ் செய்யாவிருந்து பனையூர் நாட்டுத் தனியூர்

(வரி 88) ஸ்ரீராஜராஜச் சருப்பேதிமங்கலமும் இந்நாட்டு வாவலூர் ஜநநாதச்

(வரி 89) சருப்பேதிமங்கலமும் நிலமளக்கிற இடத்து, தங்களில் தத்து

(வரி 90) றவாய் வேறளந்த நன்நாடும் ஏர்ப்பாக்கமுமான விக்கிரமசோ

(வரி 91) ழ நல்லூர் அளந்தபடி நிலன் நூற்றொன்பதே முக்காலே அரை

(வரி 92) மா முந்திரிகைக்கீழ் இரண்டு மா முக்காணி முந்திரிகைக் கீழ் ஒன்

(வரி 93) பதின் மாக்காணி அரைக்காணியில் ஊர் இருக்கை நிலன் மூன்றே ஆறு மாவி

(வரி 94) ந்கீழ் எட்டு மாக்காணி அரைக்காணிக்கீழ் மாகாணியும் ஊருணிக்குளமும்

(வரி 95) கரையும் ஓடையும் நிலன் ஒன்றே முக்காலே மாகாணி முந்திரிகைக் கீழ் இ

(வரி 96) ரண்டு மா முக்காணி அரைக்காணிக் கீழ்காலும் வதி வாய்க்கால்களால் நிலம்

(வரி 97) மூன்றே எழுமாவரை அரைக்காணி முத்திரிகைக்கீழ் எட்டுமா முக்காணி

(வரி 98) க் கீழ் ஆறு மாக்காணியுஞ் ஜநநாதச் சருப்பெதிமங்கலத்து ஏரிக்குப் பாயும்

(வரி 99) சிற்றாற்றாலும்மணிமுத்தாற்றாலும் நிலன் நாலெ முக்காரே ஒருமாவரை மு

(வரி 100) ந்திரிகைகீழ் ஆறுமாக்கணி முத்திரிகைக் கீழ் இருமாவரையும் இவ்வூர்

(வரி 101) ஐந்தாளிமாதேவர் ஸ்ரீ கோயிலுந் திருமுற்றமும் திருநந்தவனமும் நிலன் நாலுமா

(வரி 102) க்காணி முத்திரிகைக் கீழ் அரையெ மூன்றுமா முக்காணியும் பிடாரியார் ஸ்ரீ

(வரி 103) கோயிலுந் திருமுற்றமும் நிலன் ஒருமாவரை அரைக்காணி முந்தி

(வரி 104) ரிகைக் கீழ் முக்காலே இருமாவரையும் ஐய்யநார் ஸ்ரீகோயிலுந்

(வரி 105) திருமுற்றமும் நிலன் முக்காணி முந்திரைக்கீழ் முக்காலே மூன்று

(வரி 106) மா முக்காணியும் ஸ்ரீ ராசராசச் சருப்பெதிமங்கலத்துப் பிடாகை

(வரி 107) ய்தாரில் திருவிராமீஸ்வரமுடைய மாதேவர் திருநந்தவநம் நிலன் அரையே

(வரி 108) முக்காணி அரைக்காணி முந்திரிகையும் கம்மாணசேரி நிலம் மூன்று மாக்காணி

(வரி 109) அரைக்காணி முத்திரிகைக் கீழ் முக்காலும் பறைச்சேரி நிலன் மூன்றுமாக்கா

(வரி 110) ணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலுங் கன்று மேய் பாழ்நிலம் இரண்

(வரி 111) டே ஒருமா முக்காணி முந்திரிகையுஞ் சுடுகாடு நிலன் மூன்று மாக்காணி அ

ஐந்தாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 112) ரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலுஞ் ஜநநாத சருப்பெதி மங்கலத்து ஏரிநீர்ே

(வரி 113) காவை நிலன் ஒன்றே ஆறுமாவரைக்காணிக் கீழ் இருமாவரையும் களரும் உவரு

(வரி 114) ம் நிலன் அரையே அரைமாவரைக்காணிக் கீழ் அரையே நான்மாவரை அரை

(வரி 115) க்காணி முந்திரிகையும் ஆக நீங்கும் நிலன் பதிநெட்டே முக்காலே ஒருமாவரை

(வரி 116) முந்திரிகைக் கீழ் முக்காலே மும்மாவரைக் கீழ் முக்கால் நீக்கி ஏரிநீர் பாய்ந்து

(வரி 117) ம் ஏத்தம் இறைத்தும் இருபூ விளையும் நிலன் எட்டே காணிக்கீழ் அ

(வரி 118) ரையும் ஏரிநீர் பாய்ந்து ஒருபூ விளையும் நிலன் ஐம்பத்தொன்ப

(வரி 119) தே காலே அரைமா முந்திரிகைக்கீழ் மூன்றுமா முக்காணி முந்திரி

(வரி 120) கக் கீழ் முக்காலே மாகாணியும் வரகும் எள்ளும் கொள்ளுந் துவ

(வரி 121) ரையும் உள்ளிட்டுப் புன்செய் விளையும் நிலன் இருபத்து மூன்றரையே மூன்று

(வரி 122) மா முந்திரிகைக் கீழ் அரையே காணி அரைக்காணிக் கீழ் முக்காலே மூன்றுமா

(வரி 123) வரைக் காணியும் ஆக நிலன் தொண்ணூறே முக்காலே மூன்றுமா முக்காணி அ

(வரி 124) ரைக்காணி முந்திரிகைக் கீழ் நாலு மாக்காணிக்கீழ் அரையே நாலு மாக்காணி

(வரி 125) அரைக்காணியினால் யாண்டு பதினைஞ்சாவது முதல் இறைகட்டி முதலான (நெ)

ஆறாம் ஏடு முதல்பக்கம்

(வரி 126) ல்லு மூவாயிரத்து நானூற்றுக் கலமும் யாண்டு பதினைஞ்சாவது முதல்

(வரி 127) காணிக்கடநாய் ஆட்டாண்டு தோறும் நின்றிறையாய் இறுப்பதாக இறைக

(வரி 128) ட்டி இவ்வூர் பனையூர் நாட்டு தநியூர் ஸ்ரீ ராஜராஜச்சருப் பேதிமங்கலத்துப் பிடா

(வரி 129) கை எய்தாரில் நம் உடையார் சர்வ சிவ பண்டிதர் எடுப்பித்தருளின திருக்கற்ற

(வரி 130) ளி திருவிராமீஸ்வரமுடைய மாதேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்ப

(வரி 131) தாக நமக்கு யாண்டு பதினைஞ்சாவது முதல் தேவதானமாக வரி

(வரி 132) யிலிட்டுக் குடுக்க வென்று நாஞ்சொல்ல நம் ஓலை எழுதும் அரு

(வரி 133) மொழிதேவ வளநாட்டு அளநாட்டு மும்முடி சோழநல்லூர் கிழவ

(வரி 134) ந் சிங்கானை மும்முடி சோழன் எழுத்தினாலும் நம் ஒலை நாய

(வரி 135) கங் கங்கைகொண்ட சோழபுரத்து ராஜவிச்சாதிரப் பெருந்தெருவில் சோன

(வரி 136) கன் சாவூர் பரஞ்சோதியான ராஜேந்த்ர சோழக்கந் திருவப்பேர் அரயனுங் ே

(வரி 137) காவநாச்சநான கங்கை கொண்(ட)சோழ அணிமுரி நாடாழ்வானும் உய்யக்கொண்

(வரி 138) டார் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தகச் சருப்பெதிமங்கலத்து நராக்கண்மார

(வரி 139) ரயன் அருமொழியான உத்தமசோழ ப்ரஹ்ம மாராயனும் இந்நாட்டுத் திருவ

ஆறாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 140) ழுந்தூர் நாட்டுத் துளாருடையான் நாராயணன் எடுத்தபாதமான உத்தம ே

(வரி 141) சாழகோனும் ஒப்பிட்டுப் புகுந்த தீட்டினபடியேய் வரியிலிட்டுக் ெ

(வரி 142) காள்க வென்று உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தகச்

(வரி 143) சருப்பேதிமங்கலத்து நராக்கண் மாராயன் ஜநநாதநான ராஜேந்திர சோழப்ர

(வரி 144) ஹ்மாதிராஜன் சொல்ல இவன் சொன்னபடியே உடந்கூட்டத்து நங்கரும மாராயு

(வரி 145) ம் ராஜராஜப் பாண்டிநாட்டு மதுராந்தக வளநாட்டு வடதலைச் செம்பி

(வரி 146) நாட்டு தத்தைநல்லூர் உடையான் கடம்பன் மாநாகரனான இருமுடி

(வரி 147) சோழ மூவேந்த வேளானும் அருமொழி தேவ வளநாட்டு வலிவ

(வரி 148) லக்கூற்றத்து (ஆ)லத்தூர் உடையான் நாராயணன் பொற்க்காரியான

(வரி 149) கோன் மூவேந்த வேளானும் நடுவிருக்கும் க்ஷத்ரியசிகாமணி வளநாட்டு ே

(வரி 150) (வண்) நாட்டு ராஜேந்த்ர சோழச்சருப்பேதி மங்கலத்து சாண்டிலிய கோத்திர

(வரி 151) த்து, காத்தியாயன ஸுத்திரத்து உப்பம்பிரால் சங்கரன் சோலைப்பிரான் பட்ட ே

(வரி 152) சாமயாஜியும் விடையில் நங்கருமம் ஆராயும் இந்நாட்டு, சிறுகூற்ற நல்லூ

(வரி 153) ர் கிழவன் கொல்லாபுரத்தநான உத்தம சோழப் பல்லவதரயனும் ராஜே

ஏழாம் ஏடு முதல்பக்கம்

(வரி 154) ந்த்ரசிங்க வளநாட்டு திருக்கழுமல நாட்டு வீரசோழநல்லூர் உடையான் வீரபத்திர

(வரி 155) ன் தில்லை விடங்கநான ராஜேந்த்ர சோழ வேந்தவே(ள)ானும் இந்நாட்டுத் திருவிந்த

(வரி 156) ளூர்நாட்டு மதராந்தக நல்லூர் உடையான் வேங்கடவன் எறிந்தொடியான பரகேசரி

(வரி 157) மூவேந்தவேளானும் உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு மாந்தை கி

(வரி 158) ழான் மாறன் மனநிலையான நித்தவினோத மூவேந்தவேளானும் க்ஷத்ரியசிகாம

(வரி 159) ணி வளநாட்டு பனையூர் நாட்டு ஜனனாதநல்லூருடையான் காளி ஆதித்த

(வரி 160) னான முடிகொண்ட சோழமூவேந்த வேளானும் நித்தவினோத வளநாட்டு

(வரி 161) வெண்ணிக்கூற்றத்து குவளைவேலி உடையான் கோயில் சித்தநான சோ

(வரி 162) ழ பாண்டிய மூவேந்தவேளானும் நடுவிருக்கும் ராஜராஜப்பாண்டி நா

(வரி 163) ட்டு ராஜேந்த்ர சோழவளநாட்டுச் சோழ பாண்டிய வளநாட்டுத் திருப்புத்தூர் ஒலோச்சன்

(வரி 164) வஸந்தயாஜி ஸ்ரீகிருஷ்ணபுரநாராயண பட்ட வஸந்தயாஜியுஞ் சொல்லப் புரவுவரிதிணை

(வரி 165) க்களத்து கண்காணி க்ஷத்ரிய சிகாமணி வளநாட்டு திருநறையூர் நாட்டுச் செம்பியன்

(வரி 166) நல்லூருடையான் நின்றான் பட்டனும் ராஜாச்ரையவளநாட்டு வடவழிநாட்டுத் திருவெ

(வரி 167) ள்ளறையுடையான் திருவாக்கி ஆதித்தனும் புரவுவரி திணைக்களம் ஜெயங்கெ

ஏழாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 168) ாண்ட சோழமண்டலத்துத் திருமுனைப்பாடி ஆன்மூர் நாட்டு நல்லூருடையான்

(வரி 169) மருதன் சங்கரனுங் காலியூர் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கலுடையான் பன

(வரி 170) ங்காடன் குமாரகாளனும் திருமுனைப்பாடி ஆன்மூர் நாட்டுக் கணிச்சைப்பாக்கமுடை

(வரி 171) டயான் அரங்கன் பனிச்சையும் வரிப்பொத்தகம் ராஜராஜவளநாட்டுப் பேரரெயி

(வரி 172) ற்கூற்றத்து அண்டையூர் உடையான் தருக்கன் காரியும் உய்யக்கொண்டார் வளநாட்டு

(வரி 173) த் திருநறையூர் நாட்டுச் சோபுரமுடையான் அடிகள் காடனும் முகவெ

(வரி 174) ட்டி ராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்த்ர சோழவளநாட்டு மிழலைக்கூற்

(வரி 175) றத்துக் கீழ்கூற்று ஏம்பலுடையான் பட்டாலகன் சேந்தனும் ஜயங்கொ

(வரி 176) காண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து மாங்காடுநாட்டு உகும்

(வரி 177) பில் வல்லங்கிழான் பாக்கரன் கேசுவனுங் காலியூர்க்கோட்டத்துக் காலியூர் நாட்டு

(வரி 178) அய்யன்குளத்தூர் நெற்குன்றங்கிழான் தாழி திருவெளியும் வரிப்பொத்தகக்

(வரி 179) கணக்குச் சங்கத்தியம்பகமுடையான் தாழி நாராயணனும் வரியிலிடு பாலையூர்

(வரி 180) கிழவன் செட்டி (கொற்றனும்) கொல்லி மழவன் (ஆலன்) பொற்றேவனுங் கண்ணந்தை வா

(வரி 181) ணியன் கோவன் பிசங்கனும் பட்டோலை சிகாருடையான் அரங்கன் ஐய்யாற

எட்டாம் ஏடு முதல் பக்கம்

(வரி 182) னும் மேலூர் கிழவன் குணநிலை அத்தியூரனும் வரியிலிடுவித்த புரவுவரிதிணை

(வரி 183) க்களம் நல்லூர் உடையான் மருதன் சங்கரனும் முகவெட்டி வல்லங்கிழான் பாக்க

(வரி 184) ரன் கேசுவனும் வாசித்த சோழமண்டலத்துப் புரவுவரி திணைக்களத்து வரிப்பொத்த

(வரி 185) கக் கணக்கு பூண்டி உடையான் அரங்கன் நாரணனும் வரியிலிடு பாலையூர் கிழவன் செட்டி கொ

(வரி 186) காற்றனும் பட்டோலை மேலூர் கிழவன் குணநிலை அத்தியூரனும் இருந்து யாண்டு இருபத்து நா

(வரி 187) லாவது நாள் எழுபத்தாறினால் வரியிலிட்டுக் குடுத்த தங்கள் நாட்டுத் தனி

(வரி 188) யூர் ஸ்ரீ ராஜராஜச்சருப்பேதிமங்கலமும் இன் நாட்டு வாவலூர் நாட்டு ஜ

(வரி 189) னநாதச் சருப்பேதிமங்கலமும் நிலமளக்கிற இடத்துத் தங்களில் தத்

(வரி 190) துறவாய் வேறளந்த நன்னாடும் ஏர்ப்பாக்கமுமான விக்கிரமசோழ நல்

(வரி 191) லூர் பிடிசூழ்ந்து பிடாகை நடப்பிப்பதாகக் கண்காணி அன்நாடு வகை செய்கின்ற

(வரி 192) உடுத்தூர் உடையான் என்பான் பூரனையும் புரவுவரி திணைக்களம் ஐயங்கொ

(வரி 193) ண்ட சோழ மண்டலத்து திருமுனைப்பாடி ஆன்மூர் நாட்டு கணிச்சைப் பாக்கமுடை

(வரி 194) யான் அரங்கன் பனிச்சையும் பட்டன் ஆன்மூர்க் கோட்டத்து, குமிழி நாட்டு வான

(வரி 195) வன் மாதேவிச்சருப்பேதிமங்கலத்துக் கண்டேற்று ஸ்ரீக்ருஷ்ண பட்டனையு

எட்டாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 196) ம் போத தந்தோம் தாங்களும் இவர்களோடும் உடனின்று எல்லை தெரித்

(வரி 197) துக் காட்டிப் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி அறவோலை

(வரி 198) செய்து போத்தகவென்னுந் திருவாய்மொழியால் திருமன்னிவளர இருநில மட

(வரி 199) ந்தையும் போற்சயப்பாவையுங் சீர்த்தனிச் செல்வியுந் தன் பெருந்தேவியராகி

(வரி 200)இன்புற நெடுதிய (லூழியுள்ளிடைதுறை) நாடுந் துடர்வனவேலிப் பர்வனவா

(வரி 201) சியுஞ் சுள்ளிச் சூழ்மதிள்க் கொள்ளிப் பாக்கையும் நண்ணற்க் கருமுரண்

(வரி 202)மண்ணைக்கடக்கமும் பொருதடர் ஈழத்தரைசர் தம் முடியும் ஆங்கவ

(வரி 203)ர் தேவியர் ரோங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவன் வை

(வரி 204)வய்த்த சுந்தரமுடியும் இந்திரநாரமுந் தெண்டிரை ஈழமண்டல முழுவது

(வரி 205)ம் எறிபடைக் கேரளர் முறைமையிற்ச் சூடுங் குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ்

(வரி 206)செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவல் பல்பழந்தீய்வுஞ்

(வரி 207)செருவிற்றினவில் இருபத்தொருகால் லரைசு களைகட்ட பரசுராமன் மேல்வருஞ்சா

(வரி 208)ந்திமத் தீய்வரன் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமி

(வரி 209)க முசங்கியில் முதுகிட் டொளித்த ஜயசிங்கன் அளப்பரும் புகழொடு மிடயல்

ஒன்பதாம் ஏடு முதல்பக்கம்

(வரி 210) இரட்டபாடி ஏ(ழ்)ழரை இலக்கமும் நவநெதிக்குலப் பெருமலைகளும் விக்கிரம வீரர்

(வரி 211) சக்கரகோட்டமும் முதுர்வடவல்லைமதுரமண்டலமும் காமிடைவள நாமணைக் கோணை

(வரி 212) யும் வெஞ்சிலை வீரர் பஞ்சப்பள்ளியும் பார்சடைப் பழன மாசுணிதேசமும் அயர்வி

(வரி 213) ல் வண்பூர்த்தி யாதி நகரவையில் சந்திரன் தொல்குலத்திந்திரதனை விளையமர்க் க

(வரி 214) ளத்துக் கிளையொடும் பிடித்துப் பல தனத்தொடு நிறை குலதனக் குவையும் கிட்டருஞ் செ

(வரி 215) சறி மிளை ஒட்ட விஷையமும் பூசுரர் சேர் நல்க்கோசலை நாடுந் தன்மபால

(வரி 216) னை வெம்முனை யழித்து வண்டுறை சோலைத் தண்டபுத்தியும் இரண சூரனை

(வரி 217) முரணுகத் தாக்கித் திக்கனை கீர்த்தித் தக்கணலாடமுங் கோவிந்தசந்தன் மாவி

(வரி 218) ழிந்தோட தங்காத சாரல் வங்காள தேசமும் தொடுகடல் சங்குவொட்டம

(வரி 219) யிபாலனை வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித்தருளி ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்

(வரி 220)டாரமும் நித்தில நெடுங்கட லுத்திரலாடமும் வெறிமலர்த் தீரத்தெறி புனல் கங்கையு

(வரி 221) ம் அலைகடல் நடுவுட்ப் ப(ல) கலஞ்செலுத்தி சங்கிராம விசையோற்த்துங்க பன்மநா

(வரி 222)கிய கடாரத்தரயனை வாகையம் பொருகடல்க் கும்பக்கரியொடும் அகப்படுத்துரி

(வரி 223)மையில் பிறக்கிய பெருநதிப்பிறக்கமும் ஆர்த்தவநகர்நெகப் போர்த்தொழில் வா

ஒன்பதாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி224)சலில் விச்சாதிர தோரணமு மொத்தொளிர் புனமணிப்புதவமும் கனமணிக்கதவமும்

(வரி 225)நிறை ஸ்ரீ விஜயமுந் துறை நீர் பன்னையும் பன்மலையூரெயிற் றொன்மலையூரும் ஆழ்கட

(வரி 226)லகழ்சூழ் (மாசிருடிங்(க)மும் கலங்காவல்வினை இலங்காசோபமும் கொப்புறு நிறைபுனல்

(வரி 227)மாபப்பாளமுங் காவலம் புரிசை மேவிலிம்பங்கமும் விளைப்பைந்தூறுடை வளைப்

(வரி 228)பந்தூறும் கலைத்தக்கோர் புகழ்த் தலைத்தக் கோலமுந் தீய்தமர் வல்வினை மதமாலிங்க

(வரி 229)மும் கலாமுதிற் கடுந்திறலிலாமுரி தேசமுன் தேனக்கவார்பொழில் மா

(வரி 230)நக்கவாரமும் தொடுகடற்க் காவற்க் கடுமுரட்க்கடாரமும் மாப்பொருதண்ட

(வரி 231) ாற்க் கொண்ட கோப்பரகேசரி பன்மரமான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவ

(வரி 232)ர்க்கு யாண்டு (இருபத்) தைஞ்சாவது நாள் ஐம்பத்தைஞ்சினால் திருமந்திர ே

(வரி 233)வாலை உய்யக்கொண்டார் வளநாட்டு விளைநாட்டு மாத்தூருடையான் நம்பன் பகையட

(வரி 234)க்கி எழுத்திநாலும் திருமந்திரவோலைநாயகங் கங்கைகொண்ட சோழபுரத்து ராஜவி

(வரி 235)ச்சாதரப் பெருந்தெருவில் சோனகன் சாவூர்பரஞ்சோதியான ராஜேந்திர சோழக்கந் திரு

(வரி 236)வப் பேரரையனும் கோவநாச்சநான கங்கைகொண்ட சோழ அணிமுரி நாடாழ்வானும்

(வரி 237)உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தகச் சருப்பேதி மங்கலத்து நரா

பத்தாம் ஏடு முதல் பக்கம்

*(வரி 238)*க்கண் மாராயன் அருமொழியான உத்தமசோழ ப்ரஹ்ம மாராயனும் இந்நாட்டுத்திரு

*(வரி 239)*வழுந்தூர் நாட்டுத் துளார் உடையான் நாராயணன் எடுத்தபாதமான உத்தமசோழச்

*(வரி 240)*சோழகோனும் ஒப்பிநாலும் நாட்டோமுக்குத் திருமுகம் பிரஸாதஞ் செய்தருளிவர ந

(வரி 241) ாட்டோமுந் திருமுகங்கண்டு எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித் தலைமேல்

*(வரி 242)*கொண்டு எல்லை தெரித்துக்காட்டிப் பிடிசூழ்ந்து பிடாகைநடந்து கல்லுங் கள்ளியு

*(வரி 243)*ம் நாட்டி அறவோலை செய்த பனையூர் நாட்டுத் தனியூர் ஸ்ரீராஜராஜச் சருப்

*(வரி 244)*பேதிமங்கலத்துப் பிடாகை எய்தாரில் உடையார் சர்வசிவ பண்டித

*(வரி 245)*தர் எடுப்பித்தருளின திருக்கற்றளித் திரவிராமீஸ்வரமுடைய மாதேவர்க்கு வே

*(வரி 246)*ண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக தேவதாநமாக பனையூர் நாட்டுத் தநி

*(வரி 247)*யூர் ஸ்ரீ ராஜராஜச் சருப்பேதி மங்கலமும் இந்நாட்டு வாவலூர் நாட்டு ஜனநாதச் சருப்பே

*(வரி 248)*பதிமங்கலமும் நிலமளக்கிற இடத்துத் தங்களில் தத்துறவாய் வேறளந்த நன்னாடும் ஏர்

*(வரி 249)*ப்பாக்கமுமான விக்கிரமசோழநல்லூர் என்னுந் திருநாமத்தால் வரியிலிட்ட ஊர்களில்

*(வரி 250)*நன்நாட்டுக்கு வடகீழ்முலை ஸ்ரீராஜராஜச்சருப் பேதிமங்கலத்து ராஜசூளாமணி வாய்க்கா

(வரி 251) லுக்கு தெற்க்கு ஜனநாதச்சருப்பேதிமங்கலத்தார் எல்லைக்கு மேற்க்கு தெற்க்கு நோக்கிச்

பத்தாம் ஏடு இரண்டாம் பக்கம்

*(வரி 252)*சென்று ஜநநாதச் சருப்பேதிமங்கலத்து வடக்கில் ஏரிக்குப் பாயும் சிற்றாறு வடகரை

(வரி 253)புழுதிபாடு முக்கோல் நீக்கி இச்சிற்றாறு தன்கிடையே இழிந்தேறித் தென்கரை புழுதி

(வரி 254)பாடு முக்கோல் நீக்கி தெற்க்கு நோக்கிச் சென்று ஈங்கை நின்ற புற்றுக்குக் கிழக்கு இரு

(வரி 255)கோலற்ற கொத்தமே யுற்றுக் கிழக்கு நோக்கி களர் புற்றுக்குத் தென்னருகே சென்று கி

(வரி 256)ழக்கு நோக்கி அழிஞ்சில் மேடேயுற்றுக் கிழக்கு நோக்கிச் சென்று புன்கம் மேட்டுக்கே

(வரி 257)உற்று தென்கிழக்கு நோக்கிச் சென்று ஸ்ரீ ராஜராஜச்சருப்பேதி மங்கலத்

(வரி 258)து ஸ்ரீராஜராஜ விண்ணகர் உய்யக்கொண்ட தேவர் நிலத்து மேலெல்லை

(வரி 259)யே உற்று தெற்க்கு நோக்கிச் சென்று மூன்றாங் கண்ணாற்று தென்னெல்

(வரி 260)லை முடிந்த இடத்தே உற்று இதனுக்குத் தெற்க்கு ஜனநாதச் சருப்பேதி மங்கல

(வரி 261) த்தார் எல்லைக்கு மேற்க்கு தெற்க்கு நோக்கிச் சென்று ஜநநாதச் சருப்பேதி மங்கல(த்)தா

(வரி 262)ர் வடக்கில் ஏரிக்கு நீர்பாயும் வாய்க்காலுக்கு வடக்கு முக்கோலற்ற கொத்தமே யுற்று

(வரி 263)இவ்வெல்லையே மேற்க்கு நோக்கிச் சென்று ஸ்ரீ ராஜராஜச் சருப்பேதி மங்கலத்து

(வரி 264)ப் பிடாகை பெரும்பாக்கத்துக் கீழெல்லையே யுற்று இன்னும் இவ்வெல்லைக் கீழா

(வரி 265)சறுதியே வடக்கு நோக்கிச் சென்று ஜநநாதச் சருப்பேதி மங்கலத்து வடக்கில் ஏரிக்கு

பதினொன்றாம் ஏடு முதல் பக்கம்

(வரி 266)நீர்பாயும் சிற்றாறு தென்கரை முக்கோல் விட்டு இச்சிற்றாறு தன்கிடையே இழிந்தேறி வ

(வரி 267)டகரை முக்கோல் விட்டு இதன் வடக்கு இன்னும் பெரும்பாக்கத்து கீழ் எல்லை ஆசறுதி ே

(வரி 268)யய் வடக்கு நோக்கிச் சென்று ஸ்ரீ ராஜராஜச்சருப்பேதி மங்கலத்து திருஅம்பலமுடை

(வரி 269)ய மாதேவரும் திருமாலிருஞ்சோலை விஷ்ணுக்களும் உள்ளிட்ட தேவர்கள் நிலத்து தென்வர

(வரி 270)ம்பே உற்று இவ்வரம்பே கிழக்கு நோக்கிச் சென்று இவ்வெல்லைக் கீழாசறுதியே உற்று

(வரி 271) இன்னும் இவ்வெல்லைக் கீழாசறுதியே வடக்கு நோக்கிச் சென்று ராஜசூளா

(வரி 272)மணி வாய்க்காலே உற்று இன்னும் இராஜசூளாமணி வாய்க்காலே கிழக்கு

(வரி 273)நோக்கிச் சென்று முன்பு துடங்கின இடத்தே உற்றது ஏர்ப்பாக்கத்துக்கு வடகீ

(வரி 274)ழ் மூலை திருவாமாத்தூரரார் நிலத்தில் ஜநநாதச்சருப் பேதிமங்கலத்தார்க்கு நீர்பா

(வரி 275)யக் கல்லின வாய்க்காலுக்குத் தெற்க்கு ஜநநாதச் சருப்பேதி மங்கலத்து எல்லைக்கு மேற்க்கு

(வரி 276)தெற்க்கு நோக்கிச் சென்று ஸ்ரீ ராஜராஜச்சருப்பேதிமங்கலத்து திருவாய்ப்பாடித் தேவர் நில

(வரி 277)த்து வட எல்லையில் நிகரிலிசோழ வாய்க்காலே உற்று இவ்வாய்க்காலே மேற்க்கு நோக்கிச் செ

(வரி 278)சன்று ஜயங்கொண்ட சோழவதியே உற்று இவ்வதியே தெற்க்கு நோக்கிச் சென்று நத்தத்தின் நடு

(வரி 279 வே போன பழவாய்க்காலுக்கே உற்று இவ்வாய்காலே கிழக்கு நோக்கிச் சென்று திருமா

பதினொன்றாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 280)லிருஞ்சோலைத் தேவர் நிலத்து மேல்லெல்லையே உற்று இவ்வெல்லையே தெற்க்கு

(வரி 281) நோக்கிச் சென்று இத்தேவர் நிலத்து வடவாசறுதியே உற்று இவ்வெல்லையே மேற்க்கு

(வரி 282)நோக்கிச் சென்று முதற்க்கண்ணாறே உற்று மேற்க்கு நோக்கிக் கருணாகர பிரிய தேவர் நிலத்துக் கீ

(வரி 283)ழாசறுதியே உற்று இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்று திருவாய்ப்பாடி தேவர் நி

(வரி 284)லத்து கீழாசறுதியே உற்று இவ்வெல்லையே வடக்கு நோக்கி சென்று நிகரிலி சோழ

(வரி 285)வாய்க்காலே உற்று இன்னும் ஜயங்கொண்ட சோழவதியே தெற்க்கு நோ

(வரி 286)க்கிச் சென்று ஜநநாதச்சருப்பேதி மங்கலத்தார் ராஜேந்திரசோழ வாய்க்காலி

(வரி 287)ல் வடகரையே உற்று இவ்வாய்க்கால் வடகரையே மேற்க்கு நோக்கிச் சென்று இவ்வெல்லை

(வரி 288)ஜநநாதச்சருப்பேதிமங்கலத்தார் கீழெல்லையே உற்று இவ்வெல்லையே வட

(வரி 289)க்கு நோக்கிச் சென்று இவ்வெல்லை வடவாசறுதியே உற்று இவ்வெல்லை வடவாசறுதியே மே

(வரி 290)ற்கு நோக்கிச் சென்று திருவாமாத்தூர் எல்லையே உற்று இவ்வெல்லை கீழாசறுதியே வ

(வரி 291) டக்கு நோக்கிச் சென்று ஸ்ரீராஜராஜச்சருப் பேதிமங்கலத்தார் நிகரிலி சோழவாய்க்காலே உற்று

(வரி 292)இவ்வா(ய்)க்காலே கிழக்கு நோக்கிச் சென்று ஜயங்கொண்ட சோழவதியே உற்று இவ்வதியே வ

(வரி 293)டக்கு நோக்கிச் சென்று திருவாமாத்தூரார் நிலத்தில் ஜநநாதச் சருப்பேதி மங்கலத்தா

பனிரண்டாம் ஏடு முதல் பக்கம்

(வரி 294)ர்க்கு நீர்பாயக் கல்லின வாய்க்காலே உற்று இவ்வா(ய்)க்காலே கிழக்கு நோக்கிச் சென்று மு

(வரி 295)ன்பு துடங்கின இடத்தே உற்றது ஆக இவ்விசைத்த பெருநான் கெல்லையுள்ளகப்பட நீ

(வரி 296)ர் நிலமும் புன்செய்யும் ஊரும் ஊரிருக்கையும் ஸ்ரீ கோயில்களுந் திருமுற்றங்களும் மனை

(வரி 297)யும் மனைப்படப்பையும் கடையும் கடைத்தெருவும் கம்மாணசேரியும் பறைச்சேரியு

(வரி 298)ஞ் சுடுகாடும் படுதுறையும் மன்றும் கன்றுமேய் பாழும் குளமும் கொட்டகமும் கிடங்

(வரி 299)கும்கேணியும் புற்றுந் தெற்றியும் காடும் பீடிலிகையும் கல்லும் களரும் உவ

(வரி 300)ரும் ஆறும் ஆறிடு படுகையும் ஓடையும் உடைப்பும் ஏரியும் ஏரிநீர்க்கோப்

(வரி 301) பும் மீன்பயில் பள்ளமும் தேன்ப்பயில் பொதும்பும் மேநோக்கிய மரமு

(வரி 302)ம் கீணோக்கிய கிணறும் உள்ளிட்டு நீர்பூசி நெடும்பாம்பெறிந்து உடும்பே

(வரி 303)ாடி ஆமைதவழ்ந்த தெவ்வகைப் பட்டதும் உண்ணிலம் ஒழிவின்றியே காரா

(வரி 304)ண்மை மீய்யாட்சியும் மிகுதிக் குறைமையும் உள்ளடங்கப் பனையூர் நாட்டு தனியூர் ஸ்ரீரா

(வரி 305)ஜராஜச்சருப்பேதிமங்கலத்துப் பிடாகை எய்தாரில் உடையார் சர்வசிவ பண்டிதர் எடு

(வரி 306)ப்பித்தருளின திருக்கற்றளி திருவிராமீஸ்வரமுடைய மாதேவர்க்கு தேவதானமாகப் பெற்

(வரி 307)றதற்க்கு பெற்ற விவஸ்தை இவ்வூர் நிலத்துக்கு நீர்க்கீந்தவாறு வாய்க்கால் கல்லிப் பாச்ச

(வரி 308)வும் வாரவிடவும் பெறுவதாகவும் இவ்வூர்க்குப் புறவூர் நிலத்தாறுபோந்து இவ்வூர்

பனிரண்டாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 309)க்கு நீர்க்கீய்ந்தவாறு ஆற்றுக்காலும் வாய்க்காலும் குமிழிகளாலும் ஓடைகளாலு

(வரி 310) ம் உடைப்புக்களாலும் முன்பு நீர்பாயும் முறைமையே் நடைநீர் பாயவும் வாரவும்

(வரி 311) பெறுவதாகவும் இவ்வூர் வாய்க்கால்கள் அன்னியர் குறங்கறுத்துக் குத்தவும் குற்டே

(வரி 312) றத்தமிடவும் கூடைநீர் இறைக்கவும் பாலி பாய்ச்சவும் விலங்கடைக்கவும் பெறாதிதாக

(வரி 313) வும் சென்னீர் பொதுவினை செய்யாதிதாகவும் அன்னீர் அடைத்துப்பாச்சப் பெறுவ

(வரி 314) தாகவும் இவ்வூர் ஏரிக்கு நீர் கோக்குமளவும் கோக்கத் தங்கள் நிலத்தில் க

(வரி 315) ரையட்டிக்கொள்ள பெறுவதாகவும் சுட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப்

(வரி 316) பெறுவதாகவும் துரவு கிணறு இழிச்சப் பெறுவதாகவும் காவுந் தெங்கும் க

(வரி 317) முகும் பனையும் பிலாவும் மாவுந் தமனகமும் இருவேலியும் செண்பகமு

(வரி 318) ம் செங்கழுநீரும் உள்ளிட்டுப் பல்லுருவில். பயன்மரம் இடப்பெறுவத

(வரி 319) ாகவும் பெருஞ் செக்கிடப் பெறுவதாகவும் இவ்வூர் எல்லை வட்டத்துப்பட்ட தெங்கும் பனை

(வரி 320)யும் ஈழவர் ஏறப்பெறாதிதாகவும் இப்படி பெற்ற விவஸ்தையோடும் பெற்ற பரியாரம்

(வரி 321) நாடாட்சியும் ஊராட்சியும் வட்டிநாழியும் பிதாநாழியும் வண்ணாரப் பாறையும் கண்ணால

(வரி 322)க்காணமும் இடைப்பாட்டமும் குசக்காணமும் தறிஇறையும் தட்டார்ப்பாட்டமும் தட்டழிப்பா

(வரி 323)ட்டமும் ஈழப்பூட்சியும் மன்றுபாடும் மாவிறையும் தீய்எரியும் விற்ப்பிடியும் வால

பதிமூன்றாம் ஏடு முதல்பக்கம்

(வரி 324)மஞ்சாடியும் நல்லாவும் நல்லெருதும் நாடுகாவலும் ஊடுபோக்கும் இலைக்கூலமு

(வரி 325)ம் நீர்க்கூலியும் உல்கும் ஓடக்கூலியும் உட்பட்டு கோத்தொட்டுண்ணப்பால தெவ்வ

(வரி 326)கைப்பட்டதுங் கோக்கொள்ளாதேய் இத்தேவர் கொள்ளப்பெறுவதாகவும் இப்படி

(வரி 327)பெற்ற விவஸ்தையோடும் பரியாரத்தோடும் பனையூர் நாட்டுத் தனியூர் ஸ்ரீராஜராஜச்சரு

(வரி 328)ப்பேதிமங்கலத்துப் பிடாகை எய்தாரில் உடையார் சர்வசிவ பண்டிதர் எடுப்பித்தரு

(வரி 329)ளின திருக்கற்றளி திருவிராமீஸ்வரமுடைய மாதேவர்க்கு யாண்டு பதினைஞ்சா

(வரி 330)வது முதல் தேவதானமாக பனையூர் நாட்டு நன்னாடும் ஏர்ப்பாக்கமுமான வி

(வரி 331) க்கிரம சோழநல்லூர் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங்கள்ளியும் நா

(வரி 332)ட்டி அறவோலை செய்து குடுத்தோம் பனையூர் நாட்டு நாட்டோம் இப்பரிசு

(வரி 333)இந் நாட்டாரோடும் கூடி நின்று எல்லை தெரித்துப் பிடி நடப்பித்துக் கல்லுங்

(வரி 334)கள்ளியும் நாட்டுவித்து அறவோலை செய்வித்துக்குடுத்தேன் காஞ்சிபுரத்துத் திருமுக

(வரி 335)வாராச்சிக்களத்து பட்டன் ஸ்ரீவானவன்மாதேவிச் சருப்பேதிமங்கலத்துக் கண்டேற்று

(வரி 336)ஸ்ரீ கிருஷ்ண பட்டநேன் இவை என் எழுத்தென்றும் இப்பரிசு இந்நாட்டு நாட்டாரோடும் உடநின்

(வரி 337)று பிடி சூழ்வித்தேன் புரவுவரி திணைக்களநாயகம் கணிச்சைபாக்கமுடையான் அரங்க

(வரி 338)ன் பனிச்சையேன் இவை என் எழுத்தென்றும் இப்படி பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்

பதிமூன்றாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 339)லுங் கள்ளியும் நாட்டி அறவோலை செய்து குடுத்தோம் பனையூர் நாட்டு ஸ்ரீ ராஜராஜச்சருப்

(வரி 340)பேதிமங்கலந் தண்டுகின்ற உடுத்தூர் உடையான் என்பான் பூரனேன் இவை என்னெழுத்தென்

(வரி 341) றும் இப்படி அறிவேன் துறவியான குஞ்சிரமல்லச் சருப்பேதிமங்கலத்து ஆரிதன் மாத

(வரி 342)வன் தேவநேன் இவைஎன் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் காச்யபன் சங்கரன்

(வரி 343)தியம்பகநேன் இவை என்னெழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர்க் கௌதமன் திருவரங்க

(வரி 344)ன் திருமாலிருஞ்சோலையேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன்

(வரி 345)ஆரிதன் சுவாமி சடையநேன் இவை என் எழுத்தென்றும் பனையூர் நாட்டு நாட்

(வரி 346)டார்க்குச் சமைந்து பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி அ

(வரி 347)றவோலை செய்து குடுத்தேன் ஸ்ரீராஜராஜச் சருப்பேதி மங்கலத்து கரணத்த

(வரி 348)ான் நக்கன் அண்ணாமலையான நாங்கூர்ப் பெருங்காவதியேன் இவை என் எழு

(வரி 349)த்தென்றும் இப்படி அறிவேன் ஸ்ரீராஜராஜச் சருப்பேதிமங்கலத்து ஸ்ரீமதுராந்தகச்சேரி பச

(வரி 350)லை ஐய்யந் நாராயணநேன் இவைஎன் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீலோ

(வரி 351) கமாதேவிச்சேரி மந்திரத்து நாராயணக் கிரமவித்தனேன் இவையென் எழுத்தென்றும் இப்

(வரி 352)படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீபெரிய வானவன்மா தேவிச்சேரி செம்புறை திருவிக்கிரமன் பரமே

(வரி 353)ச்வர பட்டநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீ உத்த(ம) சோழச்

பதினான்காம் ஏடு முதல் பக்கம்

(வரி 354)சேரி வானவன்மாதேவி நாராயணன் சீராமநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறி

(வரி 355)வேன் இவ்வூர் ஸ்ரீராஜராஜச்சேரி குல(குத்தி) செட்டகாளக் கிரமவித்தநேன் இவை என் எழு

(வரி 356)த்து என்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீசோழகுல சுந்தரிச்சேரிக் கிராஞ்சி சீ ராகவக் கிரம

(வரி 357)வித்தநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீ வானவன் மாதேவிச்

(வரி 358)சேரி இருங்கண்டி ஸ்ரீமாதவபட்டநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்

(வரி 359)வூர் ஸ்ரீஅருமொழிதேவச்சேரி மருதூர் பாலாசிரியன் சேந்தன் அரியரநேன் இவை என் எழுத்

(வரி 360)தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீவானவன்மாதேவிச் சேரி அம்பி

(வரி 361) க்குரவசரி மாதவ க்ரமவித்தநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவே

(வரி 362)ன் இவ்வூர் ஸ்ரீசேரகுலசூளாமணிச்சேரி துவேதை கோமபுறத்து கேரள

(வரி 363)பூதிக் கிரமவித்தநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூ

(வரி 364)ர் ஸ்ரீசுந்தரசோழச்சேரி வெண்ணிச் செட்டுக் கணசுவாமிப் பட்டநேன் இவை எ

(வரி 365)ன் எழுத்தென்றும் இப்படி அறிவேன் ஜநநாதச்சருப்பேதி மங்கலத்து

(வரி 366)உத்தம சோழச்சேரி தள்ளாமாற நாராயணநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறி

(வரி 367)வேன் இவ்வூர் ராஜசுந்தரிச்சேரி ஆத்துக்கூர் சங்கணக் கிரமவித்தநேன் இவை என எழுத்தெ

(வரி 368)ன்றும் இப்படி அறிவேன் இவ்வூர் கங்கைகொண்ட சோழச்சேரி ஏநலூர் ஸ்ரீராம க்ரம

(வரி 369)வித்தநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ராஜராஜச்சேரி கோள

(வரி 370)ாவிகேசுவக் கிரமவித்தநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஜநநா

(வரி 371) தச்சேரி குண்டூர் நந்தி பெருமான் கிரமவித்தநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி

பதினான்காம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 372)அறிவேன் இவ்வூர் விக்கிரம சோழச்சேரி தாழன் ஸ்ரீபட்டயக் கிரமவித்தநேன் இவை என் எழு

(வரி 373)த்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஸ்ரீசோழகேரளச்சேரி அரசூர் நாராயணன் சூரிய

(வரி 374)தேவநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் சோழபாண்டிய

(வரி 375)ச்சேரிக் கிளிநல்லூர் ஆதாங்கி ஈஸ்வரபட்டநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அ

(வரி 376)றிவேன் இவ்வூர் மதுராந்தகச்சேரி ராயூர் பூதிசன்மப்பட்டநேன் இவை என் எழுத்தென்றும்

(வரி 377)இப்படி அறிவேன் இவ்வூர் முடிகொண்ட சோழச்சேரி குரவசரி நாராயண தேவக் கிரமசோ

(வரி 378)மயாஜியேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ரா

(வரி 379)ஜேந்த்ரசோழச்சேரிக் கோமபுரத்து திருவெண்காடக் கிரமவிநேன் இவை

(வரி 380)என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் திருவாமாத்தூர் வெள்ளாளன் வே

(வரி 381) ணிகிழான் ஆமாத்தூர் அண்ணாமலையேன் இவை என் எழுத்தென்றும் இப்

(வரி 382)படி அறிவேன் இவ்வூர் கவிசிகன் அமுதன் பாக்கரநேன் இவை என் எழுத்

(வரி 383)தென்றும் இப்படி அறிவேன் இவ்வூர் ஆத்திரையன் வெண்காடன் மோடநே

(வரி 384)ன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிவேன் இந்நாட்டுப் பொய்கை நாட்டு அருமொழி

(வரி 385)தேவபுரத்து வியாபாரி கருக்கனட்டநேன் இவைஎன் எழுத்தென்றும் இப்படி அறிே

(வரி 386)வன் இவ்வூர் வியாபாரி கலியன் கோவிந்தநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி அறிே

(வரி 387)வன் இவ்வூர் வியாபாரி என்பான் சூரியநேன் இவை என் எழுத்தென்றும் இப்

(வரி 388)படி அறிவேன் இந்நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானங் கொண்டோஞ்சி வெ

பதினைந்தாம் ஏடு முதல் பக்கம்

(வரி 389)(ள்ளா)ன் ஆர்காடு கிழான் பட்டாலகன் கண்டநேன் இவை என் எழுத்தென்றும் இப்படி

(வரி 390)(அறி)வேன் இவ்வூர் வெள்ளாளன் மாதேவன் சுந்தரநேன் இவை என் எழுத்தென்றும்

(வரி 391) (இப்)படி அறிவேன் இவ்வூர் வெள்ளாளன் சாத்தனூருடையான் முகத்தை தளிய நாச்சநே

(வரி 392)(ன்இ)வை என் எழுத்தென்றும் புகுந்தபடியே வரியிலிட்டுக் கொள்கவென்று உய்யக் கொண்டா

(வரி 393)ர் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தகச் சருப்பேதி மங்கலத்து நராக்கன் மாராயன் ஜநநாதநாராயண ரா

(வரி 394)ஜேந்த்ர சோழ ப்ரஹ்மாதிராஜர் ஏவ இவர் ஏவினபடியே உடந்கூட்டத்து அதிகாரிகள் ஜயங்கொண்ட சோ

(வரி 395)ழமண்டலத்து காலியூர் குமார கோட்டத்து காலியூர் நாட்டு உக்கலுடையார்ரகாளன் வாசுதேவநா

(வரி 396)ரான அதிசய சோழ மூவேந்தவேளாரும் உய்யக்கொண்டார் வளநாட்டு விளைநாட்டு அரைசூ

(வரி 397)ர் உடையான் அறிவாளந் கயிலாயத்தாரான குமாரவிச்சாதர மூவேந்த வேளாரும் இராஜே

(வரி 398)ந்த்ரசிங்க வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு அரிந்தமன் நல்லூர் உடையான் நீலன் வெண்காடநா

(வரி 399)ரான கண்டராதித்த மூவேந்தவேளாரும் விடை அதிகாரிகள் உய்யக்கொண்டார் வளநாட்டு தி

(வரி 400)ருவழுந்தூர் நாட்டு மாந்தைகிழார் மாறன் மனநிலையரான நித்தவினோத மூவேந்தவே

(வரி 401) ளாரும் க்ஷத்ரியசிகாமணி வளநாட்டு வேளாநாட்டு சிறுகூற்று நல்லூர் கிழவர் கொல்லை புத்தநாரான உத்த

(வரி 402)மசோழ பல்லவரையரும் ஏவ இப்புரவுவரிதிணைக்களத்து கண்காணி ஜயங்கொண்ட சோழமண்டல

(வரி 403)த்து எயிற்கோட்டத்து அம்பிநாட்டு சிற்றரியலுடையான் திருப்பொரி திருவேங்கடமும் நெற்குப்பை

(வரி 404)ப உடையான் அம்பலவன் கணவதியும் புரவுவரிதிணைக்களம் ராஜராஜ பாண்டிநாட்டு ராஜேந்த்ர

(வரி 405)சோழ வளநாட்டு தென்கள வழிநாட்டு வேம்பற்றூர் உடையான் வேங்கடவன் ஆடவலானு

(வரி 406)ம் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துத் திருமுனைப்பாடி ஆன்மூர் நாட்டுக் கணிச்சைப் பாக்கமு

பதினைந்தாம் ஏடு இரண்டாம் பக்கம்

(வரி 407)டையான் அரங்கன் பனிச்சையும் வரிப்பொத்தகம் அண்டையூருடையான் தருக்கன் காரியும் முகவெட்டி (க்ஷத்ரிய)

(வரி 408)சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு கொற்றமங்கலமுடையான் கோன் ஆதித்தனு ராஜராஜப் பாண்டிநாட்டு ராஜே

(வரி 409) ந்த்ரசோழ வளநாட்டு மிழலைக் கூற்றத்துக் கீழ்கூற்று ஏம்பலுடையான் பட்டாலகன் சேந்தனும் வரிப்பொத்தக க

(வரி 410) ணக்கு பெரும்பேடு கிழாந் குன்றன் வேளானும் வரியிலிடு பாலையூர் கிழவன் கதவன் மருதனும் பட்டோலை மா

(வரி 411) ட்டூருடையானும் வல்லங்கிழான் சாத்தன் சிற்றேரியும் அறவோலை வரியிலிடுவித்த புரவுவரித் திணைக்களம் ஜயங்கொண்

(வரி 412) ட சோழமண்டலத்து திருமுனைப்பாடி ஆன்மூர் நாட்டு கனிச்சை பாக்கமுடையான் அரங்கன் பனிச்சையும் வாசித்த வ

(வரி 413) ரிப்பொத்தக நாயகம் அண்டையூருடையான் (தருக்)கன் காரியும் வரியிலிட்ட சோழமண்டலத்து புரவு

(வரி 414) வரி திணைக்களத்து வரியிலிடு கீரமங்கலமுடையான் மூதரன் சங்கெருமானும் பட்டோலை எழுதின ஜ

(வரி 415) யங்கொண்ட சோழமண்டலத்து புரவுவரிதிணைக் களத்துக் கீழ் முகவெட்டி அருமொழி பிராந்தகனு

(வரி 416) ம் இருந்து யாண்டு இருபத்தஞ்சாவது முதல் முன்னூற்றெழுபத்தைஞ்சினால் வரியிலிட்டுக் குடுத்து (பர)

(வரி 417) தெத்திசெந்றது இவை உய்யக்கொண்டார் வளநாட்டு திரைமூர் நாட்டுடார்..... கிழான் அரையன் ராஜராஜநா

(வரி 418) ந மதுராந்தக இளங்கோவேளான் எழுத்து உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தகச்

(வரி 419) ருப்பேதி மங்கலத்து நராக்கண் மாராயன் அருமொழியான உத்தமசோழப்ரஹ்மமாராயனுக்கு ஒக்கும் க்ஷத்ரிய

(வரி 420) சிகாமணி வளநாட்டு திருநறையூர் நாட்டு ஆடிப்புலியூருடையன் கோவனாச்சனான ஜயங்கொண்டசோழ

(வரி 421) அணிமுரி நாடாழ்வானுக்கு ஒக்கும் கங்கைகொண்ட சோழபுரத்து ஸ்ரீராஜவிச்சாதிரப்பெருந்தெருவில் சோனகன் (சா)

(வரி 422)வூர் பரஞ்சோதி ஆன ராஜேந்த்ரசோழக்கந் திருவப்பேரரையனுக்கும் ஒக்கும் உய்யக்கொ

(வரி 423)ண்டார் வளநாட்டு திருவழுந்தூர் நாட்டு துளாருடையான் நாராயணன் எடுத்தபா

(வரி 424)தமான உத்தமசோழகோனுக்கும் ஒக்கும். ஸ்வஸ்திஸ்ரீ.

எசாலம் புதையலில் கண்டெடுத்த ஐம்பொன்சிலைகள்

தென்னிந்தியாவில் திருப்பணிக்காகவோ வேறு நோக்கத்திற்காகவோ நிலத்தைத் தோண்டும்போது சிலசமயங்களில் ஐம்பொன் சிலைகளும் செப்பேடுகளும் நகைகளும் பழையகாசுகளும் கிடைத்துள்ளன. பெரும்பாலும் மாற்றரசர் படையெடுப்புக்கஞ்சி பூமியில் புதைக்கப்பட்ட ஐம்பொன்சிலைகள் 300க்கு மேல் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அவை அரசு அருங்காட்சியகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டாலும் சில ஊர்களில் கோயிலேயே வைத்தும் வழிபடப் பெற்று வருவதைப் பார்க்கிறோம்.

தமிழகத்தில் ஐம்பொன் சிலைகள், பூஜை பொருட்கள், செப்பேடுகள் என ஒருசேரப் பூமியில் இருந்து கண்டெடுத்த கோயில் எசாலம் சிவன்கோயில் ஆகும். முஸ்லீம்கள் படையெடுப்புக்கஞ்சி எசாலம் கோயிலில் பூமியைத் தோண்டி ஆற்றுமணலைப் பரப்பி அங்கே மேற்கண்டவைகளைப் புதைத்துள்ளனர் எனலாம். கி.பி. 1310 முதல் 1350 வரை உள்ள காலத்தில் இவைகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று அறிஞர் இரா.நாகசாமி கருதுகிறார். இனி இங்கே கண்டறிந்த செப்புச் சிலைகளைக் காண்போம்.

1. விநாயகர்

சதுரமான பத்ரபீடத்தின் மேலுள்ள தாமரை இருக்கை மீது வலதுகாலை ஊன்றி இடதுகாலைத் தரை மீது வைத்துச் சதுர்புஜத்துடன் நின்ற கோலத்தில் விநாயகர் உள்ளார். மேல் வலக்கை அங்குசத்தைப் பிடிக்க மேல் இடக்கை பாசக்கயிற்றினை மடித்துப் பற்றியுள்ளது. கீழ்வலக்கை உடைந்த தந்தத்தைப்பற்ற கீழ்இடக்கை மோதக உருண்டையை ஏந்தியுள்ளது. இடம்புரியாக துதிக்கை விளங்கத் தோளிலிருந்து கீழ்வயிறுவரை அழகிய முத்துக்கள் கோத்தப் பூணூலும் கழுத்தில் கண்டசரத்துடன் கூடிய மணிவட அணிகலனும் காட்டப்பட்டுள்ளன. மேற்கைகளில்

கேயூரமும் முன்கைகளில் கைவளையும் பாதங்களில் காப்பும் பாதசரமும் உள்ளன. முடிமுதல் பீடம்வரை 56 செ.மீ. உயரமும் தோள்களுக்கிடையே 14½ செ.மீ. அகலமும் உள்ளன. திருவாசியில் 37 சுடர்கள் உள்ளன.

2. ஞானசம்பந்தர்

இடதுகாலை மடித்து ஊன்றி வலதுகாலைத் தூக்கி ஆடும் நிலையில் ஆடும் சம்பந்தராக இவர் காட்சி தருகிறார். இருகரங்களில் வலக்கரம் சூசிமுத்திரை காட்ட இடக்கரம் போல ஹஸ்தத்தில் உள்ளது. வேலைப்பாடுடைய கேசபந்தம். வட்டக் குழையுடைய செவிகளின் மேல்புறம் செவிப்பூக்கள் உள்ளன. கழுத்திலும் தோளிலும் பல அணிகலன்கள். இடையில் ஒற்றை வடஅரைஞாண் கால்களில் பொற்கழல்கள். ஞானக் குழந்தையாகச் சம்பந்தர் உள்ளார். உயரம் 52 செ.மீ. அகலம் 13 செ.மீ.

3 பைரவர் - 1

புதையலில் இருபைரவர் சிலைகள் கிடைத்தன. 64 செ.மீ. உயரமும் 16 செ.மீ. அகலமும் கொண்ட ஒரு பைரவர் நான்கு கரங்களுடன் அச்சந்தரும் வகையில் சீற்றத்துடன் வடிக்கப்பட்டுள்ளாா. மேல்வலக்கை உடுக்கையும் மேல் இடக்கை பாசக்கயிற்றையும் ஏந்தக் கீழ் வலக்கை கடக முத்திரையில் திரிசூலம் ஏந்தும் பாவனையில் உள்ளது. கிழ் இடக்கை கபாலக் கிண்ணத்தைப் பற்றியுள்ளது. தலையில் நெருப்புப் பிழம்பான மகுடமுள்ளது. நெற்றியை நெற்றிப்பட்டம் அலங்கரிக்க வலதுகாதில் மகரக்குழையும் இடதுகாதில் ஓலைக்குழையும் உள்ளன. தடித்த பூணூலுடன் இடையில் அரவுடன் கூடிய அரைஞாண் உள்ளது. ஆடையற்ற இவருக்கு நான்கு கரங்கள் உள்ளன. வாயில் கோரைப்பற்கள் உள்ளன. 19 செ.மீ. நீளமும் 6 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. காலம் 11ஆம் நூற்றாண்டு எனலாம்.

4. சிறிய பைரவர்

திருவாசியுடன் கூடிய சிறிய பைரவர் சிலை 12 செ.மீ. உயரமும் 7 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. நான்கு கரங்களுடன் சீற்றத்துடன் இவரும் உள்ளார். பீடமும் வலக்காலும் உடைந்துள்ளன. இச்சிற்பம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு எனலாம்.

5. சண்டேசுவரர்

நின்ற கோலத்தில் இருகரங்களுடன் கூடிய சண்டேசுவரர் எழிலுடன் காணப்படுகிறார். வலக்கை முழு ஆயுதத்தை ஏந்தியபடி

உள்ளது. சிம்ம கரண முத்திரையில் இடக்கை காட்டப் பட்டுள்ளது. சடாமகுடம் தலையை அலங்கரிக்க, தொள்ளைக் காதுகளாகச் செவிகள் உள்ளன. கழுத்திலும், தோள்களிலும், கைகளிலும், கால்களிலும் பல அணிகலன்கள் காட்டப்பட்டுள்ளன. பட்டையான பூணூல் உள்ளது. 64 செ.மீ. உயரமும் 16 செ.மீ. அகலமும் கொண்ட இச்சிலை கி.பி. 11ஆம் நூற்றாண்டின் கலை அமைப்பைக் கொண்டுள்ளது.

6. உமையம்மை

தாமரைப் பீடத்தில் வலது காலை ஊன்றி இடது காலை முன்னால் வைத்து ஒயிலாக நின்றபடி இருகரங்களுடன் கூடிய உமையின் தலையைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. இடையில் பூக்கள் பொறித்த ஆடையுடன் கூடிய அம்மன் நீள் வட்டமுகத்தில் அருள்பொங்க, திரிபங்க நிலையில் உள்ளார். இவர் மேனி எழிலுடன் பல அணிகளுடன் திகழ்கிறது. காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு ஆகும். பீடத்திலிருந்து முடிவரை 69 செ.மீ. நீளமும் தோள் அகலம் 13 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. இருகரங்களில் ஒன்று கடகமும் மற்றொன்று லோலமுத்திரையிலுமாக உள்ளன.

7. சந்திர சேகரர்

சதுரமான உயர்ந்த பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கைமேல் நின்ற கோலதில் உள்ள சந்திரசேகரர் 4 கரங்களுடன் உள்ளார். மான், மழு, அபயம், வரதமெனக் கரங்களில் உள்ளன. பெருமானின் தலையைப் பிறையணிந்த சடைமுடி அலங்கரிக்க நெற்றியில் முத்துப்பட்டமும் இடது காதில் வட்டமான ஓலைக்குழையும், வலது காதில் மகரக் குழையும் தோள்களில் சரிந்த தோள் மாலையும் உள்ளன. கழுத்திலும் மார்பிலும் கண்டசரம், மணிவடம், சரப்பளி, பொன்வடம், முத்து வடம் ஆகியவை உள்ளன. மணிவளை, முத்து வளை, கைவளை ஆகியவை கரங்களில் உள்ளன. முப்புரிநூலும் இடையில் ஆடைக்கட்டும் சிம்மமுகக்கச்சும் கால்களில் பாத சரங்களும் உள்ளன. இதுவும் கி.பி. 11ஆம் நூற்றாண்டுக் கலை அமைப்புடையதாகும். உயரம் 43 செ.மீ. தோள் அகலம் 8 செ.மீ. ஆகும்.

8. சிறிய சந்திரசேகரர்

மேலே கண்ட சந்திரசேகரர் போன்று இருப்பினும் உருவில் சிறியதாக உள்ளது. காலம் கி.பி. 12-13 நூற்றாண்டு எனலாம். உயரம் 37 செ.மீ தோள் உயரம் 8 செ.மீ.

9. மிகச்சிறிய சந்திரசேகரர்

இந்தச்சிலையும் நேராக நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் உள்ளது. 25 செ.மீ. உயரமும் 7 செ.மீ. அகலமும் உடைய இது மிகவும் பிற்காலத்தில் (கி.பி. 15-16ஆம் நூற்றாண்டு) செய்யப்பட்டதாகும்.

10. பாசுபத மூர்த்தி

புதையலில் இரண்டு பாசுபத மூர்த்தங்கள் கிடைத்தன. திரிசூலத்தையும் பாசக்கயிற்றையும் பின்புறக்கைகளில் பற்றிய இம்மூர்த்தியின் முன்புறக்கைகளில் அபயவரத முத்திரைகளைக் காண்கிறோம். சடாமகுடம் தலையை அலங்கரிக்க, நெற்றியில் முத்துப்பட்டம் உள்ளது. வலதுகாதில் அணிகலன் இன்றி இடது காதில் ஓலைச்சுருள் உள்ளது. பல்வேறு அணிகள் காட்டப்பட்டுள்ளன. உயரம் 37 செ.மீ. தோள் அகலம் 7 செ.மீ.

11. சிறிய பாசுபத மூர்த்தி

இதுவும் முதற்படிவத்தையொத்தே உள்ளது. நாகமும் பிறையும் காட்சிதரும் சடை மகுடத்துடன், மகர பத்ரகுண்டலங்கள் காதுகளை எழிலூட்டுகிறது இது கி.பி. 13ஆம் நூற்றாண்டு எனலாம். உயரம் 30 செ.மீ. தோள் அகலம் 9 செ.மீ.

12. கொற்றவை -1

புதையுண்டிருந்த இரு கொற்றவை சிலைகள் கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு எனலாம். உயரம் 24 செ.மீ. தோள் அகலம் 5 செ.மீ. திருவாசியில் 33 தீச்சுடர்கள் உள்ளன. கரண்ட மகுடம்; மகரக்குழைகள்; சங்கு, சக்கரமுள்ள மேற்கைகள் என இவ்வம்மன்காட்சி தருகிறார். கீழ்வலக்கரம் அபயமுத்திரை காட்ட இடக்கரத்தின் மீது கிளி உள்ளது. எருமைத் தலையும் காட்டப்பட்டுள்ளது.

13. கொற்றவை-2

எருமைத்தலையுடன் முறுக்கேறிய கொம்புகளையும் நீண்ட நாக்கையும், விரிந்த காதுகளையும் கொண்ட அசுரனுடன் நான்கு கரங்களுடன் கொற்றவை நேராக நின்றபடி காட்டப்பட்டுள்ளாள். வழக்கமான அணிகலன்களுடன் 24 செ.மீ. உயரமும் 5½ செ.மீ. தோள் அகலமும் கொண்டுள்ளது. காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு எனலாம்.

14. சூரியன்

சிறிய வடிவில் கூடிய சூரியன் சிலை இருகைகளில் தாமரை ஏந்தியபடி கடகமுத்திரையில் உள்ளன. கரண்ட மகுடம்

நெற்றியில் முத்துப்பட்டமும் காதுகளில் உருத்திராட்ச குண்டலங்களும் உள்ளன. நீள வட்டமுகத்துடன் மலர்ந்த கண்களுடன் உள்ளார். பீடத்துடன் உயரம் 16 செ.மீ. பீடம் நீக்கிய சிலையின் உயரம் 14 செ.மீ. திருவாச்சி பொருத்திடத் தக்க முளைகள் இருபுறமும் பீடத்தில் உள்ளன.

15. சிறிய விநாயகர்

இந்த விநாயகரும் நடனக் கோலத்திலேயே உள்ளார். சதுர் புசத்துடன் கூடிய இச்சிலையின் உயரம் 9 செ.மீ. அகலம் 3 செ.மீ. கி.பி. 15-16ஆம் நூற்றாண்டு கலைப்பாணியில் உள்ளது.

16. சதுர்புச விஷ்ணு

சமபங்கத்தில் நின்ற கோலத்தில் கிரீட மகுடத்துடன் இவர் காட்சி தருகிறார். நெற்றிப் பட்டம், கண்டசரம், முத்துவடம் பூணூல், தோள்வளை, கைவளை பாதசரம் ஆகியவற்றுடன் கூடிய இவ்வுருவத்தின் செவிகளில் அணிகலன் இல்லை. சங்கு, சக்கர அபயம் கதையின் மேல் வைத்த பாவனை, திருக்கரங்களில் காண்கிறோம். உயரம் 14 செ.மீ. அகலம் 35 செ.மீ. இச்சிலை கி.பி. 11ஆம் நூற்றாண்டு எனலாம்.

17. உமையாள் சிறிய சிற்பம்

நீண்டு மெலிந்த உடல்வாகுடன் கூடிய உமை வலது காலைப் பீடத்தில் ஊன்றி, இடதுகாலை வலப்புறமாக ஒடித்து நிற்பது போல் இச்சிற்பம் உள்ளது. திரிபங்க நிலையில் நிற்கிறார். வழக்கமான அணிகலன்களுடன் இருகரங்களுடன் உள்ளார். மார்பில் கச்சையில்லை. பாதம்வரை ஆடை காட்டப்பட்டது. 19 செ.மீ. உயரமும் 5 செ.மீ. அகலமும் கொண்ட இச்சிலை கி.பி. 13ஆம் நூற்றாண்டு எனலாம்.

18. ஸ்ரீதேவி

சிறிய வடிவில் கூடிய ஸ்ரீதேவியின் தலையில் கேசபந்தம் அழகுடன் உள்ளது. மலரேந்திய இடக்கரமும் லோல முத்திரையாகிய வலக்கரமும் கொண்டு பல அணிகளுடன் உள்ளார். செவிகளில் பத்ரகுண்டலங்கள். மார்பில் கச்சு காட்டப்பட்டுள்ளது. 10 செ.மீ. உயரமும் 2 ½ செ.மீ. அகலமும் கொண்டதாக இச்சிலை உள்ளது.

19. ஆலிங்கன மூர்த்தம்

சந்திரசேகரர் உமையைத் தழுவியபடி உள்ள இம் மூர்த்தத்தில் பெருமானின் மேற்கரங்களில் உடுக்கையும்

திரிசூலமும் கீழ்வலக்கரத்தில் அபயமும் காண்கிறோம் கீழ்இடக்கரம் அம்மையின் தோளை அணைத்தபடி உள்ளது. சிவனது தலையில் பிறையும் ஊமத்தியம் பூவும் உள்ளன. சடாமகுடத்துடன் காட்சிதரும் பெருமானின் நெற்றிப் பட்டமும் செவியில் மகரகுண்டலமும் கழுத்தில் மணிவடமும் உள்ளன. இடப்புறமுள்ள தேவி இருகரங்களுடன் உள்ளார். வலக்கரம் அபயத்தைக் காட்ட இடக்கரத்தை முன்புறம் நீட்டி ஒரு பொருளை ஏந்திய பாவனையில் நேராக நின்ற கோலத்தில் உள்ளார். இவர் சீவி முடித்த கொண்டையுடன் மகுடமின்றி இவர் உள்ளார். திருவாச்சியும் காணப்படுகிறது. 19 செ.மீ. உயரமும் 14 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. பீடத்தின் ஒரு பகுதியில் சிறிய வடிவில் கணபதி உள்ளார். பீடத்தின் முன்புறம் சிறிய நந்தி உருவமும் உள்ளது. திரைலோக்கி என்ற ஊரிலிருக்கிற நுளம்பநாட்டு உமாசகித கல்திருமேனிபோல் சாளுக்கிய நாட்டிலிருந்து இத்திருமேனியைக் கொண்டு வந்திருக்கலாம். தமிழ்நாட்டில் வடித்த சிலையாகத் தெரியவில்லை. இந்த உமா சகித சந்திரசேகரமூர்த்தி கி.பி. 9-10ஆம் நூற்றாண்டவர் எனலாம்.

20. சர்வ சிவபண்டிதர்

சுவாமி அம்மன் சிலைகளுடன் துறவிக் கோலத்தில் ஒரு அடியார் சிலையும் புதையலில் கிடைத்துள்ளது. கோயில் எடுப்பித்த சர்வசிவ பண்டிதரின் உருவமாக இது இருக்கலாம். வலக்கரம் சின்முத்திரையில் அமைய இடக்கரம் சிம்ம கரண முத்திரையில் உள்ளது. மழித்த தலையில் வளர்ந்த சிறு முடிகளுடன் பின் உச்சிக்குடுமியும் காண்கிறோம். அணியின்றித் தொள்ளைக் காதுகளும் அணியற்ற எளிய கழுத்தும் மார்பும் இடுப்பில் கூடிய கோவணமும் இவரைத் துறவியாகக் காட்டுகிறது. நடுத்தர வயதுடன் பொலிவானமுக அமைப்புடன் உள்ளது. இராசேந்திரன் காலச் சிலை என்பதால் காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டாகும்.

21. அடியார் உருவச் சிலை

வணங்கும் நிலையில் வார்க்கப்பெற்ற இவ்வடியார் யார் என்பது தெரியவில்லை. முடிந்த கொண்டையும் வடித்த காதுகளும், உருத்திராட்ச மாலையுடைய கையுமாக உள்ள இவருக்கு ஆடை முழங்கால் வரை உள்ளது. முதிய வடிவில் உள்ள இச்சிலை கி.பி. 15ஆம் நூற்றாண்டு எனலாம்.

22. அஸ்திரதேவர்

பீடத்துடன் செங்குத்தான உருளை வடிவுடன் சூலத்தேவர் சிலை உள்ளது. உயரம் 48 செ.மீ. அகலம் 29 செ.மீ.

சோழர் காலத்தூண் அமைப்பை ஒத்து இடை, கலசம், தாடி, குடம், பத்மம் ஆகிய அமைப்புகள் உள்ளன. தேவரசர் முன்புறம் மலர் முகப்பு அலங்கரிக்கிறது. இதன் காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு எனலாம்.

23. முக்காலி

பூசைப் பாத்திரம் வைப்பதற்கேற்ற முக்காலி ஒன்றும் கிடைத்துள்ளது. உயரம் 24 செ.மீ. மேல் வளையத்தின் குறுக்களவு 16 செ.மீ. வெளிச்சுற்றளவு 50 செ.மீ. இதல் 12ஆம் நூற்றாண்டு எழுத்துகள் உள்ளன. 'ய தரு ஊராம் இடை 50' என்றுள்ளது. முதலில் வரும் ய என்பது எய்தாரில் வரும் எவுடன் தொடர்புப் படுத்தலாம்.

24. செப்புக்குடுவை

பூஜை செய்வதற்காக நீர் அல்லது எண்ணெய் வைத்திருக்கும் குடுவை எனலாம். வட்டமான சிறிய வாயையும் கீழ்ப்புறம் அகன்ற பகுதியையும் கொண்டுள்ளது. கைப்பிடியின் கழுத்துப் புறம் 'உமை அ' என்ற எழுத்துகள் உள்ள உமைக்குரிய பாத்திரமாகவும் அ என்பதை எட்டாகவும் கொள்ளலாம். இனி உமை என்பவர் வழங்கிய குடுவை என்றும் பொருள் காணலாம். சோழர்காலப் பாத்திரமாகும். உயரம் 9 செ.மீ. வாயின்விட்டம் 6 ½ செ.மீ. இதன் சுற்றளவு 34 செ.மீ. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது எனலாம்.

25. மான்பொம்மை

நீண்டகால்களும் அளவான உடல்வாகும் கீழ்நோக்கிய வாலும் மேல்நோக்கிய கொம்புகளும் நிமிர்ந்த காதுகளும் மருண்ட கண்களும் நீண்ட கழுத்தும் கொண்டுள்ள இந்த ஆண்மான் பொம்மை துர்க்கைக்குரியது போலும். 16 செ.மீ. உயரமும் 12 செ.மீ. நீளமும் 5 ½ செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. காலம் கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு எனலாம்.

26. பெரியமுக்காலி

சிம்மமுகக் கால்களுடன் கூடிய இது பெரிதாக உள்ளது. ஒரு கால் உடைந்துள்ளது. உயரம் 20 செ.மீ. வெளிச்சுற்றளவு 65 செ.மீ. சோழர் காலத்தது. கி.பி. 12ஆம் நூற்றாண்டு எனலாம்.

27. துதிக்கை முக்கால்

யானையின் துதிக்கை போன்ற கால்களைக் கொண்ட இம்முக்காலி உயரம் 16 செ.மீ. வெளிச் சுற்றளவு 62 செ.மீ. சோழர் காலத்தது ஆகும்.

28. எண்ணெய்ச்செப்பு

செம்பில் கூடிய இச்செப்பு அழகிய அடிப்பீடத்துடன் உள்ளது. மூக்குடன் கூடிய இச்செம்பு (கூஜா) சோழர் காலத்தது ஆகும். உயரம் 19½ செ.மீ. வாயின் குறுக்களவு 11 செ.மீ. நடுப்பக்கத்தின் சுற்றளவு 53 செ.மீ.

29. பூஜை மணிகள்

பூஜைக்குப் பயன்படும் மாறுபட்ட பிடிகளைக் கொண்ட 4 மணிகள் புதையலில் கிடைத்தன. ஒவ்வொன்றும் அழகிய கொண்டையுடன் உள்ளது. தலைப்பாகத்தில் சூலம், சக்கரம் போன்றவை செதுக்கப்பட்டுள்ளன. இவைகளும் சோழர் காலத்தவையாகும்.

30. பாதக்குறடுகள்

உலோகத்திலான பாதக்குறடுகள் இரண்டு கிடைத்துள்ளன. இறைவனது திருவடிகளை அலங்கரிக்கும் பாதக்குறடுகளையும் வணங்கும் வழக்கம் இருந்துள்ளது போலும். 11 செ.மீ. நீளமும் 5½ செ.மீ. அகலமும் 4 செ.மீ. உயரமும் கொண்ட இவைகளும் சோழர் காலத்தவை எனலாம்.

புதையலில் கிடைத்த ஐம்பொன்சிலைகள் இல்லாமல் பூஜையில் இடம்பெறும் 9 செப்புத்திருமேனிகளும் கோயிலில் உள்ளன.

1. முருகர் திருமேனி

தாமரைப் பீடத்தின் மீது நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் இச்செப்புச் சிலை உள்ளது. மேலிரு கரங்களில் சக்தி வஜ்ரமும் கீழிருகரங்களில் அபய வரதமும் உள்ளன. இவரது வாகன மயில் பீடத்தின் முன்புறமுள்ளது. 29.5.1991இல் வார்க்கப்பட்டது.

2. வள்ளியம்மை

3. தெய்வயானை

இவ்விரண்டும் 22.5.1991இல் செய்யப்பட்டவையாகும்.

4. விநாயகர்

புதையலில் கிடைத்த விநாயகர் சிலைகள் தொன்மை வாய்ந்தவை. ஆயின் வழிபாட்டில் உள்ள விநாயகர் கி.பி. 18-19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. எசாலம் விக்கிநேசுறன் என்ற வாசகம் பீடத்தில் வெட்டப்பட்டுள்ளது.

5. அய்யனார்

எசாலம் ஐய்யனார் எனப் பீடத்தில் எழுதப்பட்ட அய்யனார் சிலை 20ஆம் நூற்றாண்டில் கூடியது.

6. பூரணி

7. புஷ்கலை

இவ்விரண்டும் 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

8. இராமநாத ஈசர் எனப்படும் சந்திரசேகரர்

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இப்பெருமானின் பீடத்தின் முன்புறம் யசாலம் ராமநாத ஈஸ்வரர் என்றவாசகம் உள்ளது.

9. சந்திரசேகர அம்மன்

இதுவும் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். யெசாலம் திருபற சுந்தரி என்ற வாசகம் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

எசாலத்தில் காணப்படும் கற்சிற்பங்கள்

எசலாம் ஊரைச் சுற்றியும் இராமநாதஈஸ்வரர் கோயிலிலும் பல சிற்பங்கள் உள்ளன.

1. திருமால் சிற்பம் 1

இராமநாத ஈஸ்வரர் கோயில் மகாமண்டபத்தில் உள்ள திருமால் சிற்பம் சதுர்புசத்துடன் கூடியது. கிரீட மகுடம் காதுகளில் மகர நெடுங்குழைகள். கழுத்தில் கண்டாபரணம்; கனத்த பூணூல்; கைகளில் தடித்த மூன்று வளையல்கள் ; சிம்மமுக கச்சு இடையை அலங்கரிக்கிறது. பிரயோக சக்கரம் மேல்வலக் கரத்தில் உள்ளது. மேல் இடக்கரத்தில் சங்குள்ளது. கீழ் வலக்கரம் அபயம். கீழ் இடக்கரம் ஊருஹஸ்தம். மார்பில் ஸ்ரீவத்சத்தின் அடையாளம் மறைந்து நிற்கிறது. நீண்ட முகம். மேடான நெற்றி. அகன்ற மூக்கு. இது கி.பி. 8ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது எனலாம்.

2. திருமால் சிற்பம் 2

ஊருக்குத் தெற்கிலுள்ள இலிங்கத்துமேடு என்னும் பகுதியிலிருந்து கொண்டு வந்து வைத்துள்ளனர். தலை உடைந்துள்ளது. 1½ மீட்டர் உயரம். விஷ்ணுவிற்கு ஆடை அணிகலன்களுடன் கூடிய இச்சிற்பம் கி.பி. 9-10 நூற்றாண்டு எனலாம்.

3. துர்க்கை

கோயில் திருச்சுற்று மதிலின் தென்புறம் உள்ளது. காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டாகும்.

அய்யனார்

சிவன் கோயில் திருச்சுற்று மதிலின் தென்புறம் இது உள்ளது. கல்ராயன் என்று ஊரார் கூறுகின்றனர். கிராமத் தெய்வமாக எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் கூறுகிறார். இதன் பீடத்தின் முன்புறம் காலடியில் நாய்க்குட்டியும் வாத்தும் உள்ளன. முற்காலச் சோழரின் காலத்தது எனலாம்.

கோயில் தென்புற கோஷ்ட ஆலமர்செல்வன்

சனகாதி முனிவர் இருவர் பாடம் கேட்கும் நிலையில் அமர்ந்திருக்க ஆலமரத்தடியில் நான்கு கரங்களுடன் தட்சிணாமூர்த்தி உபதேசம் செய்கிறார். தலையை ஜடாபாரம் அலங்கரிக்கிறது. முயலகன் ஆடும் பாம்பைப் பிடித்தபடி உள்ளார். கோயில் எடுத்தபோது உருவாக்கிய சிற்பம் என்பதால் கி.பி. 11ஆம் நூற்றாண்டாகும்.

விஷ்ணு

மேற்கு தேவ கோட்டத்தில் இச்சிற்பம் உள்ளது. நான்கு கரங்கள். கிரீட மகுடம். மகரக்குழைகள் மற்றும் அணி கலன்கள் உள்ளன. இதுவும் கி.பி. 11ஆம் நூற்றாண்டாகும்.

பிரமா

கருவறையின் வடக்கே தேவகோட்டத்தில் உள்ள நான்முகன் சதுர்புசத்துடன் உள்ளார். இவரும் 11ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டவர் எனலாம்.

துர்க்கை

அர்த்த மண்டப் வடபுறகோட்டத்தில் சதுர்புசத்துடன் இவர் உள்ளார். துர்க்கையின் கழுத்தில் மங்கலநாணும் மணிவடமும் முத்தாரமும் சரப்பளியும் சவடியும் உள்ளன. மார்பில் கச்சை உள்ளது. எழில் வாய்ந்த இச்சிற்பம் கி.பி. 11ஆம் நூற்றாண்டாகும்.

விநாயகர்

அர்த்தமண்டபத் தென்புறக் கோட்டத்தில் வெள்ளைக் கல்லில் கூடிய விநாயகர் 4 கரங்களுடன் அழகாகக் காட்சி தருகிறார். பல்வேறு அணிகலன்களுடன் கூடிய இவரும் கி.பி. 11ஆம் நூற்றாண்டவர் எனலாம்.

கோயிலின் விமானத்தில் உள்ள கிரிவக் கோஷ்டங்கள் எழில் வாயந்தவையாகும் தென்புறக் கிரீவக் கோட்டத்தில் வீணாதரத் தட்சிணாமூர்த்தி காட்சிதருகிறார். தென்புறக் கிரீவத்தால் நடராசர் உருவமும் உள்ளது. கோயிலின் மேற்குத் திசையில் கிரீவத்தில் அமர்ந்த விஷ்ணுவும் கோயிலின் மேற்குத் திசையில் யோக நரசிம்மரும் வடக்கில் பிரம்மாவும் கிழக்கில் இந்திரனும் அம்மையப்பனும் அருள்பாலிக்கின்றனர். கோயிலில் உள்ள துவாரபாலகர் சிற்பங்கள் வீரபத்திரர் சிற்பத்துடன் உள்ளன. இவைகளும் கி,பி, 11ஆம் நூற்றாண்டு எனலாம். ஒரே கல்லில் சப்தமாதர் காட்டப்பட்டுள்ளனர்.

இராமீஸ்வரர் கோயில் இராசேந்திர சோழன் காலத்தில் கற்றளியாக எடுக்கப்பட்டது. சதுரவடிவக் கருவறை. அதை யொட்டி அர்த்த மண்டபம், அம்மன் சன்னதி, திருமேனிகள் உள்ள அறை, முகப்பு மண்டபம், திருச்சுற்றுப் பரிவார தெய்வ ஆலயங்கள் ஆகிய கட்டடப் பகுதிகள் உள்ளன. கிழக்கு நோக்கிய வாயில் இடை நாழி, மகாமண்டபம் யாவும் சோழர்காலம். அம்மன் தெற்கு நோக்கியபடி உள்ளார். கேதாரி அம்மன் என்றும் திரிபுர சுந்தரி என்றும் அழைக்கின்றனர்.

மகா மண்டபத்தின் கீழ்த்திசைச் சுவரில் கல் சன்னல் உள்ளது. ஆண்டுதோறும் தை மாதம் பொங்கலன்று சூரியனின் கதிர்கள் இச்சன்னலில் உள்ள துவாரத்தின் மூலம் இலிங்கத்தின் மேல் விழுகிறது. நந்தி மண்டபத்தில் உள்ள நந்தி கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். கோயில் உண்ணாழிகையில் சிவலிங்கம் காட்சிதரக் கோஷ்டங்களில் பல தெய்வ உருவங்கள் உள்ளன.

திராவிட கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றாகக் கோயில் உள்ளது. உப பீடம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி யாவும் கருங்கற்களால் ஆன விமான உறுப்புகளை இங்கே காணலாம். அதிட்டானமும் உபானம், ஜகதி, முப்படைக் குமுதம், கண்டம், பட்டி, கண்டம், பத்மவேதிகை எனப் பல உறுப்புகளையும் பெற்றுள்ளது. சுவர்ப் பகுதியானது கால், உடல், இடைக்கட்டு கலசம், தாடி, குடம், கண்டம், பத்மம், பலகை, வீரகண்டம், போதிகை எனப் பல உறுப்புகளுடன் உள்ளது. தேவகோஷ்டங்கள் மகர தோரணத்துடன் அமைந்தள்ளன. பிரஸ்தரம் என்ற கூரைப்பகுதியில் உத்தரம், கம்பு, பூத்வரி, கபோதம், யாளிவரி எனும் உறுப்புகள் உள்ளன. பூதங்கள் வரிசையாக உள்ளன. கபோதத்தில் பல விதச் சிற்பங்கள் உள்ளன.

எசாலம் கல்வெட்டுகள்

எசாலம் திருவிராமீஸ்வரம் கோயிலில் 12 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முதல் இராசேந்திரன் காலம் தொடங்கி முதலாம் கோப்பெருஞ்சிங்கன் காலம் வரை வெட்டப்பட்ட இக்கல்வெட்டுகள் பல சிதைந்திருந்தாலும் கோயில் எடுப்பித்த சர்வசிவ பண்டிதரையும் ஊர்ப்பெயரையும் கோயிலுக்கு வழங்கப்படட தானங்களையும் அறிந்து கொள்கிறோம்.

முதல் கல்வெட்டு கோயில் கருவறை பிரஸ்தரத்தின் தென்சுவரில் உள்ளது. இராசேந்திர சோழனின் 12ஆவது ஆட்சியாண்டு தைமாதம் ஏழாம் தேதி பரணி அன்று கோயிலுக்கு வழங்கிய தானத்தை இதில் பார்க்கிறோம். 20.01.1024இல் வெட்டப்பட்ட இக்கல்வெட்டு 'திருமன்னி வளர' என்ற இராசேந்திரசோழனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. துறவியான சர்வசிபண்டிதர் எடுப்பித்த திருவிராமீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஸ்ரீ ராஜேந்திரசோழ சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி பெருமக்கள் ஏர்ப்பாக்கத்தில் உள்ள நிலம் ஒன்றை விலைக்கு விற்றது இக்கல்வெட்டில் இடம்பெறுகிறது. இராசேந்திர சதுர்வேதி மங்கலம் தனியூராக மட்டுமின்றி, பிரமதேயமாகவும் இருந்துள்ளது. இராசேந்திர சோழன் எசாலம் செப்பேட்டின்படி கோயிலுக்கும் பிராமணர்களுக்கும் தனித்தனியே இருவேறு காலங்களில் கொடை வழங்கியதை ஈண்டுக் குறிப்பிடவேண்டும். இராசேந்திர சோழனின் 14ஆவது ஆட்சியாண்டின்போது வெட்டிய கல்வெட்டு அபூர்த்தியாக உள்ளது. இதுவும், நிலவிற்பனையை மேற்கொண்ட சபையின் நடவடிக்கையைக் கூறுகிறது. இராசராசவள நாட்டில் செஞ்சி உள்ளடங்கிய சோழேந்திர சிங்கநல்லூரும் மதுராந்தக வளநாட்டில் ஆரியூராகிய வானவன்மாதேவி நல்லூரில் அமைந்த ஊர்ப்பாக்கமும் கூறப்படுகின்றன. ஏர்ப்பாக்கமே ஊர்பாக்கமாக வந்துள்ளது. குலகுருவான சர்வசிவ பண்டிதர் எடுப்பித்த திருவீராமீஸ்வரமுடைய மகாதேவர் கோயில் தினசரி வழிபாட்டுக்காக 35 காசு முதலீடாக வைக்கப்பட்டு அதன் வட்டி கொண்டு செலவிட முடிவெடுக்கப்படுகிறது. மகாசபை கூடியது பற்றி ஒரு கல்வெட்டு கூறுகிறது.

நம் ப்ரம்மஸ்தானம் கங்கைகொண்ட சோழனிலே கூட்டம் குறைவின்றிக் கூடி இருந்து பணிப்பணியால் பணித்து உடையார் ஸ்ரீராஜேந்திரசோழ தேவர் குருக்கள் ஸர்வசிவபண்டிதர் நம்மூர் எதார் திருவிராமீஸவரர்க்குத் திருவமிர்து . . . .தூசி என்பது போல் படைவீரர் என்ற பொருளில் எய்தாரின் ஊர்ப்பெயரே எதார் என்றுள்ளது. எய்+தார்=எய்தார்.

சிவன்கோயில் கருவறை ஜகதியில் இராசேந்திர சோழனுடைய இருபதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு விக்ரம சோழ நல்லூரில் வீச்சுரதிர மூங்கில் நங்கை கோயில் வழிபாட்டுரிமை குறித்து இதில் காண்கிறோம். ஓர் அம்மன் ஈண்டுக் கூறப்படுகிறார். இங்குச் சுட்டப்படும் விக்கிரம சோழ நல்லூர் எசாலம் செப்பேட்டிலும் வருகிறது. விக்கிரம சோழன் என்ற பெயர் முதல் இராசேந்திரனுடையதாகும். மேலும் சப்தமாத்ரிகள் கோயிலும் மாரிப் பிடாரிக்கோயிலும் ஏர்ப்பாக்கத்தில் இருந்ததையும் இதில் காண்கிறோம். மாதவன் அனந்தன் அத்தானியும் இளங்கிடாசானைக் கூத்தனும் வழிபாட்டுக்குத் தானம் தந்ததுடன் குருவின் ஆணைக்கிணங்க இராச ராச சதுர்வேதி மங்கலமான எய்தார் திருவிராமீஸ்வரமுடையார் கோயிலில் கல்வெட்டு வெட்டவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

எய்தாரில் வசித்த முத்தரை ஆடவல்லானின் தாய் திருவிராமீஸ்வரம் பிச்சை என்ற பெண் கோயிலில் மூன்று நந்தாவிளக்குகள் எரிக்க முதலீடு அளித்துள்ளாள். நான்கு காசுகளைக் கோயில் சிவபிராமணன் திருவாரைப் பிரியனிடம் இவள் அளித்துள்ளாள். இராசேந்திர சோழனுடைய 24ஆவது ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இதுவும் முன்கூறிய ஜகதியிலேயே உள்ளது.

இராசேந்திர சோழனுடைய 30ஆவது ஆட்சியாண்டின் போது வெட்டப்பட்ட ஒரு கல்வெட்டும் கருவறைச் சுவரின் கிழக்கு ஜகதியில் உள்ளது. இதில் இருகொடைகள் இடம் பெற்றுள்ளன. ஆர்யன் தேவதாசப்பட்டன் என்பவன் கோயிலில் அரை விளக்கு எரிக்க 3 மாநிலத்தைக் கோயில் சிவபிராமணரிடம் அளித்துள்ளான். கோயில் தேவரடியார் நக்கிராயன் நக்கடி என்பவள் கோயிலுக்குப் பாலபிஷேகத்திற்காக நான்கு பசுக்களை வழங்கியுள்ளாள். இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி மட்டும் உள்ள சிதைந்த கல்வெட்டு கருவறையின் தென் புறச் சுவரில் உள்ளது.

கோயில் முகமண்டபத்தின் வாயில் தென்புறச்சுவரில் இராசாதிராசனுடைய 30ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'திங்களேர்தரு' என்ற மெய்க்கீர்த்தியுடன் காணப்படுகிறது. மன்னன் நலம் வேண்டித் திருவிராமீஸ்வரமுடையார் கோயிலில் தேவரடியார் ஒருவர் 10 கழஞ்சு பொன்னை முதலீடாக வைத்து நந்தாவிளக்கு எரிக்க ஏற்பாடு செய்கிறான். கோயில் சிவபிராமணர்கள் முதலீட்டினைப் பெற்றுக் கொள்கிறார்கள். கோயில் கருவறைக் கிழக்குச் சுவரில் திங்களேர்தரு என்ற மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி மட்டும் சிதைந்த நிலையில் உள்ளது.

கோயில் முக மண்டபத்தின் பிரஸ்தரப் பகுதியில் உள்ள சுவரில் **புகழ் சூழ்ந்த புணரி** என்ற மெய்க்கீர்த்தியுடன் கூடிய முதல் குலோத்துங்கனின் 10ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது. திருவிராமீஸ்வரமுடையார் கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிக்க 32 பசுக்களை இரு நபர்கள் அளித்தனர் என்று இக்கல்வெட்டு கூறுகிறது. தானம் தந்தவர்களின் பெயர்கள் சிதைந்து விட்டன. இராசேந்திர சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டு இராசராச சதுர்வேதி மங்கலம் என ஊர்ப்பெயர் கூறப்பட்டுள்ளது. அம்மன் கோயில் கருவறை வடபுறச் சுவரில் முதல் குலோத்துங்கனின் 13ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது.

சோமதேவபட்டனின் மனைவி பெரிய நங்கை சானி என்ற பிராமணப் பெண் 120 கலம் நெல்லும் 6 காசும் கோயில் சிவபிராமணரிடம் அளித்துத் திருவமிர்து விளக்கெரிக்கவும் ஏற்பாடு செய்கிறாள். இவளே 4 காசுகளை அளித்து அனந்த மூர்த்தியாகிய உற்சவரை அலங்கரித்துத் தூயதாக்கித் திருவிரா மீஸ்வரமுடையார் கோயிலில் சுற்றிவர ஏற்பாடு செய்துள்ளாள்.

அம்மன்கோயில் கருவறை அதிட்டானத்தில் உள்ள குமுதம் மற்றும் ஜகதியில் இரண்டாம் இராசராசனுடைய 11ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. **பூமருவிய திருமாதும் புவிமாதும்** என்று தொடங்கும் இக்கல்வெட்டு, அரசாணையைக் கோயிலுக்கு அனுப்பிய விவரத்தைக் கூறுகிறது. உய்யக்கொண்டான் **பஞ்சந்தி வாணன்** மற்றும் அவனுடைய சந்ததியினர்க்குச் சன்மக்காணியாக நிலம் அளித்த விவரமும் வாஞ்சனூர் என்ற ஊர் இராசராச வாஞ்சியூராக மாற்றப்பட்ட விவரத்தையும் இது குறிப்பிடுகிறது. அதிகாரிகளின் பெயர்களும் உள்ளன. இராசராச வளநாட்டுப் பனையூர் நாட்டு எய்தார் திருவிராமீஸ்வரமுடையார் கோயில் தானத்தார்க்கு வந்த திருமுகத்தில் வாஞ்சியூரில் வழங்கிய

நிலக்கொடை இடம் பெறுகிறது. அருமொழி தேவ வளநாட்டுப் புலியூர் நாட்டு வாஞ்சியூர் என இவ்வூர் கூறப்பட்டுள்ளது. பஞ்சந்தி வாணன் சோழராட்சியில் தொண்டைமண்டலத்தின் உயரதிகாரியாக இருந்தவன். இவனுடைய சந்ததியினர் குறித்த பலகல்வெட்டுகள் தொண்டை மண்டலத்தில் காணப்படுகின்றன.

கோயில் கருவறை பிரஸ்தரப் பகுதியின் தென் புறச்சுவரில் கோப்பெருஞ்சிங்கனின் 11ஆவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. கோயிலுக்கு நெல் தானம் அளித்த விவரம் இதில் உள்ளது.

துணை நூல்கள்

1. எசாலம் செப்பேடுகள் தொடர்பாக இரா. நாகசாமி எழுதிய ஆங்கில நூல் Archaeological Finds in South India - Esalam Bronzes and Copper Plates, p.5, 1987.Bulletion De 1 Ecole Francaise Tome LXXVI.

2. எசாலம் செப்பேடுகள் தொடர்பாகக் கீழக் கண்ட ஆங்கில நூலில் ஒரு கட்டுரையை நடன. காசிநாதன் எழுதியுள்ளார் Collected Papers Studies in Tamil Culture pp 1-38. 1944 மற்றும் கல்வெட்டு காலாண்டிதழ்கள் 37, 38 ஆங்கிலக் கட்டுரை தமிழ் மூலத்துடன் கூடியது.

3. எசாலம் வரலாற்றுப் புதையல் மா. சந்திரமூர்த்தி மற்றும் ச. கிருஷ்ணமூர்த்தி. செப்பேடுகள் பகுதியை இந்நூல் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ளார். சேகர்பதிப்பகம், சென்னை, 1990.

4. தமிழ் நாட்டுச் செப்பேடுகள் முதல் தொகுதி- சோழர் செப்பேடுகள் கட்டுரையில் எசாலம் செப்பேடுகள் பக். 337 முதல் 362 வரை ச. கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ளார், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2002.

5. வே. மகாதேவன் மற்றும் சங்கர நாராயணன் இருவரும் எழுதிய எசாலம் செப்பேடுகள் தட்டெழுத்துப் பிரதி.

6. கபிலைக் கதை ஓலைச்சுவடி தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளது.

7. வரலாற்றில் வல்லம், ச. கிருஷ்ணமூர்த்தி, சேகர் பதிப்பகம், சென்னை, 1995.

8. தொல்லியல் நோக்கில் காஞ்சிபுர மாவட்டம், ச. கிருஷ்ணமூர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம், 2010.

9. கல்லெழுத்துக்கலை, நடன. காசிநாதன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.

10. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட வரலாறு, கு. தாமோதரன் தொல்லியல்துறை, சென்னை.

11. கல்வெட்டுத் தொகுதிகள் மற்றும் கல்வெட்டு ஆண்டறிக்கைகள், S.I.I. Vol. and A.R.E. A.S.I. Mysore.


எசாலம் இருப்பிடமும்
சுற்றுப்புற ஊர்களும்
வடக்கு
செஞ்சி
அப்பம்பட்டு
பாலப்பட்டு
நேமூர்
எசாலம்
கஞ்சனூர்
அசோகபுரி
சூரப்பட்டு
திருவண்ணாமலை சாலை
புதுவை சாலை
விழுப்புரம்
தெற்கு
மேற்கு
கிழக்கு
அனந்தபுரம்
பேரணி
பெரியதச்சூர்



பதினைந்து தகடுகள்கொண்ட எசாலம் செப்பேடு
(இராசேந்திர சோழன்) கி.பி. பதினோராம் நூற்றாண்டு.

செப்பேட்டு வளையத்தின் முகப்பிலுள்ள
ராஜமுத்திரை,

புலி இரு மீன்கள் வில் பன்றி ஸ்வஸ்திகம் சாமரம் குடை சக்கரம் கூடிய சோழமுத்திரை. விளிம்பில் சிரந்த எழுத்தில் வடமொழி வாசகம்.

இராஜேந்திரனின் அறக் கொடை செய்தியைக்
கொண்ட தமிழ்ச் செப்பேடு.

இராஜகுரு சர்வசிவ பண்டிதர் (பக். 267



உள்மண்டபத் தூண். எசாலம்


எசாலம் இராமீஸ்வரர் • கோயில்
கிழக்கிலிருந்து
கோயிலின் மேற்புறத் தோற்றம்
உரைப்பகுதி (பிரஸ்தரம்)
உத்திரம்
போதிகை
வீரகண்டம்
பலகை
பத்மம்
குடம்
தாடி
கலசம்
இடை
வாயில் முகப்பு மண்டபம் (தெற்கு)
கால் (பாதம்)
கல்சன்னல்
வடக்கு
வேதிகை
கண்டம்
மகாபட்டிகை
கண்டம்
முப்படைக் குமுதம்
ஜகதி
கிழக்கு



பைரவமூர்த்தி (பக். 240)
ஆடும் ஆளுடைப் பிள்ளை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு	50.00
தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	550.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
நவீன நாடகங்களும் ஊடகங்களும்	50.00
மொழிபெயர்ப்பு ஒரு கவின் கலை	75.00

---

673 இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் 55.00